திருப்புக்கோளி மாலை

சுவடியியல் பட்ட மேற்படிப்புச் சான்றிதழுக்காக
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அளிக்கப் பெற்ற
பதிப்பாய்வேடு

தா. நாகம்மாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.
ஏப்ரல் 1988

திருப்புக்கோளி மாலை

சுவடியியல் பட்ட மேற்படிப்புச் சான்றிதழுக்காக
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு அளிக்கப் பெற்ற
பதிப்பாய்வேடு

தா. நாகம்மாள்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113.
ஏப்ரல் 1988

தா. நாகம்மா, பி.ஏ.,
சுவடியியல் மாணவி
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113.

ஆய்வாளர் உறுதிமொழி

'புகழ்கொளி மாலை' என்னும் பதிப்பு ஆய்வேடு சுவடியியல் பட்ட மேற்படிப்புச் சான்றிதழுக்காக உருவாக்கப்பெற்றது. இவ் ஆய்வேடு என் சுய முயற்சியால் உருவாக்கப்பெற்றது எனவும், இதற்கு முன் வேறு எந்தப் பதிப்பு ஆய்வுப் பட்டத்திற்கும் இப்பதிப்பு ஆய்வு அளிக்கப்பெறவில்லை எனவும் உறுதி கூறுகிறேன்.

சென்னை 600 113.
நாள்: 16-5-1988

தா. நாகம்மா
(தா. நாகம்மா)

டாக்டர் பூ. சுப்பிரமணியம்
சுவடி இயல் துறை
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

'திருப்புக்கொளி மாலை' எனும் இச்சுவடிப் பதிப்பாய்வு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் 1987-88ஆம் ஆண்டிற்கான சுவடி இயல் பட்டயச் சான்றிதழ்த் தேர்வுக்காகச் செல்வி தா. நாகம்மா, பி.ஏ., அவர்களால் உருவாக்கப்பெற்றது என்றும், இந்த ஆய்விற்கு இவருக்கு வேறு எந்தப் பட்டமும் அளிக்கப்பெறவில்லை என்றும் சான்று வழங்குகிறேன்.

சென்னை - 600 113
நாள்: 16.5.88

16.5.88.
மேற்பார்வையாளர்.
டாக்டர் பூ. சுப்பிரமணியம்,
சுவடி இயல் துறை,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை-600 113.

ந ன் றி யு ரை

சுவடியியல் வகுப்பில் சேர்ந்து பயில வாய்ப்பளித்து உதவியவர் முன்னாள் இயக்குநர் டாக்டர் ஏ.என். பெருமாள் அவர்கள்,

இந்நிறுவனத்தின் இயக்குநராக மட்டுமன்றி, சுவடிப் பதிப்பிக்க எழுத்து, தமிழ்மொழி வரலாறு போன்ற பாடங்களை ஆய்வு நோக்கில் பயிற்றுவித்துத் தந்தவர் டாக்டர் க.த. திருநாவுக்கரசு அவர்கள்,

சுவடி எழுதவும் படிக்கவும் பயிற்சி கொடுத்து ஆய்வுக்கு அனைத்து வகையிலும் இறுதிவரையில் உதவி புரிந்தவர் டாக்டர் பூ. சுப்பிரமணியம் அவர்கள்,

இலக்கணத்தில் யாப்பு பற்றி விளக்கியவர் டாக்டர் சி. சசிவல்லி அவர்கள்,

பாட்டியலைப் பற்றி விளக்கி உதவிபுரிந்தவர் டாக்டர் அன்னி தாமசு அவர்கள்,

ஆய்வு நெறிமுறைகளை விளக்கிக் கூறியவர் டாக்டர் ச. சிவகாமி அவர்கள்,

சுவடிப் பதிப்புக்கு உரிய நூல்களை வழங்கியவர்கள் நூலகக் காப்பாளர்கள் திருமதி அ. யோகம், திருமதி இரா. பார்வதி ஆகியோர்,

இப்பதிப்பாய்வேட்டைத் தவறுகள் இன்றித் தட்டச்சு செய்து கொடுத்தவ திரு. வி. வாசுதேவன் அவர்கள்,

இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றி என்றும் உரித்தாகுக!

தா. நாகம்மா.

*****

பதிப்புரை

சுவடிப் பதிப்பு நுட்பமானது. ஒரு குறிப்பிட்ட கலை, இலக்கியம் பதிப்பிக்க அச்சுவடிகளைச் சேகரிக்க வேண்டும்.

இங்குப் 'புக்கொளி மாலை' என்னும் நூல் பதிப்பிக்கப்படுகிறது. இவ் இலக்கியம் சுவடியில் எழுதிய இலக்கியமாக இருக்கிறது. இது, 'மாலை' வடிவத்தில் அமைந்துள்ளது. இப்பாடல் பக்தி நெறியைப் பற்றிக் கூறுவதாக அமைந்துள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசித் திருத்தலத்தில் கோயில் கொண்டிருக்கும் 'கருணை நாயகி'யின் பேரில் அமைந்த மாலை இலக்கியமாகும். இதில் தலச்சிறப்பும், இறைவன், இறைவியின் பெருமையும், பக்தர்களுக்கு அருளும் பண்பும் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் கூறப்பட்டுள்ள கதைகள் பெரும்பாலும் புராணக்கதைகளே. புராணங்களில் இடம்பெறும் பல செய்திகள் தொகுத்துத் தனி இலக்கியமாகச் சுவடியில் எழுதியுள்ளனர். சென்னை கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பாதுகாக்கப்பெற்று வரும் இச்சுவடியில் இடம்-பெற்றுள்ள இந்நூல் சுவடி, பாடல் அமைப்பின் சொற்கள் மூலம் தமிழரின் பக்தி நெறியை விளக்கும் மாலை இலக்கியமாக அமைந்துள்ளது. இச்சுவடி முழுமை-யாகக் கிடைக்கவில்லை. ஒவ்வொரு பாடலின் இறுதி அடியும் "புக்கொளிப் பதியில் வளர்பெருங் கருணை நாயகியே" என முடிவதாக அமைந்துள்ளது. எனவே இதனை மாலை இலக்கியமாகக் கொண்டனர்.

சுவடியில் செய்தி

சுவடியின் தலைப்பு 'புக்கொளி மாலை' என்பதாகும். தனிச்சுவடியாக இருக்கவில்லை. ஒரே கூட்டமைப்பில் "புக்கொளி மாலை", "அரகரா சனீசுவ மாலை", "ஞான மாலை" என்ற தலைப்புகளில் அமைந்துள்ளன. இவற்றில் மற்றவை இரண்டும் வெவ்வேறு கடவுளர்மீது பாடப்பட்டவையாகும். ஆனால் அவையும் பக்தி இலக்கிய மாலை இனமே கூறும். 'புக்கொளி மாலை' கருணாம்பிகை நாயகிமீது பாடப்பட்டதாகும். எனவே, மற்றவற்றை இதனோடு

தொடர்புபடுத்தவில்லை. எனினும் ஒரே சுவடியில் எழுதப்பட்டுள்ளன. இவை மூன்று நூல்களையும் படி எடுத்தவர் ஒருவரே.

சுவடியின் அமைப்பு

'புக்கொளி மாலை' என்ற இச்சுவடியில் இருபத்திரண்டு ஏடுகள் (22 உள்ளன. இச்சுவடியின் நீளம் 49.2 செ.மீ. அகலம் 2.4 செ.மீ. ஆகும். இது ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது. இதனுடன் வேற்று ஓலைகளும் இணைந்து ஒரே சுவடியாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

சுவடியில் இருந்து பதிப்பித்தவை

சுவடியல் இருந்து 'புக்கொளி மாலை' என்ற பாடல்கள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆதலால் பதிப்பில் தனிவடிவம் கொடுக்கப்பட்டுள்ளன. இச்சுவடியல் இடம்பெறும். 'அரகரா சனீசுவர மாலை', 'ஞான மாலை' வெவ்வேறு கடவுள்மீது பாடப்பட்டவை. ஆதலால் இப்பதிப்பில் அவைகள் தவிர்க்கப்பட்டுள்ளன.

நூல் அமைப்பு

நூலமைப்பு அறிவியலுக்கு அப்பாற்பட்டது. நூலிலுள்ள இலக்கிய அமைப்புக் கலையின் பாற்பட்டது. இந்நூல் முழுவதும் மாலை இலக்கியக் கூறுகளைக் கொண்டது. பாடலின் தலைப்பிலேயே 'புக்கொளி மாலை' என மாலைப் பெயர் வருவதைக் காணலாம். மாலை இலக்கியம் 30 பாடல்களி-லிருந்து 100 பாடல்கள் வரை அமையும். 'புக்கொளி மாலை' என்ற இந்-நூலில் எண்பத்தெட்டு பாடல்களே கிடைத்துள்ளன. தொண்ணூறு அல்லது நூறு பாடல்களைக் கொண்டதாக இருக்கலாம் என நினைக்கத் தோன்றுகிறது. நூல் தொடக்கத்தில் சுவடியின் பெயர் 'புக்குளி மாலை' என உள்ளது. அச்சில் 'திருப்புக்குழி' எனத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. பதிப்பில் 'புக்கொளி மாலை' எனப் பெயர் திருத்தம் செ[illegible]ர்பனன். ஒவ்வொரு பாடலின் இறுதி அடியும் "புக்கொளிப் பதியில் வளர்பெருங் கருணை நாயகியே" என [illegible]

ஓலையின் காலம்

ஓலையின் காலம் சுவடியில் குறிப்பிடப்படவில்லை. பாடல்களின் தொடர்களிலும் இச்செய்தி வெளிப்படவில்லை. இதில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் அவிநாசித் திருத்தலத்தில் புக்கொளிப் பதியில் கோயில் கொண்டிருக்கும் கருணை நாயகிமீது பாடப்பட்ட மாலை ஆகும். இதனை இயற்றிய ஆசிரியர் அம்மையின் சிறப்பைச் சொல்லும் போதெல்லாம் சிவ-பெருமானின் சிறப்பையும் சொல்லத் தவறவில்லை. எனவே, இந்நூல் ஒரு சைவரால் எழுதப்பட்டிருக்கலாம் என எண்ண இடமளிக்கிறது. சிதைந்த சுவடியில் இருந்து படியெடுக்கப்பெற்றதாகவும் இருக்கலாம். சுவடி காலத்தால் பிந்தியது. பாடல் காலத்தால் முந்தியதாகத் தெரிகிறது.

ஆசிரியர்

'புக்கொளி மாலை'யை எழுதிய ஆசிரியர் யாரென அறிய முடியவில்லை இதனோடுகூட ஒரே ஏடாக இருந்த 'அரகரா சனீசுவர மாலை', 'ஞான மாலை' ஆகியவற்றிலும் ஆசிரியர் பெயர் குளிப்பிடப்படவில்லை. எப்பிரதியிலிருந் எழுதப்பெற்றது என்பதோ யார் பாடியது என்பதோ இடம்பெறவில்லை. பாடல் தொடரிலும் ஆசிரியர் பெயர் இடம்பெறவில்லை. பாடலின் தொடக்கத்தில் உறாிஓம்! நன்றாக! குரு வாழ்க! என்ற தொடர்களைக் குறிப்பிட்டு எழுதப்-பட்டுள்ளதால் இதன் ஆசிரியர் ஒரு வைணவராகவும், குரு பக்தராகவும் இருக்-கலாம் எனத் தோன்றுகிறது.

பாடல் அமைப்பு

இந்தச் சுவடியில் உரைநடை அமைப்பு இல்லை. பாடல்கள் தனித்தனிப் பாடலாக அமைந்துள்ளன. காப்புப் பாடலும் இடம்பெறவில்லை. ஆனால் ஒவ்வொரு பாடலின் இறுதி அடியிலும் "புக்கொளிப் பதியில் வளர்பெருங் கருணை நாயகியே" என முடிக்கப்பட்டுள்ளது. நேரடியாகவும், மறைமுகமாகவும் ஒரே தொடரில் சொல்லில் செய்தியை விளக்கும் புராணக்கதைகள் இடம்பெற்றுள்ளன.

ஓலையில் ஒரு பக்கத்தை இரண்டாகப் பகுத்துப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளன. ஏட்டில் ஒரு பகுதியில் நான்கு வரிகள் வீதம் இருபகுதிகளிலும் 8 வரிகளாக ஒரு ஏட்டில் பதினாறு (16) வரிகள் அமைந்துள்ளன. எண்பத்தெட்டாவது பாடல் வரைக்கும் தான் சுவடியில் காணப்படுகிறது. மற்றவை சிதைந்திருக்கலாம் அல்லது தொலைந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

எழுத்து வடிவம்

சுவடியில் ட்டு, த்து, ன்னி, ச்சி, த்த, ப்பி, ற்றா, ப்பா, க்கீ, க்க, ண்ணி, ற்று, ட்ட, ல்ல, ற்றி, ன்னை போன்ற இரட்டை எழுத்துக்கள் கூட்டெழுத்து வடிவில் எழுதப்பட்டுள்ளன. இதை உயித்துணர்ந்து பொருள் மாறாமல் பதிப்பிப்பது சிறப்பானதாக அமைகிறது.

"சதாசிவன் வலப்பிறம் பெற்றாய்" - 1

"அத்திக்க வாரண வாசி" - 3

"உத்தமன் வந்து தென்பாகம்" - 4

"திருடறைக் கூறச் சிவன் சபித்துப்பால்" - 5

"தாட்டடந் தன்னை நினைந்தின முருகித்" - 18

"இரந்தினிக் கொருவர் முகமது பாத்து" - 20

"கச்சி காமாச்சி நீயாகி" - 25

"யோசைசே ரருணை உண்ணாமுலைச் செல்வி" - 25

"ஆரணி கன்னி வீரிகங் காளி" - 28

"அல்லவை தேய்வ அறமது பெருக" - 33

"நல்லவை வருக பொல்லவை யகல" - 33

"உப்பது பொதிந்த உடலது தனிலே" - 37

"உன்னிட நிலமை கன்னியென் றுரைக்கும்" - 45

"நோக்க மிலாது அறிவமென் றழைக்க" - 48

"ஏக்கமாய் வாணி இசைகள் கைவிட" - 48

[illegible]

பேச்சு மொழிச் சொற்கள்

இப்பாடல்கள் பேச்சு மொழி அல்லது திசைச் சொற்கள் நிறைந்து காணப்படுகின்றன.

ள, ழ வேறுபாடு

	சுவடியில் உள்ளவை		திருத்தம் பெற்றவை
1.	புக்குழி	–	புக்கொளி
2.	புகருமித்	–	புகழுமித்
3.	எளுத்துமாய்	–	எழுத்துமாய்
4.	முகிள்ந்து	–	முகிழ்ந்து
5.	மூவேளு	–	மூவேழு
6.	வாள்கயிலாய	–	வாழ்கயிலாய
7.	மகிள்ந்து	–	மகிழ்ந்து
8.	அருகனி	–	அழுகனி
9.	மொளியை	–	மொழியை
10.	தமிள்ப்	–	தமிழ்ப்.

ர, ற வேறுபாடு

1.	உயிற்க்குயிற்த்	–	உயிர்க்குயிர்த்
2.	அற்ச்சனை	–	அர்ச்சனை
3.	யருத்றும்	–	யறுத்தும்
4.	மிருக்கஸ்டன்	–	மிருகஸ்டன்
5.	மாற்க்கண்டன்	–	மார்க்கண்டன்
6.	தேவற்க்கள்	–	தேவர்கள்
7.	நகறாம்	–	நகராம்
8.	[illegible]		[illegible]
9.	காறனியாய்	–	காரனியாய்

பிற வேறுபாடுகள்

1.	வெகிளியல்	–	வெகுளியல்
2.	ராவணன்	–	இராவணன்
3.	பாத்தவள்	–	பார்த்தவள்
4.	மீங்கொண்	–	மீட்கொண்
5.	ஆசணம்	–	ஆசனம்
6.	தற்ப்பரா	–	தற்பரா
7.	காற்றிடும்	–	காத்திடும்
8.	தெண்டிரை	–	தென்டிரை
9.	பய நிலைத்	–	பயனிலைத்
10.	திருவிளம்	–	திருவுளம்
11.	மஞ்சலைப்	–	மஞ்சளைப்
12.	மினிக்கி	–	மினுக்கி

இவ்வாறு பேச்சு வழக்குச் சொற்கள் பாடல் முழுவதும் உள்ளன. இவை திருத்தம் செய்து பதிப்பிக்கப்பட்டுள்ளன. சுவடியில் எழுத்துக்கள் புள்ளியின்றி காணப்படுகின்றன. மேலும் இரட்டைக் கொம்பு (ே) வருகிற இடங்களிலும் ஒற்றைக் கொம்பே (ெ) போடப்பட்டுள்ளன. அவை அனைத்தும் திருத்தம் செய்யப்பட்டு பதிப்பிக்கப்பட்டுள்ளன.

மூல ஏடா?

மூல பாடம் என்பது ஆசிரியர் எழுதிய மூல ஏட்டின் பாடம் ஆகும். மூல ஏடு கிடைக்கவில்லை எனின், ஆய்ந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுவடியை மூல ஏடாகக் கருதிப் பதிப்பித்தல் மரபாக உள்ளது. புக்கொளி மாலை என்ற சுவடி மூல ஏடா, அன்மை ஏடா, வழி ஏடா என் ஆராய்ந்ததில் இது மூல ஏடு அன்று என அறியமுடிகிறது.

1. இச்சுவடியில் ஓலை நன்றாக இருக்கிறது.
2. இதில் புக்கொளி மாலை என்ற பாடல் மட்டுமன்றி அரகரா சங்கர மாலை, ஞான மாலை போன்ற பாடல்கள் ஒரே சுவடியில் இருக்கின்றன.
3. இதில் காப்புப் பாடல் எனத் தனியாகப் பாடல் அமையவில்லை.
4. இச்சுவடியில் மிகுந்த பிழைகள் இருக்கின்றன. பாடலில் எழுத்து மிகை, குறைகள் காணப்படுகின்றன. எனவே இது மூல ஏடு அல்ல எனத் தெரிகிறது எனக் கொள்ள முடிகிறது.

வடிவ வேறுபாடு

பாடலின் பேச்சு மொழித் திருத்தமே வடிவ வேறுபாடு. இதில் சொல்லின் பொருள் மாறுபடுவதில்லை. எழுத்துக்களால் திருத்தமடைந்து விகுதி, உரு முதலியவற்றால் மாறுபடுபவை வடிவ வேறுபாடு. இவை சுவடிப்பதிப்பில் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

சுவடி : சீருறு மங்கை பராபர வனுதை (1)

திருத்தம்: சீருறு மங்கை பராபர வனிதை

சு.: பெருகநீ உழபுது செவித்து (1)

தி.: பெருகநீ உருவது செபித்து

சு.: சென்மலர் முதலை வந்தித்தேன் (2)

தி.: சின்மலர் முதலைவந் தித்தேன்

சு.: அச்சிக்க வாரண வாசி (3)

தி.: அர்ச்சிக்க வாரண வாசி

சு.: நழினமாந் தேவர் மறபர்சூள்ந்துறு (4)

தி.: நளினமாந் தேவர் மறபர் சூழ்ந்துறு

சு.: வாள்கயி லாய மருள்செய் புக்குழியில் (8)

தி.: வாழ்கயி லாய மருள்செய் புக்கொளியில்

சு.: வெகினியன் செய்த பிளையெலாம் பொருத்த (15)

தி.: வெகுளியன் செய்த பிழையெலாம் பொறுத்த

பாடவேறுபாடு

பாடல் தொடரில் பொருள் மாற்றம் காண்பது பாட வேறுபாடு. இவை வழக்காற்றில் காலத்திற்குக் காலம் மாறி அமைந்துவிட்ட முறையாகும்.

அந்தநாட் டிலங்கை ராவணன் பாட்டி

அந்தநாட் டிலங்கை இராவணன் பாட்டின்

நாள்செலு மளவில் திராவ தேச

நாள்செலு மளவில் திராவிட தேச

சபைதனில் திருபவு னாசி

சபைதனில் திருவவி னாசி

* * *

திருப்புக்கொளி மாலை

மாலை

மலர்களால் தொடுக்கப்பட்டதை 'மாலை' என்கிறோம். மாலையில் பலவகை உண்டு. கழுத்தில் போடுகின்ற மாலை மார்பிலே தொங்கும். தொங்குகின்ற இடத்தில் ஒரு குஞ்சத்தைக் கட்டி இருப்பார்கள். மார்பில் அணியும் மாலையைத் 'தார்' என்பார்கள். தலையிலே போடுவதற்குரிய மாலை வட்டவடிவமாக இருக்கும். அதற்கு 'இண்டை' என்று பெயர்.

மாலை கட்டுவதற்கு இரண்டு பொருள்கள் மிகவும் அவசியம். ஒன்று மலர், மற்றொன்று நார். சொற்கள் மலர்களாகின்றன. அவற்றை இங்கே எந்த நாரைக் கொண்டு தொடுப்பது? எல்லா மலர்களுக்கும் ஊடே சென்று எல்லாவற்றையும் ஒன்றுபடுத்திக் கட்டும் நாராக அது இருக்க வேண்டும்.

பல்வேறு வகை மலர்களை ஒருங்கு சேர்த்து இணைக்கும் மாலையைப் போல 'மாலை' என்னும் சொல் முடிவைப் பெற்ற இவ் இலக்கிய வகை பல்வகைப் பொருண்மை, பல்வகை யாப்பு, பல்வகைப் பாடல் ஆகியவற்றுடன் இணைந்து அமைந்துள்ளமையால் 'மாலை' என்னும் பெயர் பெற்று விளங்குகிறது. வரிசையாக மலர்களைப்போல பாவும் தொடுக்கப்பட்ட நிலையில் 'பூமாலை' போன்றே 'பாமாலை'யும் உருவாயிற்று. ஏதேனும் ஒரு பொருள் பற்றித் தொடர்ந்து அமைந்தபோது அவற்றிற்கு மாலை என்ற பெயர் வழங்கப்பட்டது. மலர்களால் தொடுக்கப்பட்ட பூந்தொடையைக் குறிக்கும் நிலையில் இச்சொல்லின் பயிற்சி சங்ககாலப் பாக்களில் அமைகிறது.

பாட்டியல்கள் பொருள், யாப்பமைப்பு, எண்ணிக்கை போன்ற பல அடிப்படைகள் அமைந்த மாலை வகைகள் பலவற்றைத் தருகின்றன. பொருளாலும், வடிவாலும் வேறுபடுமிவை 'மாலை' என்ற பெயர் நிலையில் ஒரு கூறு ஒப்புமை காட்டி நிற்கின்றன

நாமமாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சி மாலை, தாரகை மாலை, செந்தமிழ் மாலை, அங்கமாலை, தானை மாலை, அநுராக மாலை, போன்ற பல பொருள்நிலை மாலைகள் அமைகின்றன. மேலும் புறத்திணையின் அடிப்படையில் எழுந்த வெட்சிமாலை, கரந்தை மாலை, வஞ்சி மாலை, வாகை மாலை போன்ற பொருள் நிலையின போர் புரிவோர் சூடிய மலர் மாலை காரணமாக மாலை என்ற பெயர் பெற்றன. வெண்பூமாலைச்சி, வஞ்சி மாலை போன்றன யாப்பால் பெயர் பெற்றன. பல்வகை யாப்பு விரவும் நிலையில் இணை மணிமாலை, இரட்டைமணி மாலை, நவமணி மாலை போன்ற வகைகள் உருவாகியுள்ளன. பல்சந்தமாலை, கலம்பகமாலை, வருக்க மாலை போன்றன ஒரு குறிப்பிட்ட அமைப்பு காரணமாகத் தனி வகையாக உருவாகி உள்ளன.

ஒரு மாலை நூலின் பாடல்களனைத்தும் ஒன்றுபோல முடிதல் எனும் பெரும்பான்மைப் பொதுத்தன்மை இங்கு நினைவுகூறத் தக்கது. ஒரு பொருளைப் பற்றிய பல பாடல்கள், ஒரு வரியயற்றிய பல பாடல்கள், ஒரு தலைமை குறித்த பல பாடல்கள் மாலை எனப் பொதுமை பெறுகின்றன.

எண்ணால் பெயர் பெறும் மாலைகளைப் பற்றியும் பாட்டியல்கள் கூறு- கின்றன. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றினை தனிப்பொருண்மையாக்கி வெண்பா அல்லது கலித்துறையில் 30, 40, 70, 90, 100 செய்யுட்கள் வரும்போது அவை பொருளால் மட்டுமன்றி எண்ணாலும் பெயர் பெறும் நிலை இங்கு குறிப்பிடத் தக்கது.

பாட்டியல் கூறும் இப்பல்வகை போன்றே தமிழ் இலக்கியங்களை நோக்கு போது பல்வகை மாலைகள் அமைவது தெரிகின்றது. இடமாலைகள், இறைவர் பேரில் மாலைகள், அடியவர், தலைவர் பேரில் மாலைகள் எனப் பக்தி மாலை யும், புகழ்மாலையும் மிகுதியாகவுள்ளன. அல்லி அரசாணி மாலை, புலேந்திரன் களவு மாலை போன்று கதை கூறும் மாலைகளும் மக்கள் இலக்கிய நிலையில் காணக் கிடைக்கின்றன. மாலை இலக்கியத்துடன் அணிச்சிறப்பும், இறைக்கலிகையு

கலந்து வெளிப்பட்ட நிலையில் சிலேடை மாலை, அந்தாதி மாலை, சித்திரக்-கவி மாலை போன்றனவும் அமைகின்றன. இலக்கணம் சுட்டிய மாலைகள் காணப்பட்டாலும், சுட்டாத மாலைகளும் அமைந்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. ஒரு மாலைக்குச் சுட்டிய இலக்கணம் அவ்வகை இலக்கியத்தில் சிறிது மாறுபட்டும், பெரிதும்வேறுபட்டும் அமைவதும் நினைக்கத் தக்கது. பல்வேறு கோணங்களில் மாலை என்னும் சொல் முடிவோடு அமைந்த இலக்கிய வகைகளின் மொத்த எண்ணிக்கை முப்பத்திரண்டு.

1. <u>இணை மணி மாலை</u>

அந்தாதித் தொடர்புடன் ௨௰ பாடல்கள் வெண்பா யாப்பும், கலித்துறை யாப்புமாக மாறி மாறியமைவது என்பது பொது நிலை. கலித்துறைக்-குப் பதிலாக வெண்பாவுடன் அகவல் அமைவது மற்றொரு தனி நிலை. இவ் அகவல், அகவல் விருத்தமாக அமைய வேண்டும் என்பது பிறிதொரு நிலையாகும்.

2. <u>இரட்டை மணி மாலை</u>

வெண்பாவும் கலித்துறையுமாக இருபது பாடல் பெறுவது இது. வெண்பாவும் அகவலும் வரும் எனவும், ஆசிரிய விருத்தமும், வெண்பாவும் வரும் எனவும் இரு நிலைகளைக் கூறுகிறது வெண்பா பாட்டியல் இலக்கண விளக்கம், பிரபந்த தீபிகை என்பன. கலித்துறை, கட்டளைக் கலித்துறையாக அமைதல் என விதந்தோதுகின்றது, முத்து வீரியம்.

3. <u>மும்மணி மாலை</u>

மும்மணி மாலை என்பது வெண்பா, கலித்துறை, அகவல் என்ற யாப்பில் 30 பாடல்கள் வருவ தாகும்.

4. <u>நான்மணி மாலை</u>

வெண்பா, கலித்துறை, அகவல், விருத்தம் என நாற்பது பாடல் வருவது நான்மணி மாலை ஆகும்.

5. நவமணி மாலை

ஒன்பது செய்யுட்களால் பா, பா இனங்களால் வருவது நவமணி மாலை ஆகும்.

6. நாம மாலை

பல்வகை அடி மயங்கிய வஞ்சிப்பாவினால் ஆடவனைப் புகழ்வது இவ் இலக்கியம்.

7. பெருமகிழ்ச்சி மாலை

புகழ்ச்சி மாலை எனும் இலக்கிய வகையோடு ஒப்புமை காட்டி நிற்கின்றது பெருமகிழ்ச்சி மாலை. பெண்ணைப் புகழ்வது புகழ்ச்சி மாலையின் பொருளாய் அமைந்து தலைவியொருத்தியின் எழில், குணம், ஆக்கம், சிறப்பு இவற்றை எடுத்து மொழிதல் பெருமகிழ்ச்சி மாலையின் பொருண்மையாகும்.

"குணப்பெயர் அடுக்கிக் கொம்பு அனையார்க்கு
வஞ்சியின் அகம்மிக மகிழ உரைப்பது
பெருமகிழ்ச்சி மாலை" (பிர. 13)

8. தாரகை மாலை

இரு பொருண்மையுடைய இருபத்தேழு வகைப் பாடலால் ஆவது என பன்னிரு பாட்டியல் கூறுகிறது. கற்புடைப் பெண்ணின் குணங்களைப் பாடுவது என வெண்பா பாட்டியல் இலக்கண விளக்கம், முத்து வீரியம் என்பன கூறுகின்றன.

9. அங்க மாலை

பல வெண்பா விருத்தங்களால் சிறந்த உறுப்பைப் பாடுவது அங்க மாலையாகும்.

10. <u>பல்சந்த மாலை</u>

பத்து முதல் நூறு பாடல்களாகக் கலம்பக உறுப்பு வகைகள் நீங்கி வருவது பல்சந்த மாலை ஆகும்.

11. <u>கலம்பக மாலை</u>

பன்னிரு பாட்டியல் தவிர பிற நூல்கள் இதற்குப் பன்மணி மாலை எனப் பெயர் அளிக்கின்றன. கலம்பகத்தின் ஒருபோகு அம்மானை ஆகிய உறுப்புகள் நீங்கின் இவ் இலக்கியம் உருவாகும்.

12. <u>வருக்க மாலை</u>

மொழி முதல் எழுத்துக்களை அமைத்துப் பாடுவது என்பது பொதுக் கருத்து எட்டு அகவற் பாவில் 'கசதநபம' வருக்க எழுத்துக்களால் அமைதல் எனும் கருத்து வெண்பா பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், தொன்னூல் விளக்கம் என்பனவற்றில் உண்டு.

<u>மாலை - காலம்</u>

முதலாவது எழுந்த இரட்டை மணி மாலை காரைக்காலம்மையாரால் பாடப்பட்டது. இதன் காலம் கி.பி. 5,6ஆம் நூற்றாண்டு ஆகும். ஆனால் இப்பிரபந்தம் எதுவும் இப்போது இல்லை. மும்மணிக்கோவைகள் எண்ணிறந்தன. முதல் மும்மணிக்கோவை 8ஆம் நூற்றாண்டில் சேரமானால் பாடப்பட்ட திருவா மும்மணிக்கோவையாகும். வருக்க மாலை, என்ற பழைய நூல் இல்லை. எனினும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் என்ற நீதி நூல்களும் 12ஆம் நூற்றாண் தோன்றியவை. அப்பர் சுவாமிகள் பாடிய சித்தத்தொகைத் திருக்குறுந்தொகை என்ற பதிகமும் 7ஆம் நூற்றாண்டில் வருக்க முறையைப் பற்றி அமைந்தவை. நான்மணி மாலைகள் பல. நான்மணி மாலைகளில் மிகவும் பழமையானது 10ஆ நூற்றாண்டில் பட்டினத்தார் பாடிய கோயில் நான்மணி மாலையாகும். வேதா தேசிகன் பாடிய நவரத்ன மாலை பல்வகை விருத்தங்களும் கொண்டது. இதன்

காலம் கி.பி. 14ஆம் நூற்றாண்டு. திருஞானசம்பந்தர் பாடிய நவரத்ன மாலை மணியே என்ற மகுடமுடைய கட்டளைக் கலித்துறை 16ஆம் நூற்றாண்டில் தோன்றியவை. இரண்டும் 10 பாடல்கள் கொண்டவை. ஒருபா ஒருபஃது பதினோராந் திருமுறையில் பட்டினத்தார் பாடிய திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதாகும். இது 10ஆம் நூற்றாண்டில் தான்றியது.

நூல் பெயர்

இந்நூல் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசித் திருத்தலத்தில் திருப்புக்கொளிப் பதியில் வீற்றிருக்கும் கருணை நாயகிமீது பாடப்பெற்ற 'மாலை' பாடலாகும். சுவடியில் 'புக்குளி மாலை' எனவும், அச்சில் 'திருப்புக்குழி மாலை' எனவும் நூல் தலைப்பு காணப்படுகிறது. முன்பு ஒரு காலத்தல் சிவ-பெருமான் சங்காரத் தாண்டவம் ஆடிய காலத்து அகில உலகமெங்கும் தீப்பரவ அதனால் அஞ்சிய திருமால், பிரமன் முதலான தேவர்கள் அனைவரும் தேவர் உலகத்தை விட்டு நீங்கி வந்து புகுந்து ஒளித்திருந்து உயிர்பெற்ற தலம் அவிநாசித் திருத்தலம். தேவர்கள் புகுந்து ஒளிந்த தலம் என்ற காரணத்தால் இது 'திருப்புக்கொளி' என்னும் பெயர் பெற்றது.

பூமாலை கொண்டு இறைவன் இறைவியின் திருமேனியிற் புனைவது போன்று அன்பர்கள் பாமாலை சூட்டி வழிபடுதலும் நம் தமிழகத்தில் தொன்றுதொட்டு வந் பழக்கமாகும்.

"பூமாலை வாடிவிடும் பொன்மாலை மங்கிவிடும்
பாமாலை என்றும் பரிமளிக்கும் - அம்மாலை
வேங்கடத்து மேயானை வேண்டிப் புகழ்மாலை
ஈங்கிந்நாம் வாடல் இல்லை"[1].

இறைவனுக்கும் இறைவிக்கும் அன்பர்கள் சூட்டி மகிழும் பூமாலையானது விரைவில் வாடிவிடும் தன்மையது. பொன்னால் செய்யப்பட்ட மாலையும் காலப்போக்கில் அதன் ஒளி மங்கிவிடும் தன்மை கொண்டது. ஆனால் இறைவர்களுக்குச் சூட்டப்-பெறும் பாமாலையோ என்றும் நிலைத்து நின்று புகழ் மணம் பரப்பும் தன்மை

கொண்டது. அதைப்போலவே அரசர்களுக்குச் சூட்டப்படும் புகழ்மாலையும் என்றும் வாடாமல் நிலைத்து நின்று புகழ்மணம் பரப்பும் தன்மை கொண்டது. இந்நூலும் இறைவன் இறைவியர்மீது என்றும் வாடாத புகழ்மணம் பரப்பும் பாமாலை சூட்டி மகிழ்ந்த பாடலாகும். எனவே, இந்நூல் 'புக்கொளி மாலை' எனப் பெயர் பெறுவது பொருத்தமானதாகிறது. மேலும், ஒரு மாலை நூலின் பாடல்களனைத்தும் ஒன்றுபோல முடிதல் எனும் பெரும்பான்மை பொதுத்தன்மை இங்கு நினைவுகூரத்தக்கது. 'புக்கொளி மாலை' என்ற இந்நூலின் பாடல்கள் அனைத்தும் ஒன்றுபோல முடிதலைக் காணலாம். "புக்கொளிப் பதியில் வளர்பெருங் கருணை நாயகியே" என்ற முடிவடியைக் கொண்டதாக இந்நூலின் பாடல் முழுவதும் காணப்படுகிறது. இந்நூலின் பாடல்களனைத்தும் எழுசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலானது.

பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவற்றினைத் தனிப் பொருண்மையாக்கி, வெண்பா, அல்லது கலித்துறை யாப்பில் முப்பது, நாற்பது, எழுபது, தொண்ணூறு, நூறு செய்யுட்கள் அமையப் பாடப்பெறுவது. உண்டு. இம்மாலைகள் பொருளாலும் எண்ணாலும் பெயர் பெறுகின்றன. புக்கொளி மாலை என்ற இந்நூலும் தொண்ணூறு அல்லது நூறு பாடல்களைக் கொண்டதாக இருக்கலாம். ஆனால் நமக்குக் கிடைத்தவை எண்பத்தெட்டுப் பாடல்களே. எனவே இதனை 'மாலை' என்ற யாப்பாகக் கொண்டதாகவும் கருத இடமுண்டு.

தேவியின் சிறப்புகள்

"தெய்வத்துள் தெய்வம் தமிழ்த்தெய்வம் அத்தெய்வம்
தெய்வத்துள் எல்லாம் தலை"[2]

என்பதற்கு ஏற்பப் புக்கொளியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகி பக்தர்களுக்கு அருளும் பண்பினைக் கொண்டவள். அவளது பல்வேறு சிறப்புகளும் பக்தர்களுக்கு அருளும் பண்பும் இந்நூலில் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

அவிநாசியில் திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள தேவியின் செயல்கள் பலதிறத்தன. இத்தேவியாகிய கருணாம்பிகை பலவகை அருட்சிறப்பு

உடையவளாகக் காணப்படுகிறாள். அவிநாசியில் திருப்புக்கொளித் திருத்தலத்தி எழுந்தருளியுள்ள அம்மையின் செயல்களாகப் 'புக்கொளி மாலை' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளைக் காணலாம்.

உலகு ஈன்றவள்

அழகிய மணி மாலையை மார்பிலே அணிந்து புக்கொளியில் கோயில் கொண்டிருக்கும் மறைவியான கருணாம்பிகை இந்நிலவுலகம் ஏழினையும் படைத்தவ என்பதை,

"படமிடும் சாப நாககங் கணியே
பாருல கேழையு மீன்றாய்" (17)

என்று குறிப்பிடுகிறார் ஆசிரியர். மேலும், உலக உயிர்களைக் காக்கும் தன்ன கொண்டவள். காற்றினையும் இயக்குபவளாகவும் கருணாம்பிகை காணப்படுகிறா

முத்தொழிலும் செய்பவள்

சிவபெருமானையும் திருமாலையும் நெடுநாள் பூசித்த பிரமதேவன் கருணை நாயகியாகிய தேவியையும் நெடுநாள் அர்ச்சனை புரிந்து அவளுடைய அன்பைப் பெற்று இந்நிலவுலகத்தினைப் படைத்தளித்தான். இந்நிலையில் இந்-நிலவுலகத்தில் நிலைபெறும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழி கருணை நாயகியினுடைய திருக்கொடையின் அருளால் அமைந்தவை என்பதைப் பி வரும் பாடலில் கூறுகிறார்.

"அரிவுறு மாதி ஈசரு மூவர்
அர்ச்சனை புரிந்துனை நெடுநாள்
பரிவுடன் உலகைப் படைத்தனன் பிரமன்
பாங்குடன் மாலவன் காக்க
விரிவுறு உலகை உத்தியி லளிக்க
மேவுமுத் தொழிலுமே யுனது" (29)

இவ்விதம் தேவி முத்தொழிலும் செய்பவளாக காணப்படுகிறாள். மேலும், இத் தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற கருணை நாயகியானவள் உள்ளம் உருகி எக்கால துதிக்கும் அடியவர்களிடத்தில் வந்து தோன்றி அவர்களின் துன்பத்தைப் போக்

வடிவு கொண்டவளாக இருக்கிறாள்.

சிவபெருமானுக்கு அருளியவள்

அண்ட சராசரங்களில் உள்ள ஒன்பது கோடி கலைகளுள் 'திருத்தாண்ட என்னும் உயர்ந்த கலையினை சிவபெருமான் மேற்கொள்ளுமாறு தூண்டி அருளிய சிறப்புடையவள் கருணாம்பிகை என்பதை,

"ஒன்பது கோடி கலைதனி லொன்று
உயர்சிவன் தனக்கருள் தாயே" (44)

என்ற பாடல் வரி மூலம் விளக்குகிறார்.

கன்னித்தன்மை உடையவள்

திருப்புக்கொளி கருணாம்பிகையின் உயர்ந்த தன்மையைச் சிறந்த தெய்வீகத்தன்மை வாய்ந்த ஒன்று என இறைவன் உரைக்கின்ற சிறப்புக் கொண்ட அச்சிவபெருமானால் தோற்றுவிக்கப்பட்ட நான்கு வகை மறைகளும், பிறவாகிய சாத்திரங்களும் தேவியை அழகிய கன்னித்தன்மை வாய்ந்தவள் என்றே கூறும் சிறப்புடையவளாக கருண ம்பிகை தேவி காணப்படுகிறாள் என்பதை,

"என்னிட மறைகள் சாத்திர மெல்லாம்
யியம்பது கன்னியென் றுன்னை" (45)

என்று நூல் குறிப்பிடுகிறது.

சக்தி சிவமானவள்

இவ்வுலக தோற்றத்துக்கெல்லாம் ஆதியாக சக்தி என்ற பெயரோடு தோன்றியவள் கருணாம்பிகை. சிவம் என்ற ஒரு சக்தியைப் படைத்தவளும் கருணாம்பிகையாவாள். சிவபெருமானால் படைக்கப்பட்ட அனைத்து உயிர்களை காத்து அருள்புரிந்து வருபவளும் கருணை நாயகியே ஆவாள். இவ்விதம் உயிர், சக்தி, சிவம் ஆகிய எல்லாம் கருணாம்பிகையே என்ற பொருள்பட,

"முந்தவே சக்தி சிவத்தைநீ படைத்து
முற்றுமே யவரிடந் தனிலே
வந்திடும் சக்தி சிவமதாய்ப் பிரிந்து
மன்னுயி ரனைத்தையுங் காத்தாய்
உந்தனை யல்லா லொருதெய்வ முண்டோ
உயிர்சிவம் சக்திநீ தரயே" (46)

என்று கூறுகிறார். இத்தகு பெருமை வாய்ந்த உன்னையன்றி இந்நிலவுலகில் வேறு தெய்வம் இல்லை என்றும் கூறுகிறார்.

கலைவாணிக்கு அருளியவள்

உலகில் அறியாமையாகிய இருளைப் போக்க வல்லது கல்வி. அதை அளிக்க வல்லவளாகிய கலைவாணியானவள் தனது கணவனாகிய பிரம்மதேவனிடம் படைத்தல் தொழிலினும் கல்வியே சிறந்தது என்று வாதிட்டு உன்னிடம் வந்தனர். தான் தோற்றுவிடுவேனோ என்ற ஏக்கத்தினால் கலைவாணியானவள் இயல், இசை, நாடகம் என்ற மூவகைத் தமிழில் இசைத்தமிழை மறந்து வருந்தினாள். அவள் நிலையைக் கண்ட அன்னையாகிய கருணை நாயகி அவள்மீது இரக்கம் கொண்டு அவள் வருத்தத்தைப் போக்கிச் சிறந்த வாக்குப்பெறும்படிச் செய்த பெருமைக்குரியவள் என்பதை,

"தேக்கிய கல்வி வாணியுங் கேள்வர்
திருமுன்பு செயமெனக் கல்வி
நோக்க மிலாது அறிவமென் றழைக்க
நெடியவி லுமதிடம் வருக
ஏக்கமாய் வாணி யிசைகள் கைவிட
மயேசுவரி கண்டுநீ இரங்கி
வாக்குடைச் செல்வி அருள்செய் புக்கொளியில்
வளர்பெருங் கருணை நாயகியே" (47)

என்று கூறுகிறதனால்.

மும்மூர்த்திகளாலும் வணங்கப்படுபவள்

திரிபுரங்களை எரித்த சிறப்புடையவள் அம்பிகை. சிவபெருமான், திரும பிரமன் ஆகிய மும்மூர்த்திகள் மூவரும் தேவியை அர்ச்சனை புரிகிறார்கள். இதனை

"திரிபுரை தகனி மாலய னரலும்
சிறந்திடும் ஆசனக் காலாய்
அரியயன் சிவனும் மூவருன் பதத்தை
அர்ச்சனை புரிவர்க எம்மா" (53)

என்ற பாடல் வரி மூலம் விளக்குகிறாள். மேலும், கருணை நாயகியானவள் உடலையும், உயிரையும் படைத்தவள் ஆவாள்.

மேலும் அழகிய இளநிலவுக்கு அருள்புரிந்து ஏற்றவள் கருணை நாயகி ஆவாள். எனவே "கலைமதித்தசெஞ் சுடா தரியே" ( ) என்கிறார். மேலும், திருப்புக்கொளி கருணை நாயகியின் அருளைத் தவத்தில் சிறந்த முனிவர்களும், திருத்தொண்டர்களும் அளந்து அறிய முடியாதவர்களாகிறார்கள்.

"தெய்திசை கொண்ட தெட்சண காசி
சீருறு கருணையுன் னருளை
அண்டருந் தொண்டர் மாலயன் முனிவர்
அறிந்திடக் கரியகா ரணியே" (72)

என்பது ஆசிரியர் கூற்று. மேலும் சிந்தனைக்கரசாக விளங்குகிறாள் தேவி. இத்தகு சிறப்புகளையுடையவள் கருணாம்பிகை யாவாள்.

2. தேவியின் பெயர்கள் - தொகுப்பு

திருப்புக்கொளித் திருத்தலத்தில் வீற்றிருக்கும் கருணாம்பிகையைப் 'புக்கொளி மாலை' என்ற நூலை இயற்றிய ஆசிரியர் பல பெயர்களில் அழைக்கிறார். தேவியின் பெயர்களாவன:

மங்கை, வனிதை, கருணை நாயகி என முதற் பாடலில் குறிப்பிடுகிறார். ஒவ்வொரு பாடலிலும் கருணை நாயகி என்ற பொதுப்பெயர் சுட்டப்பட்டிருக்கிறது. அகில காரணி என பதினைந்தாம் பாடலில் குறிப்பிடுகிறாள்.

விமலி, நாக கங்கணி என்ற பெயர்களில் பதினேழாம் பாடலில் அழைக்கிறார். தேவி, ஆதியம்பிகை, திரிசூலி போன்ற பெயர்களிலும் கருணாம்பிகையை அழைக்கிறார். நிற்கள ரூபி, பரை, வாலை சுந்தரி, வாலையம் புனை, வயிரவி, சூலி, நீலி, திரிபுரை கன்னி, சுந்தரி, துர்க்கை, மாகாளி, கபாலி,

சிவாய சங்கரி, கௌரி, கலியாணி, வடமணி குறத்தி, ஈஸ்வரி, மயேசுவரி, தயேசுவரி, சங்கரி, வயேசுவரி, பராபரவல்லி, தயாபரி, வாமி, வாம சுந்தரி, காமி சுந்தரி, வாமி யந்திரி, மனோன்மணி, வானமாதேவி, ஆகியவை உட்பட நாற்பத்தி நான்குக்கும் மேற்பட்ட பெயர்களால் கருணாம்பிகையை அழைத்துப் பாடுகிறார்.

3. தேவியின் வடிவங்கள்

திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள கருணாம்பிகை பற்பல வடிவங்களில் காட்சியளிக்கிறாள். கருணாம்பிகையின் வடிவங்களாக ஆசிரியர் 'புக்கொளி மாலை' என்ற இந்நூலில் குறிப்பிட்டதைக் காண்போம்.

சக்தி வடிவமாய் நிற்பவள், வீர வடிவோடு கைகளிலே கபாலத்தை ஏந்தியவளாக, யாமரங்கள் நிறைந்த வனத்திலே மாகாளியாகவும், கன்னி துர்க்கையாகவும், பேரொலி செய்கின்றள். மும்மலம் என்ற குற்றங்களை-யெல்லாம் போக்கும் நிமலியாக, எட்டுத் தோள்களையும் உடையவளாய் நடன கலியாண குணவடிவினளாய் வெண்ணாவல் நிழலிலே வீற்றிருக்கும் சாம்பவியாய் வாளை ஏந்தி, அகோர, ஆங்கார, வீர குணங்களையுடையவளாய்ச் சிங்க வாகனத்திலே எழுந்தருளி கொடிய பார்வையை உடைய காந்தாரியாகவும் விளங்குகிறாள் என்பதைப் பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறார்.

"ஓங்காரி சக்தி கரதல கபாலி
யாவனக் காளிமா கன்னி
ரீங்காரி துர்க்கை நிமலியெண் டோளி
நித்தகலி யாவிசாம் பவிநீ
ஆங்காரி வாட்கை அகோரி வீரச்சி
அந்தரி சிங்கவா கனத்தி
வாங்காரி காந்தாரி புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே" (27)

மேலும் திருப்புக்கொளிப் பதியில் கச்சணிந்த மார்பினளாய் வீற்றிருக்-கின்றாள். உலகப் பொருள்களையெல்லாம் தோற்றுவித்த காரணியாக, கௌரி, சக்தி காமாட்சி என்ற பெயர்களையுடையவளாக இருக்கிறாள். பருத்த

தனங்களை உடைய பயோதர வல்லியாகவும் வீற்றிருக்கிறாள். நாரணச் சகோதரியாகிச் செயற்பாடுகளால் துர்க்கை, மாகாளி எனவும் பாம்பினை கங்கணமாக அணிந்து நாக கங்கணியாகவும் காட்சியளிக்கிறாள். இறைவனுடைய ஆயுதமாகிய சூலத்தை ஏந்தி 'திரிசூலி' என்ற பெயரினை உடையவளாகவும் விளங்குகிறாள். காற்றினை இயக்குபவளாகி ஆரணி எனவும், இளமையால் கன்னி எனவும், வீரத்தால் வீரிகங்காரி எனவும் அயன்தலை அரிந்திடும் கோர வடிவின-ளாகவும் அமர்ந்திருக்கிறாள் என்பதை,

"காரணி கௌரி சக்திகா மாட்சி
கனதனப் பயோதர வல்லி
நாரணி கௌரி துர்க்கைமா காளி
அயன்தலை அரிந்திடுங் கோரி
வாரணி முலைசேர் புக்கொளிப் பதியில்
வாள்பெருங் கருணைநா யகியே" (28)

என்ற பாடல் மூலம் சுட்டுகிறார்.

4. பிற தலங்களில் அமைந்த பெயர்கள்

அவிநாசியாகிய திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள கருணை நாயகி வெவ்வேறான இடங்களில் பற்பல பெயர்களில் அழைக்கப்படுகிறாள் என்பதும் 'புக்கொளி மாலை' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. காசியில் விசாலாட்சியாய் விசுவநாதரோடு வீற்றிருக்கிறாள். தென்பாண்டி நாட்டு மதுரையம்பதியிலே சோமசுந்தரப் பெருமானோடு மீனாட்சியம்மையாகவும், காஞ்சி மாநகரந்திலே ஏகாம்பர நாதரோடு காமாட்சியம்மையாகவும், மேலைச் சிதம்பரத்தில் மரகதவல்லியாகவும் காட்சியளிக்கிறாள். வேளூரிலே வைத்திய நாத தேவரோடு தையல் நாயகியாகவும், புகழ்மிக்க திருவண்ணாமலையிலே அண்ணாமலையாருடனே உண்ணாமுலைச் செல்வியாகவும், திருத்தில்லையம்பதியாம் சிதம்பரத்தில் நடராசப் பெருமானோடு சிவகாமியாகவும் எழுந்தருளியிருக்கிறாள் என்பதை,

"காசிவிசா லாட்சி மதுரைமீ னாட்சி
கச்சிகா மாட்சிநீ யாகி
பேசிய பேரூர் மரகத வல்லி
பிறங்கிய தமியல்வே ளூரில்
ஓசைசே ரருணைஉண் ணாமுலைச் செல்வி
உயர்தல மெங்குநீ தாயே
வாசிய சிதம்பர சிவகாமி புக்கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே" (25)

என்ற பாடல் மூலம் விளக்குகிறார்.

5. நலத்தில் - தவம் செய்தோர் - தவ முறைகள்

திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கின்ற கருணை நாயகியாகிய பார்வதி முதல், பிரமன், ஐராவதம், இராவணன், நாககன்னி, வியாதவேடன், தருமசேனன் ஆகியோர் உட்பட தவஞ்செய்தோர் பலரது பெயர்களும், அவர்கள் செய்த தவமுறைகளும், தவம் செய்த தவப்பெயர்களும் 'புக்கொளி மாலை' என்ற இந்நூ லில் கூறப்பட்டிருக்கின்றன.

1. பார்வதி தவம்

வலப்புறம் பெற்ற செய்தி

திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகி பெரும் பேற்றினைத் தரத்தக்கனவாகிய 'அரிஓம்' என்னும் மூவெழுத்து மந்திரத்தையும், 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓயாது சொல்லித் துதித்துத் தவம் செய்த காரணத்தால் புண்ணிய நதியாகிய கங்கையின் கரையிலே எழுந்தருளியுள்ள சதாசிவ மூர்த்தியாகிய எம்பெருமானின் வலதுபுறத்திலே இடையறாது வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றவள் ஆனாள்.

மேலும் அக்கினித் தாண்டவஞ்செய்து தம் திருவுருவத்தை மறைந்தருளின சிவபெருமானை அத்தாண்டவக் காலத்துப் பிரிந்திருந்த குறையை நீக்கும் பொருட்டுப் பார்வதி தேவி அவரை நோக்கிப் பூசிக்க எண்ணி அவிநாசியில் பூசித்திருக்கும் காலத்து, காசித்திருத்தலத்து எழுந்தருளிய சிவபெருமான் திருவுள்ளம்

மகிழ்ந்து காட்சியளித்து எப்பொழுதும் பார்வதிக்கே உரித்தாகிய தனது இடப்பாகத்தை விடுத்து வலப்பாகத்தை அவளுக்குக் கொடுத்தருளினார். இச்-செய்தியைப் பின்வரும் பாடல் மூலம் விளக்குகிறார்.

"அழல்நடம் புரிய பிரணவந் தன்னி
லலைந்திடுங் குறையது தவிர
நளினமாந் தேவர் மறவர் சூழ்ந்தற
நீளபா திரைத்தருக் கீர்
உளமிகு தங்கிப் புரிந்திடக் காசி
உத்தமன் வந்ததென் பாகம்
வளமிகு தலத்தில் வரமுனக் கென்றார்
வளர்பெருங் கருணைநா யகியே" (4)

பிரமன் தவம்

சிவபெருமானின் அடிமுடிகளைக் காணச் சென்று திருவடியினைக் காண இயலாமல் திரும்பியவரும் கருட வாகனத்தை உடையவரும் திருமாலிடத்தில் தான் நெற்றிக்கண்ணை உடையவராகிய சிவபெருமானின் ஒளி பொருந்திய திருமுடியினைக் கண்டு திரும்பியதாகப் பொய் சொல்லித் திருமாலை நம்புமாறு செய்தான் பிரம தேவன். பிரமதேவனின் செயலை அறிந்த சிவபெருமான் அங்குத் தோன்றி "நான்முகனே! பொய்யுரை புகன்ற உனக்குக் கோவிலும் வழிபாடும் இந்நிலத்-தினில் இல்லாமல் போகட்டும், இனி என்முன் நில்லாது ஒழிக!" என்று மிகவும் கோபித்துச் சாபம் கொடுத்தார். அச்சாபத்தை ஏற்ற பிரமதேவன், தனது எட்டு உறுப்புகளும் தரையிலே பொருந்துமாறு விழுந்து பணிந்து ஐயனே! என் பிழை பொறுத்தருள்க என வேண்டினார். அந்தச் சாப விமோசனம் பெறக்கூடிய திருத்தலம் தெக்கணக் காசியாகிய அவிநாசியே எனக் கூற அதன்படி இத்திருத்-தலத்திலே இருந்து இறைவன் அருளைப் பெறுவதற்காகப் பல ஆண்டுகள் பிரமதேவ தவம் செய்தார் என்ற செய்தியைப் பின்வரும் பாடல்மூலம் விளக்குகிறார்.

"கருடவா கனரவ குடநயன யீசன்
கதிர்முடி கண்டனன் என்று
திருடனைக் கூறச் சிவன்சபித் தப்பால்
செல்கென முனிந்துகோ பிக்க

தரைபட வீழ்ந்து தோத்திரஞ் செய்யத்
தவிருமித் தலமெனத் தலத்தில்
வருடர யயன்செய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே" (5)

ஐராவதம் சாபம் நீங்கல்

'ஐராவதம்' என்னும் இந்திரனுடைய யானையானது துருவாசர் சாபம் பெற்று இந்நிலவுலகத்திற்கு வந்து காட்டு யானைகளுடன் கூடித் திரிந்து வந்தது. தன் யானையின் நிலையை அறிந்த தேவேந்திரன் அசுரர்களின் கொடுமையிலிருந்து நீங்குமாறு அருள்புரிந்தான். அதன்படி நாரதன் கூற்றை ஏற்ற அவ் யானை-யானது ஐராவதத் தீர்த்தம் ஒன்றினைத் தோற்றுவித்து அத்தீர்த்தத்தில் மூழ்கி பன்னிரண்டு ஆண்டுகள் திருப்புக்கொளித் திருத்தலத்திலே இறைவனைப் பூசித்து வந்தது. அதன் பயனாகத் தன் சாபம் நீங்கித் தேவருலகம் அடைந்தது என்ற நிகழ்ச்சியை ஆறாவது பாடலில் கூறுகிறாள்.

இராவணன் தவம்

இலங்கை நாட்டை அரசாண்டவனும் இன்னிசை இசைப்பதில் வல்லவனும் விசிரவசு, கேசகி ஆகியோரின் அரிய மகனுமாகிய இராவணன் நீரில் நின்று பிரமதேவனை நினைத்து உள்ளத்தைச் செலுத்தித் தவஞ்செய்தனர். இராவணன் மு தோன்றிய பிரமன் இராவணனுடைய எண்ணம் ஈடேற தென்காசித் திருத்தலத்திலே எழுந்தருளி இருக்கின்ற தனது தந்தையாகிய சிவபெருமானிடம் செல்லுமாறு பணித்தனன். அவ்வாறே இராவணன் தென்காசி நகரடைந்து மூன்று ஆண்டுகள் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தான். அங்கு வந்த சுகேதுவின் மகளாகி தாடகை, தன் கணவராகிய சுந்தனைக் கொன்ற அகத்தியரைச் சினந்து வந்து இத்திருத்தலத்திலே அருள்பெற்றாள் என்ற செய்தி ஏழாவது பாடலில் விளக்கப்-படுகின்றது.

நாககன்னி தவம்

வளம்பொருந்திய நாகலோகத்தில் ஆதிசேடனின் மகளாகப் பிறந்த நாககன்னி பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணத்தை வெறுத்து அவினாசித்

திருத்தலம் அடைந்து சிவபெருமானைக் குறித்து இருபத்தொரு திங்கள் கடுந்தவம் இயற்றினார். அக்காலத்துத் திராவிட தேசத்து அரசனான அரிந்தவசன் அவளைக் கண்டு மணம் முடித்துக்கொண்டான். பின் இருவரும் சிவலிங்கப் பெருமா வீற்றிருக்கும் ஆலயத்தில் பல கைங்கரியமும் செய்தனர். நாகாபரணம், இரத்தினாங்கி முதலிய ஆபரணங்கள் செய்து நாகக் கன்னி தீர்த்தமும் உண்டு-பண்ணினார்கள். சித்திரைத் திருவிழாவும் நடத்தி வந்தார்கள். இவ்வாறு நீதி தவறாமல் அரசு புரிந்துவந்து சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்தார்கள் என்பதை இந்நூலின் எட்டாவது பாடலில் குறிப்பிடுகிறார்.

வியாத வேடன் தவம்

சிவபெருமான் வேடுவனாகிய அடியவருக்கு அருள்கொடுத்து உய்வித்த தலம் திருப்புக்கொளித் திருத்தலமாகும். இத்தலத்தில் சிவத்தொண்டராகிய தருமவியாத வேடன் என்பான் மகப்பேறு வேண்டி சிவபெருமானைக் குறித்து பெரு தவம் செய்துவந்தான். அவனது அன்பிற்கு இரங்கிய சிவபெருமான் வேடர்குலத் தலைவனாகிய அவனுக்கு மகப்பேறு ஈன்று அருள்புரிந்தார் என்ற செய்தியை இந்-நூலின் ஒன்பதாவது பாடலில் குறிப்பிடுகிறார்.

தருமசேனன் தவம்

கௌதம நதியின் தீரத்திலே சதுமுகப்புரத்தை நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்தவன் தருமசேனன். அவன் பிள்ளைப் பேறின்றி வருந்தினான். சைவப் பிராமணர் ஒருவர் மூலம் புக்கொளிப் பதியின் பெருமையை அறிந்து தன் மனைவிய இருவருடனும் அவிநாசித் திருத்தலத்தை அடைந்து புண்ணிய நீராடி சிவார்ச்சனை புரிந்து கருணாம்பிகையிடம் தன் குறையிரந்து நின்றான். அம்பிகையின் அருளால் அக்கினி வருணனையும், இரவிய சேனனையும் மக்களாக அடைந்தான். பின் யாகஞ் செய்து தேக காந்தத்தில் சிவப்பதவியை அடைந்து பேரின்பம் பெற்ற வரலாற்ை இந்நூலின் பனிரெண்டாம் பாடல் மூலம் விளக்குகிறார்.

இறைவியின்மீது 'பாமாலை' சூட்டி மகிழ்கிறபோது அத்தலத்தின் சிறப்பு பதிச்சிறப்பும், இறைவியின் சிறப்பும், வழிபடுகின்ற தன்மையும், தவத்தின் பயனா

ஏற்பட்ட பலன்களையும் பூமாலை போன்று பாமாலையாகத் தொகுத்துப் பாடி வழிபடுவது மரபு. இந்நூலிலும் (புக்கொளி மாலை) தலச்சிறப்பும், தவச்சிறப்பும், தவம் புரிந்தோர் செய்தியும் பற்றி மேலே குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

தலத்தின் சிறப்புப் பண்புகள்

புக்கொளித் திருத்தலத்தின் சிறப்புப் பண்புகளைப் பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பின்வருமாறு பாடியுள்ளார்:

"மந்தி கடுவனுக் குண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறுஞ் சலபுட்பம் இட்டு வழிபடப்
புந்தி உறைவாய் புக்கொளி யூரவி நாசியே
நந்திஉனை வேண்டிக் கொள்வேன் நரகம் புகாமையே"[3அ]

இறைவருக்குப் பூமாலை சூட்டி வழிபடுகின்றபோது இறைவியின் பெருமைகளைப் பற்றி மட்டும் கூறாமல் அப்பெருமைகள் எந்த தலத்தில் நடைபெற்றது என்பதை பற்றியும் பாடுவது வழக்கம். 'புக்கொளி மாலை' என்ற நூலிலும் இறைவி கருணாம்பிகை வீற்றிருக்கின்ற தலச்சிறப்பும், பதிச்சிறப்பும் மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் அவிநாசியில் திருப்புக்கொளி என்ற பெயர் வருவதற்கான காரணத்தை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமான் சங்காரத் தாண்டவம் ஆடிய காலத்து உலகமெல்லாம் தீப்பரவ அதனால் அஞ்சிய திருமால், பிரமன், முதலான தேவர்கள் அனைவரும் தேவர் உலகத்தை விட்டு நீங்கி வந்து புகுந்து ஒளித்திருந்து உயிர்பெற்ற திருத்தலம் அவிநாசித் திருத்தலம். தேவர்கள் புகுந்து ஒளித்த தலம் என்ற காரணத்தால் இது திருப்புக்கொளி என்று பெயர்பெற்றது. இடபத்தை வாகனமாகக் கொண்டு அழல் ஏந்தி விளங்கும் சிவபெருமானின் அழிவற்ற அற்புதச் செயல்கள் பலவும் நடைபெற்ற தலமாதலால் அவிநாசி என்னும் பெயர் பெற்றது. அழகிய துதிக்கையினையுடைய வெள்ளை யானையானது அர்ச்சிக்க வாரணவாசி என்னும் காசியிலிருந்து தென்னாட்டின்கண்

உள்ள இந்த அவிநாசியில் இலிங்க வடிவமாய் எழுந்தருளிய இறைவனின் திருந்தலம் ஆதலின் இது, 'தெட்சண காசி' என்னும் பெயர்பெற்றது. மேலும் பிரம-தேவன் சாபவிமோசனம் பெறுவதற்காக இத்தலத்திலே பல ஆண்டுகள் தவம் செய்து விமோசனம் பெற்ற சிறப்புடையதும் இத்திருத்தலமாகும். ஐராவதம் சாபம் நீங்கியதும் இத்திருத்தலத்திலாகும். இராவணன் தவம் இருந்து அருள்-பெற்றதும் இத்திருத்தலமாகும். நாககன்னி தவம் இருந்து அருள்பெற்று சிவ-பெருமானின் திருவடி நிழலை அடைந்ததும் அத்திருத்தலமாகும். வியாதவேடன், தருமசேனன் போன்றவர்கள் தவம் இருந்து அருள்பெற்றதும் இத்திருத்தலத்தி-லாகும்.

அந்தணனுக்கு அருளல்

வங்காள நாட்டைச் சேர்ந்ததாகிய கவுட தேசம் என்னும் நாட்டில் திருட்டுத் தொழிலை மேற்கொண்டிருந்த அந்தணன் ஒருவன் இப்பிறவியில் கருட-னாகப் பிறந்திருந்தான். அவன் முற்பிறவியில் வஞ்சகர் கூட்டத்தில் ஒருவனாக இருந்து இறைவன் முன் முழந்தாளிட்டு வணங்கும் அடியவர்களைக் கொன்று, கோவ பொருட்களையெல்லாம் திருடியவன். அவன் சிவபெருமானின் திருவடிகளிலே அணிந்திருந்த சிலம்பைக் கவர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐந்து நாட்களா அப்பெருமானின் சிலம்பணிந்த திருவடிகளையே தன் உள்ளத்தில் இருத்தி நினைத்-திருந்ததற்காக இறைவன் அவனுக்கு அருள்புரிந்தனர். அத்தகு சிறப்பு வாய்ந்தது இத்திருத்தலமாகும்.

எஞ்ஞகுத்தன் அருள்பெறுதல்

அழகும் பெருமையும் நிறைந்த திருத்தலமாகிய தென்காசி மாநகரில் ஒரு காலத்தில் கோமுட்டி இனத்திலே தோன்றிய எஞ்ஞகுத்தன் அவிநாசித் திரு-விழாவின்போது பல பொருட்களையெல்லாம் வியாபாரம் செய்தான். அப்போது அத்திருவிழாவிற்கு வந்திருந்த பரத்தை ஒருத்தியின் வீட்டுக்குச் சென்று உணவருந்திய போது உணவு விக்கி உடல் சோர்ந்து வாடி இறைவனை வேண்ட இறைவன் அருளா

உயிர்பெற்று அடியவனாகும் பேறு பெற்ற சிறப்புடையதும் இத்திருத்தலமாகும்.

சுந்தரர் அருள் பெற்றது

திருவவினாசியில் வாழ்ந்த கங்கா என்னும் அந்தணன் தனக்குப் பிள்ளைப்-பேறு வேண்டிச் சிவபெருமானை நோக்கி வேண்ட, சிவபெருமான் அவனுக்குக் குழந்தைப் பேற்றை அருளினார். அக்குழந்தை ஐந்து வயதானபோது ஒருநாள் நீரில் இறங்கி விளையாடிய குழந்தையை ஒரு முதலை எடுத்து விழுங்கிவிட்டது. இந்நிகழ்ச்சி நடந்து மூன்று ஆண்டுகள் கழிந்தபின் ஒருநாள் ஆரூரில் பிறந்த சுந்தரனார் இச்செய்தியை அறிந்து குளக்கரைக்குச் சென்று சிவபெருமானை வேண் 'புரைக்காடுசோலை' என்னும் பதிகம் பாடி அச்சிறுவனைச் சேயி என்று அழைக் அச்சிறுவன் உயிருடன் முதலை வாயிலிருந்து வெளிவந்தான். அத்தகு சிறப்புகள் நடந்ததும் இத்திருத்தலமாகும்.

எலும்பு பூவாதல்

அந்தணன் ஒருவன் இறந்துபோன தன் தந்தையின் எலும்பை ஒரு கலசத்தில் அடைத்து தன் தலையில் வைத்து சுமந்து வந்தான். அவன் இத்திருத்தலமாகிய அவி-நாசியை அடைந்தவுடன் கலசத்தில் இருந்த எலும்பானது பூவாக இருக்கக் கண்டான் இத்தகு விசேடம் நிகழ்ந்ததும் இத்திருத்தலத்தில் ஆகும். மேலும் தேவியின் சிறப்புகளெல்லாம், புகழ்ந்து பாடுவதற்கு ஏற்ற திருத்தலமாக விளங்குவதும் திருப்புக்கொளித் திருத்தலமாகும்.

ஆலயம்

அவிநாசித் திருத்தலத்தில் அமைந்துள்ள ஆலயத்தின் சிறப்பும் கூறப்பட்-டுள்ளது. பெருமைக்குரிய திருக்கோபுரமும், உயர்ந்த அதன் வாயிலும் உடைய-தாக ஆலயம் விளங்குகின்றது.

தலப்பொருள்கள்

இத்திருத்தலம் பலவகைத் தேவர்களும் தாமரை மலரை இருக்கையாகக் கொண்டு வீற்றிருக்கின்ற பிரமனும், அருந்தவத்தை ஏற்றி பெருமைப்பெற்றிருக்கின்ற

முனிவர்களும் போற்றி வணங்குவதும் இந்நரகமாகும். இத்திருத்தலத்தில் அமைந்-துள்ள தீர்த்தம் 'ஐயிராவதம்' என்னும் தீர்த்தமாகும். அங்கு ஓடுகின்ற ஆறு கங்கைக்கு நிகரான காசி நதியாகும். இத்திருத்தலத்தின் தலவிருட்சமாகத் தோன்றுவது ஐந்து இதழ்களோடு கூடிய வில்வ மரமேயாகும். பண்டைக்காலம் தொட்டே புகழ்பெற்று விளங்குவதோடு சிவபெருமானது திருத்தாண்டவ காலத்தும் அழியாது நின்று அங்கு வந்து ஒளித்த தேவர்களையெல்லாம் காத்தருளிய திருத்-தலமாகும்.

முனிவர் ஐநூறு வராகன் பெறுதல்

காசி தவ முனிவர் ஐந்நூறு வராகன் பணத்தை தன் தண்டிகையிலே வைத்து அதை கங்கையிலே தவறவிட்டால் அந்த முனிவர் அவிநாசித் திருத்தலத்தை அடைந்து 'காசித்தீர்த்தம்' என்று சொல்லப்படும் கிணற்றிலே மூழ்கியபோது அக் கிணற்றிலே தன்னுடைய பொருளானது தோன்றக் கண்டார். இத்தகு சிறப்புடையது திருப்புக்கொளித் திருத்தலமாகும்.

பிற அடியவர்கள்

சாக்கிய நாயனார், சிறுத்தொண்ட நாயனார், கண்ணப்ப நாயனார், அர்ச்சுனன், பிரமன், சுந்தரமூர்த்தி நாயனார், வாதாபி போன்ற வல்லவர்-களாகிய அடியவர்கள் நிறைந்திருக்கின்ற பதியே திருப்புக்கொளித் திருத்தலமாகும் மேலும் மார்க்கண்டேயருக்கு இறைவன் திருவருள் புரிந்த நகரமும் திருப்புக்-கொளித் திருத்தலமாகும்.

நகர அமைப்பு

இந்நகரமானது வண்டுகள் நிறைந்து ரீங்கார ஒலி செய்கின்ற திருத்-தலமாகும். தெளிந்த அலைகளையுடைய பரந்த கடலால் சூழப்பட்டது இந்நில-வுலகம். இது மிக உயர்ந்த திருத்தலமாகும். இமயம் முதலாகிய எண்மலைகளு அத்திருத்தலத்தின் எட்டுத்திக்குச் சுவர்களாகின்றன. அதன் நடுத்தூண் மகாமேரு மலையாகும். பரந்த வெளியின் சுடர்களாக விளங்குபவை சூரிய சந்திரர் என்

இருசுடர்களாகும். இத்தகு இரண்டு விளக்குகள் இடப்பட்ட பரந்த வெளியே இந்நிலவுலகமாகும். இதன் இருநூற்று இருபத்து நான்கு இயலடுக்குகளும் பரந்த வெளியாகும். ஒளி பொருந்திய இயலடுக்குகளின் கூட்டமே இருவகை அண்டங்களுமாகும். மேலும், இந்நகரம் அழகிய காடுகளால் சூழப்பட்டது என்பதை,

"புரைக்கா டடைசூழ் திருவவி வாசி" (63)

என்ற பாடல் வரி மூலம் கூறுகிறார்.

இத்திருத்தலத்தில் தவ ற்குக் காரணனாகிய சிவபெருமானின் ஆலயம் பிரமனின் தவத்தால் சிறந்த அலங்காரங்களைப் பெற்று விளங்குகிறது. அவ்-இறைவனின் கோவில் தேரானது பெரும் விழாவிற்குரியதாக அமைகிறது. அவ்-விழாக் காலத்தில் வானோர் முதலானவர்கள் சூழ கையில் கங்கணம் தரித்துப் பெரு விழாவாக கொண்டாடப்படுகிறது. இத்தகு சிறப்பினை உடையது தென்-காசியாகிய இத்திருத்தலமாகும்.

மேலும், கோசிக முனிவன், வாமதேவர், சனக முனி, குருமுனி, வசிஷ்டர், மார்க்கண்டேயர், தேசிகன், வியாக்கிரபாத முனிவர், நயமி-சாரணிய வனத்திலே வாழ்ந்த பிற முனிவர்கள் போன்றோர் தென்காசித் திருத்-தலமாகிய இத்திருத்தலத்திலே காசித்தலமேயென்று மனமுவந்து வந்து தவம் செ பேறு பல பெற்றார்கள்.

மேலே கூறப்பட்ட எல்லாவிதமான சிறப்புகளையும் உடையது இத்-திருத்தலமாகும்.

சித்தர்கள்

திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயக யும், சிவபெருமானும் சித்தர்களுக்கு அருளிய சிறப்புடையவர்கள். சித்தர்கள் என்பவர்கள் அட்டமாசித்தி கைவரப்பெற்றவர், இரசவாத வித்தைகளிலும் சிறந்தவர், யோகப் பயிற்சியால் மூச்சடக்கி, ரேசக பூரண கும்பகத்தால்

குண்டலினி நக்தியை எழுப்பி, ஆறு ஆதாரங்களிலும் மனத்தை நிறுத்திச் சித்தி எய்தியவர். சித்தர்களைத் தாயுமானவர் பின்வருமாறு அழைக்கிறார்.

"வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகர் சித்தர் கணமே"[3அ]

என்கிறார்.

உண்மை உணர்வதற்கு மனத்திலே நீடு நினைந்து இரங்குகின்ற ஆற்றாமை ஏற்படவேண்டும். மாந்தன் தனக்குத் தானே இரக்கமுள்ளவனாக இருந்தால் உல மக்களுக்கும் இரக்கமுள்ளவனாக இருப்பான். பிள்ளைகளைப் பெறுவதினால் மட்டு ஒருவன் தந்தையாகிவிட மாட்டான். அதைப்போல் குற்றங்களை வெளிப்படுத்தி அழுவதினால் மட்டும் ஒருவன் ஞானியாகிவிட மாட்டான். குற்றங்களை முற்றும் களைந்து குணங்களை வளர்ப்பவனே உண்மை அறிஞன். உலகிற்குரிய ஞானி என்ற கருத்துக்களையெல்லாம் கூறி வாழ்க்கை இன்பத்திற்குச் சித்த நெறியே சிவநெறி, சாந்த நெறி என்று உறுதிப்படுத்தியவர் அழுகணி சித்தராவார். இவர்,

"மூலப் பதியடியோ மூவிரண்டு வீட்டிலே
கோலப் பதியடியோ குதர்க்கத் தெருநடுவே
பாலப் பதிதனிலே தணலாய் வளர்த்த கம்பம்
மேலப் பதிதனிலே என் கண்ணம்மா!
விளையாட்டைப் பாரேனோ"[4]

என்ற பாடலைப் பாடியவர் அழுகணி சித்தர்.

உள்ளுணர்வு மாந்தரிடம் வளர்ச்சி பெற்றிருப்பதுதான் அவனுக்கே உரிய சிறப்புத் தன்மை. அந்த உள்ளுணர்வின் வெளிப்பாடே உண்மை, செம்மை, அழகு எனும் முப்பொருள். இயற்கை, மனதில் படியும்படி எங்கும் பரந்து விரிந்து கிடக்கிறது. நம் வாழ்வு செழிக்கும்படி கொழித்துக் கிடக்கின்ற இயற்கையோடு ஒன்றுகிற உணர்ச்சியுடையோர் தத்தம் தொழிலின் பட்டறிவிலிருந்தே உண்மையினை உணர்ந்தத் தொடங்குகின்றார். இவர்கள் எந்தக் கூட்டுக்கும் அடங்காதவர்கள். இவர்களுக்கு எந்தவித உருவ வழிபாடோ, கோயில்களோ, வேதங்களோ, சடங்குகளோ பிடிபடா. அரைகுறையாக நாம் அறிந்துகொண்ட உலகத்தில்

வாழ்வது தீமையே விளைவிக்கும். மன அறிவைவிட உள்ளத்து எழுச்சியின் விளைவே ஆற்றல் வாய்ந்தது என்றெல்லாம் தத்துவக் கருத்துக்களைக் கூறியவர் இடைக்-காட்டுச் சித்தர். இவர்,

"எல்லா உலகமும் எல்லா உயிர்களும்
எல்லாப் பொருள்களும் எண்ணரிய
வல்லாளன் ஆதி பரம சிவனது
சொல்லால் ஆகுமே கோனாரே"[5]

என்ற பாடலைப் பாடியவர்.

உண்மையான சமயவாதியின் அறிவு எப்பொழுதும் தெளிவும் எளிமையும் கொண்டதாக இருக்கும். குதம்பைச் சித்தரின் கூர்மையான மனப்போக்கும் நேர்மையான மொழியும் பகுத்தறிவுக்கு இணக்கமானவை. கடவுள் என்ற கருத்துக்கு முன்னால் அனைத்து மாந்தரும் சமம், மெய்ப்பொருள் ஒன்றே, கைப்பொருள், மற்றவை அனைத்தும் பொய்ப்பொருள். புரோகிதர்களின் மன மயக்கப் பிடி-யிலிருந்தும் பொய்ப்புரட்டு அரசியல் அறிந்த மாந்தர் இனத்தை மீட்கும் தன்மை-யறிந்த தலைவனைச் சேர்ந்தோர்க்குப் பின்னை ஒரு தலைவன் தேவை இல்லை

[illegible]

காட்டுகிறது. கடவுளின் அடியார்களை அண்டுவதை விடக் கடவுளை அண்டுவதே சாலச் சிறந்தது. ஒவ்வொருவரும் தமக்காக உள்ளனர். கடவுள் ஒருவரே எல்லோர்க்கும் இடனாக உள்ளார். நெஞ்சமே நல்ல கையேடு, பட்டறிவே சிறந்த ஆசிரியர், உலகமே பல்கலைக் கழகம், கடவுளே சிறந்த நண்பர். இவை குதம்பைச் சித்தரின் சிந்தனையும் மின்னொளியுமாகும்.

"வெட்ட வெளிதன்னை மெய்யென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி – குதம்பாய்
பட்டயம் ஏதுக்கடி?"[6]

என்றார் குதம்பைச் சித்தர்.

உண்மையும் அழகும் அன்பும் பெண்மையின் வன்மொழிகளாக வெளிப்படுத்து-
கிறார் கொங்கனர். நீரலைப்போல் துடித்துக் கொண்டிருக்கும் நம் வாழ்வு
ஊமை எழுத்தை உடலாய்க் கொண்டது, 'ஓம்' என்ற எழுத்தை உயிராய்க்கொண்

ஊத்தைச் சடலமென்றும், உப்பிருந்த பாண்டம் என்றும் உடலை இழிவு செய்யாதே. உடலுக்குள்ளே உத்தமி இருக்கிறாள்.

ஆசை வலைக்குள் அகப்படாமலும், பாச வலைக்குள் பற்றாமலும் மாதாவாய் வந்து அமுதூட்டியவளை, மனையாட்டியாய் வந்து நலம் புரிந்தவளை ஆதாரமாகித் தங்கையானவளை, ஆசைக்கொழுந்தியுமாய் மாமியுமாய் ஆனவளை நினை என்ற கருத்துக்களைப் போதித்தவர் கொங்கணர். இவர்,

"தில்லையில் முல்லையி லெல்லையு ளாடிய
வல்லவள் வாலைப்பெண் மீதினிலே
சல்லாபக் கும்மித் தமிழ்பா டவரும்
தொல்லை வினை போக்கும் வாலைப்பெண்ணே!"[7]

என்று பாடி இருக்கிறார்.

பல சித்தர்களும் சிவபெருமானோடு சேர்ந்திருக்கின்ற உமையவளாகிய உன்னையும் வணங்கி உயர்ந்த சித்திகளைப் பெற்றார்கள்.

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"[8]

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாய் வாழ்பவர்கள்தான் சித்தர்கள்.

சித்தர்கள் பாமரத் தமிழிலே பாடக்கூடியவர்கள்.

(எ.கா.) "உள்ளம் பெருங்கோயில், ஊன் உடம்பு ஆலயம்,
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்தும் காளா மணிவிளக்கே"[9]

சித்தர்கள் பாட்டுக் கலையின் மூலமாகவே தங்களை வெளிப்படுத்திக்கொள்வதையே வாழ்வின் சிறப்புரிமையாகக் கொண்டுள்ளதால் மெய்விளக்கு உள்ளிருக்கக் கைவிளக்குக் கொண்டு கடலில் விழுபவர்களைக் கண்டு இரங்குகிறார்கள். சாவாதிருந்திடவும், வேவாதிருந்திடவும் தேவாதி தேவனிடம் நோவாது செல்கின்றனர்.

"இத்தகு சிறப்புகளெல்லாம் வாய்ந்த சித்தர்களெல்லாம் சித்திகள் பெற்றுச் சித்தர்கள் ஆவதற்கு அருள்புரிந்தவர் திருப்புக்கொளியில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகியும், சிவபெருமானும் ஆவர். இவர்களெல்லாம் உன்மீது கொண்ட உள்ளன்பினாலே உன்னையே நினைத்து நாள்தோறும் ஆராதனை முதலிய பணிவிடைகள் செய்து உயர்ந்த ஞானத்தைப் பெற்று யோகீஸ்வரர் ஆகி 'சித்தர்கள்' என்ற பெயரைப் பெற்றனர். உயர்ந்த சித்தர்களாகிய அவர்கள் உனது அட்டசித்தி என்னும் மாயையினால் பெருமை பெற்று விளங்கினார்கள். அத்தகு பெருமைபெற்ற ஒன்பது கோடி சித்தர்கள் உன் திருவடியையே நினைத்துத் துதித்து பேறு பெற்றார்கள்" என்று புகழ்ந்து கூறுகிறார் ஆசிரியர்.

ஆசிரியர் கூற்று

'புக்கொளி மாலை' என்ற நூலை எழுதிய ஆசிரியர் இறைவன், இறைவியரின் பெருமைகளையும், தலத்தின் சிறப்புகளையும் கூறிப் பக்தர்களுக்கு அருள் கொடுக்கும் தன்மை இறைவியை வணங்கும் விதம், இவ்வுலக ஆசையாகிய மாயத்தினால் தான் உழலாதவாறு தன்னை இரட்சிக்க வேண்டுகிறார். ஆசிரியர் தமக்கு என்னென்ன வேண்டுகிறார் என்பதை இந்நூலில் காணலாம்.

'புக்கொளி மாலை' ஆசிரியர் திருமாலும், பிரமனும் காணமுடியாத திருவடி, திருமுடிகளைத் திருப்புக்கொளித் திருத்தலத்தில் அவர் கண்டாக 2ஆவது பாடலில் கூறுகிறார். மேலும் அறுபத்து மூன்று தேவர்களும் ஞான மயமாகிய முதல்வனைத் துதிக்கின்ற காட்சியைக் கண்ணாரக் கண்டு அவர் துதித்ததாகவும் குறிப்பிடுகிறார். இத்தலத்தில் கோயில் கொண்டுள்ள தேவியை அழைத்து அறிவின்மையும், வெகுளித்தனமும் நிறைந்த அடியேன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்துத் தன்னுடைய நினைவிலிருந்து நீங்காதிருக்கக் கருணாம்பிகையை வேண்டுகிறார். சிவபெருமானுடன் சிதம்பரத்தில் நடனமாடுகின்ற கருணை நாயகியின் திருவடித் தாமரைகளைப் பாடித் துதிக்கும் பேற்றினை தனக்கு அளித்து அருள்புரிய வேண்டுகிறார்.

"விடமிடுங் காள கண்டனா ருடனே
விமலியே சிதம்பரந் தன்னில்
நடமிடும் பாத பங்கயச் சரணம்
நாநினைந் தருகுநாள் புரிவாய்" (17)

தான் வேறு ஒருவருடைய எதிரிலே சென்று அவருடைய முகத்தைப் பார்த்து யாசித்து நின்று, தனது உள்ளம் நிறைவு பெறாமல் ஏங்கி நின்று வருந்தாதபடி கருணை புரிய வேண்டுகிறார். மேலும், இவ்வுலக மக்களோடு பகையும், இன்மையும் என்ற விருப்பு வெறுப்புகளினின்று விடுபடவும் வரமருள வேண்டுகிறார்.

"இரந்தினிக் கொருவர் முகமது பார்த்து
யேங்கிடா வகையதா யெனையும்
புரிந்திட வேணும் நின்னருள் தன்னால்
பிறவொரு தெய்வனா னறியேன்" (20)

என்ற பாடல் அடிகள் மூலம் வேண்டுகிறார். தனது குணத்தைப் பற்றியும் கூறு-கின்றார். அடியவர்களிடத்தில் நான் சிறிதும் அன்பு பாராட்டும் மனம் இல்லாதவனாகவும், அறிவில்லாமையும் வஞ்சனையும் கொண்ட நான் பிசாசத் தன்மை-யோடு மிகுந்த அற்பத்தனத்தை உடையவனாக இருக்கின்றேன். அப்படிப்பட்ட தன்மீதும் உள்ளம் இரங்கி அருள்புரிய வேண்டுகிறார்.

நான் பலவகைப் பிறவிகள் எடுத்தாலும் ஒவ்வொரு பிறவியிலும் உயர்ந்து விளங்க வேண்டும் என்று எண்ணினாலும் உனது அருள் இல்லாதவிடத்து அவை என்றும் நடைபெறாது என்பது உறுதி. என்மீது கருணை உள்ளம் கொண்டு என்னை வாழ்-விக்கும் பார்வதியே! நான் உன்னை நினைத்துச் செய்கின்ற தவம் ஒன்றேயானாலு அதன்பயலன் ஆறாகும்படியாக வரமளித்து அருள்புரிய வேண்டும் என்பதை,

"எத்தனை விதத்தில் எடுக்கினும் தழைக்க
எண்ணினும் உனதரு ளல்லால்
அத்தனை விறத்தி நிவ்வதிப் பலங்கள்
யாவது மொன்றினி யில்லை
சித்தம்வைத் தெனையும் வாழ்விக்கும் பரையே
செய்தவம் ஒன்றுநூ றாக" (31)

என்ற பாடல் அடிகளின் மூலம் தெரிவிக்கிறார். துணையற்றவனாகிய அடியேன் இந்நிலவுலகில் பெண்மை மோகத்தில் மயங்கி இடர் உறாதவாறு அருள் செய்து உனது திருவருள் நோக்கத்தினாலே காத்தருள்புரிவது தாயாகிய உனது கடமை-யாகும் என்கிறார். ஆசிரியர் அறுபத்து ஐந்தாம் பாடலில் தன்னைக் கள்வன் என்று கூறுகிறார். ஐந்தறிவு மட்டுமே பெற்று விளங்கும் கள்வனாகிய நான் நிலையான அறிவினை உடையேன் அல்லன். நல்லறிவுக்கு இடம்கொடாது கொடிய கொலைத் தொழிலை மேற்கொண்டு பாவியாய்த் தன் உள்ளமறிய பொய்ந்நெறி ஒழுகும் மாதரை விரும்பி அலைபவனாவேன். என்னுடைய இத்தீச் செயல்களை நீக்கி அருள்புரிவாயாக என்றும் வேண்டுகிறார். அடியவர்களால் புகழ்ந்து துதிக்கப்பெறும் அன்னையாகிய கருணாம்பிகையைத் தவிர வேறொரு தெய்வத்தை என் மனதிலும் நிறையாதவாறு எனக்கு அருள்புரிந்து என்னை ஆட்கொள்ள வேண்டு-கிறேன்.

"சிந்தனை யுன்னை யந்தியும் பகலும்
    தெரிசினை வெய்வது முன்னை
வந்தனை யுன்னைப் புந்தியில் மறவார்
    வாழ்த்துவார் தோத்திர முன்னை
உந்தனை யல்லால் வேறொரு தெய்வ
    உணர்கிலாப் படிதா யெனையும்
வந்தனை யாட்கொள் புக்கொளிப் பதியில்
    வளர்பெருங் கருணைநா யகியே" (66)

இவ்வுலகத்தில் நிலையில்லாத பொய்யான இன்பச் சுகத்தையே உள்ளத்தில் தேக்கியவர்களாய் ஆடவர் உள்ளத்தில் மயக்கத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றவர்களாய் விளங்கும் மகளிருடைய கலவி இன்பத்திலே மூழ்கிக் கிடக்கும் துன்பச் செயலானது என்னுடைய தூய்மையான உள்ளத்தில் ஊறிவிட்ட போதிலும் உனது திருவடிகளை அடியேன் மறந்திடாதவாறு நிலைபெறச் செய்வாயாக. அதேபோல் என்னிடத்தில் மிகுதியான செல்வம் சேர்ந்து செருக்குறச் செய்தாலும் பெருந்துன்பமானது என் உள்ளத்தில் குடிகொண்டாலும் நான் உன்னுடைய திருவடிகளை மறந்திடாவகை அருள் செய்ய வேண்டும் என வேண்டுகிறார்.

தெருவிலே வருவோர் போவோராகிய ஆடவர்கள் கண்டு மயங்குமாறு முகத்திலே மஞ்சளைப் பூசி வெளியழகு தோன்ற அலங்கரித்துக் கொள்ளுவதும், அந்த ஆடவர்களிடத்திலே வலிய சென்று இனிக்க இனிக்கப் பேசுவதுமாகிய செயல்-களினால் காசினைப் பறித்து வாழும் இயல்புடையோர் விலைமாதர் என்று விலை-மாதரின் இயல்பைப் பற்றியும் கூறி, அவர்களது இளமையும், அழகும் வாய்ந்த நகில்களைக் கண்டு, அவர்கள்மீது மோகம் கொண்டு சிற்றின்பமாகிய மயக்கத்திலே மூழ்கித் துன்பப்பட்டு இழிசொல்லைப் பெற்று வருந்தாதவாறு காத்து அருள்-புரிவாயாக எனவும் கருணை நாயகியிடம் வேண்டுகிறார். மேலும், விலைமாதர்கள் மார்பில் முத்து மாலையும் பிற அணிகலன்களையும் அணிந்து அழகுக்கு மேலும் அழகு செய்து, அப்போது பறித்த மலர் போன்று தூய மெல்லிய ஆடையினை உடுத்தி ஆடவர் முன்னிலையில் உலவித் திரியும் மகளிரின் பேச்சு, பார்வை முதலான மாயச் செயல்களுக்கு அடிமையாகி வருந்துவது என்றுமே துன்பம் தரத்தக்கதாகும். காமுகர்கள் கண்டு மயங்குமாறு உடம்பைப் பகட்டாக அழகுபடுத்திக் காட்டும் தன்மான உணர்வு அற்ற மகளிர்மேல் நாடும் உள்ளத்து ஆசை மிகவும் கொடியது எனவும் கூறி, அத்தகைய ஆசைகளையெல்லாம் அடியோடு விட்டொழித்து உன் திருவடிகளைத் துதிக்க தனக்கு அருள்புரிய வேண்டுகிறார்.

மேலும், சிற்றின்பத்தைப் பற்றிக் கூறுகையில், இவ்வுலகில் அறிவில்லாத-வர்களே உடலின்பமாகிய சிற்றின்பத்தைப் பெரிதென விரும்புவார்கள். ஆனால் உன் திருவருளை நம்பி வழிபடுபவர்கள் உனது திருவருளால் என்றும் நிலைத்து நிற்கக்-கூடிய பேரின்பத்தைப் பெற்றுப் பரமகதி அடைவார்கள் என்று கூறுகிறார். இவ்-வுலகப் பொருட் செல்வங்களும் மற்ற அனைத்து இன்பங்களும் விரைவில் அழியக்-கூடிய மாயத்தன்மை கொண்டதாகும் எனக்கூறி, நிலையில்லாததும், அழியக்-கூடியதுமாகிய இவ்வுலக இன்பம் என்னும் மாயையில் மூழ்காமல் இருக்க அருள்புரிய வேண்டுகிறார்.

மேலும், திருப்புக்கொளி நாயகியின் பெருமைகளைக் கூறி, நான்மறை-களெல்லாம் உனது பெருமையை எடுத்துக்கூறும் வல்லமை அற்றனவாகும். அப்படிப்-பட்ட உன்னைத் துதிக்க வேண்டும் என்ற பெரு விருப்பத்தினால் நீ எழுந்தருளியுள்ள

இத்திருத்தலத்தை விட்டு நீங்க மாட்டேன் என்று அன்பினால் அடம்பிடிக்கிறார். கடுகடுப்பு நிறைந்த மனத்தையுடையவனாகிய அடியேன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து அருள்புரிய வேண்டும் எனவும், என்றும் உன்னையே துதி செய்யவும் உயர்ந்ததாகிய பெரும் பேறு அடையவும், நற்பொருளை ஆழ்ந்தறியவும், எம்-பெருமாட்டியாகிய நீ பெற்ற வெற்றியை யெல்லாம் புகழ்ந்து உரைக்கவும் உனது மேலான அருளை எனக்குத் தந்து உதவினாய் எனவும், உனது நன்றியை என்றும் மறவேன் எனவும் புக்கொளிப்பதி கருணை நாயகி தனக்கு அருள் செய்ததையும் கூறுகிறார். மேலும், உனது திருவருளால் எனது கொடிய தீத்திறங்களையெல்லாம் அடியோடு விட்டொழிப்பேன் எனவும் உறுதி கூறுகிறார்.

மேலும், ஓம் நமசிவாய சங்கரி என்ற தொடரை உயர்ந்த உள்ளத்-தோடு மனத்திலே நிறுத்தி உன்னை நினைத்து எனக்கு இயல்பாகவுள்ளதும், ஒழுக்க வழுவாகியதும், காமம் முதலாகிய தீச்செயல்களுக்கு இடமளிப்பதுமாகிய தாமத குணத்தை, அடியோடு விட்டொழிப்பேன் எனவும், ஐம்பொறியடக்கல், ஞானம், தவம், பொறை, அருள், மேன்மை, மோனம், வாய்மை ஆகிய எண்குணங்களாகிய சாத்வீக குணத்தால் என்னுடைய ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வேன் எனவும், உறுதி கூறுகிறார்.

அறியாமையாகிய ஏழ்மையினாலே ஐம்பொறிகளும் மயங்கி அம்மயக்கத்-தினாலே அறிவில்லாரிடத்தில் உனது பெருமைகளையெல்லாம் வினவி அதனால் இழிவுப் படாதவாறு எனக்கு அருள்புரிய வேண்டும் என்கிறார். தன்னுடைய அறியா-மையாகிய வறுமைகள் நீங்க உள்ளம் இரங்கி அருள்புரிய வேண்டுகிறார்.

மேலும், துன்பங்கள் நிறைந்த இந்நிலவுலகத்தில் தன் தீவினைகள் அகலு-தற்குரிய தான தர்மங்களாகிய கொடைச் செயல்களைப் பலன் கருதாது செய்வோர் யாருமில்லை எனக்கூறி, தாங்கள் மேற்கொண்ட செயல்களிலே சுய-நலமே மிக்கு விளங்கப் பொதுநலமோ பேறு பெறும் பயனோ இன்றி பொய்யான செயலென்று எண்ணிப் பலவகையிலும் தவறுபுரிந்து வருகின்றேன். அறிவு திரிந்து இவ்வாறான தவறான செயல்களை நாள்தோறும் செய்து திரியும் எனது குற்றத்தை

மன்னித்து மேலும் அவ்வாறான குற்றத்தைச் செய்யாதவாறு எனக்கு அருள்புரிய வேண்டும் என்றும் கருணை நாயகியிடம் வேண்டுகிறார்.

சீதமும், இரத்தமும் நிறைந்த இந்த உடலிலே செயற்கை வினைகள் பலவும் சேர்ந்து விளங்குகின்றன. துன்பம் தருவனவாகிய இலட்சக்கணக்கான துவாரங்களை உடையதாகவும் விளங்குகிறது. அவற்றில் பலவகை நோய்களைக் கொண்ட வெற்றுச் சடலமாகவும் இவ்வுடல் விளங்குகிறது. மேலும், மாறுபட்ட தன்மைகளையுடைய இராசதம், சாத்வீகம், தாமதம் என்னும் மூன்று குணங்களும் அவற்றால் ஆகும் பலவகைச் செயல்களும் உடையதாக அமைந்துள்ளது. அக்-குணங்களுக்கு அடிமைப்பட்டு நோய்களைப் பெறாதவாறு அருள்புரிய வேண்டுகிறார்

மேலும், நல்ல அறிவுச் சிந்தனை என்பது சிறிதுமில்லாத உலோபி-களைப்பற்றிக் கூறி, உலோபிகள் உன்னை வணங்கும் எண்ணத்தைச் சிறிதும் கொள்ளாதவர்கள். உயர்ந்த பலனைத் தருகின்ற இறைவனது பெருமை நிறைந்த கதைகளைச் சிறிதும் கேட்டு அறியாதவர்கள். உன்னுடைய திருவருள் செயல்களை உள்ளத்தால் எண்ணிப்பார்க்கும் தகுதியற்றவர்கள். இப்படிப்பட்ட நல்ல அறிவுச் சிந்தனை என்பது சிறிதுமில்லாத மக்கள் இந்நிலவுலகத்திலே இருந்தும் பயனேதும் இல்லை எனக்கூறி, தான் அத்தன்மை அடையாதவாறு நற்றொண்டு புரியும் மானிடனாக அடியேனை ஆக்கி அருள்புரிய வேண்டும் என வேண்டுகிறார்.

மேலும், இனிய மொழியாகிய தமிழ்மொழியிலுள்ள இலக்கணங்களின் தொகை, வகை, விரி என்னும் தன்மைகளை அறிய வேண்டும் என்றும், இலக்கண இலக்கியங்களில் அமையும் சொற்களையும் அவற்றின் உயர்ந்த பொருட்களையும் அறிய வேண்டும் என்கிறார். மேலும், பாக்கள், பாவகைகள், பா இனங்கள் என்பவற்றில் அடங்குகின்ற எழுத்து, அசை, சீர், தளை, தொடை முதலிய உறுப்புக்களையும் ஆழ்ந்தறிய வேண்டும் என்றும் கூறி, எழுத்து வடிவமும், ஒலி வடிவமும் உடைய சொற்கள் நெடில், குறில் என்னும் குறியீடுகள், நேர்நிரை என்னும் ஒலித்தன்மைகள் மெய்யென் மூவினங்கள் எங்களின் தொகுதிகள், மங்கலச் சொற்கள், தொகுத்துக் கூறுகின்ற உயர்ந்த தன்மைகள் ஆகியவற்றை எங்களுக்கு

அறிவித்து அருள்புரிய வேண்டும் என்று பொது நிலையாகவும் கருணை நாயகியிடம் வேண்டுகிறார்.

மேலும், பிரமனைப்பற்றி கூறுமிடத்து, அவன் இம்மனிதப் பிறவியைத் தோற்றுவித்தவன் என்றும், மனிதரின் அறிவில் ஆசை நிறைந்து விளங்குமாறும், வாழ்க்கை உயருமாறும் உயர்ந்த நல்வழியிலே தோன்றுகின்ற செல்வமானது பெருகுமாறும் திருமாலின் உந்திக் கமலத்திலே தோன்றியவனாகிய பிரமதேவன் அமைத்துவிட்டான் என்பதாகக் கூறி, உள்ளத்தைத் தூய்மையாக்கி உயர்ந்த நினைவோடு சிந்தித்துப் பார்க்கும்போது இச்செயல்களெல்லாம் வெற்று ஆரவாரச் செயல்களாகவே தோன்றுவதாகக் கூறி இச்செயல்களையெல்லாம் விடுத்து உன்னையே நினைத்துத் துதிக்க அருள்புரிய வேண்டும் என்றும் வேண்டுகிறார்.

மேலும், இல்வாழ்க்கையைப் பற்றிக் கூறுமிடத்து இரவு பகல் எந்த நேரமும் உன்னையே துதித்து வாழ்க்கை நடத்த அருள்புரிய வேண்டும் என்று கூறி, இல்லத்திற்கு அழகு தருவதாகிய மக்கட்பேறு உயர்ந்ததாக அமைய அருள்புரிய வேண்டும் என்கிறார். செயல்களிலே முயற்சியும், செய்தொழிலிலே உயர்வும் அடைய அருள்புரிய வேண்டும் என்றும் கூறி, கல்வி, அறிவு, இரவலர்க்கு தல், சான்றோர்க்கு அருளல் ஆகிய நற்பணிகளில் ஈடுபடவும், அந்நற்பணிகளைச் செய்து முடிப்பதற்குரிய செல்வத்தையும் கொடுத்து, இடம், பொருள், ஏவல் என்ற மூன்றையும் அறிந்து நடக்கவும் அருள்புரிய வேண்டுகிறாள்.

மேலும், கருணை நாயகியை, சிந்தனைக்கரசே! என அழைத்து, உனதருளால் எனக்குக் கிடைத்த வரத்தின் பயனாய் எவ்விடத்திலே தோன்றுகின்ற செய்கைகள் எல்லாம் உயர்வடைய வேண்டும் எனக் கேட்டு, அந்த உயர்வினை தந்தெனைக் காப்பது உன் கடமையாகும் எனவும் கூறி அதனால் இந்த நிலவுலகத்தில் பலவகைப் பெருமைகளும் உண்டு. இப்படிப்பட்ட கருத்துக்களை உடையவனாகிய அடியேன் உன்னைப் பாடித் துதிக்கிறேன், எனது நினைவின்படியே என்னைக் காத்து அருள்புரிவாயாக! என்றும் ஆசிரியர் தன் நிலைகளைப் பற்றிக் கூறி தனக்கு அருள்புரிய வேண்டுகிறார்.

***

உவமைச் சிறப்பு

தெரிந்தது கொண்டு தெரியாததை விளக்குவது உவமை எனப்படும்.

"பண்பும் தொழிலும் பயனும் என்றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்தி
ஒப்புமைத் தோன்றச் செப்புவது உவமை"[10]

என்பது தண்டியலங்காரம். உவமையைக் கையாளுவதின் வழி நூலாசிரியர்கள் கடினமான பல செய்திகளை எளிமையாக விளக்கிவிடுவர். இந்த நிலை 'புக்கொளி மாலை'யில் பலவிடத்தும் கையாளப்படுகிறது.

இவ்வுடலானது உப்புப் பொதிந்த பாண்டத்தைப் போன்றது. வெறும் காற்றை அடைத்த பையினைப் போன்றது என்பன உடலுக்கு ஆசிரியர் காட்டும் உவமைகளாகும். அவ்வுடலில் பொதிந்த ஒன்பது வாசலும் ஊத்தையாகும் என்பன அவர் தரும் விளக்கம்.

"உப்பது பொதிந்த உடலது தனிலே
ஒன்பது வாசலும் ஊத்தை" (37)

என்பது பாடல்.

இவ்வுடம்பானது எண்பது கோடி நினைவினை உடையது. கோடிக்கணக்கான எண்ணங்களையுடையது. இவ்வுடலின் வாழ்க்கையோ தோல் பொம்மைக் கூத்தினை நிகர்த்தது என்பது வாழ்க்கைக்கு ஆசிரியர் காட்டும் உவமையாகும் (44).

பிற அணி நயங்கள்

உருவகம்

உவமை வேறு, பொருள் வேறு என்று பிரித்துக்காட்டாமல் இரண்டையும் ஒன்றாகவே கூறுவது 'உருவக அணி' எனப்படும்.

"உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டின ஃ துருவமாகும்"[11]

என்பது தண்டியலங்காரம்.

புக்கொளி நாயகியின் தலைவராகிய எம்பெருமான் உலக உயிர்களின் உடலாய் அமைபவர்; உயிராய் விளங்குபவர்; அவ் உயிர்களுக்குத் துணையாய் நிற்பவர்; உயர் அண்டமாக விளங்குபவர்; புவனங்களாகி ஒளிர்பவர்; கடல், மலை, என்னும் பொருள்களாய் நிற்பவர். மடல், ஓலை, எழுத்து, அவ்-எழுத்தின் பொருள், அப்பொருளின் பயன் என்னும் நிலையில் விளங்குபவர் எனப்-பலவகையிலும் இறைவனை உருவகப்படுத்துகிறார் ஆசிரியர்.

முரண்

சொல்லாலும், பொருளாலும் மாறுபட்டக் கருத்துக்களை ஒரே பாடலில் வைத்துப் பாடுவது முரண் அணி எனப்படும்.

"காலையம் போது வாலையைத் தொழுது
கருதிடும் திரிபுரை உச்சி
மாலையம் போது புலனயந்தத் தொழுவோர்
மனந்தனி லமர்ந்தருள் தேவி" (72)

"காலையு மாலை யுச்சியும் போது
கருதுவர் நெஞ்சகந் தனிலே" (73)

"அந்தியும் பகலும் உந்தனைத் தொழுது" (40)

இவ்வடிகளுள் காலை, மாலை, உச்சி என்னும் காலங்கள் முரண்பட அமைந்தவை-யாகும்.

"ஆணுமாய்ப் பெண்ணாய் அகில காரணியாய்
அண்ட ரண்டங்களு மாகி" (54)

"அல்லவை தேய்வ அறமது பெருக
... ...
நல்லவை வருக பொல்லவை யகல
... ...
புல்லரை யகல நல்லரை நணுக" (33)

இவ்வடிகளுள் ஆண், பெண் என்பன முரணாய் அமைந்தவை.

அறம் - அல்லவை; தேய - பெருக

நல்லவை - பொல்லவை; வருக - அகல

புல்லர் - நல்லர்; அகல - நணுக

என்னும் முரண் சொற்கள் ஒரே பாடலுள் பல படியாய் அமைந்து பொருள் சிறப்பைத் தந்து ஓசை நயம்பட விளங்குவது முரண் அணிக்கு சிறந்த எடுத்துக்-காட்டாகிறது.

தொழுவது, தொண்டு பட்டிருப்பது, நேத்திரமதனில் காண்பது, நெஞ்சக நேயம், வணங்குவது, வாழ்த்துவது, ஆகிய செயல்கள் கனவிலும் நனவிலும் உன்னைப் பற்றியனவே (42) என்னும் கருத்துகள் ஒரே பாடலில் அமையும் செயல் ஒழுங்கு பற்றிய அணி நயம், சுவையுடையது.

பிற
--

"வாள்தடங்கண்ணி (18) என்னும் தொடருள் கண்ணுக்கு உவமையாக வாளினைக் கூறுவது போன்ற தொடர்கள் பல உவமைக்குச் சான்றாகும். பாதபங்கயம் - (36) போன்ற உருவகத்தொடர், நாககங்கணி - தண்ணிலாக கண்ணி போன்ற காரணப்பெயர்த் தொடர் ஆகியவை அழகுற அமைந்தது.

எதுகை, மோனை

பெரும்பாலான பாடல்கள் அடியெதுகையால் அமைந்தவையாகும். அடிமோனைப் பாடல் ஒன்றேனும் அமையவில்லை.

அடிக்குறிப்புகள்

1. திருமலை நான்மணிமாலை, சிறப்புப் பாயிரம் - 7.

2.

3அ. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம், பா.7.

3ஆ.

4. சித்தர் பாடல்கள், ப.191.

5. மேற்படி, ப.199.

6. மேற்படி, ப.242.

7. மேற்படி, ப.249.

8. திருக்குறள்-269.

9. சித்தர் பாடல்கள், முன்னுரை, ப.10.

10. தண்டியலங்காரம், நூ. 31.

11. மேற்படி, நூ. 36.

***

அரிஓம் நன்றாக குரு வாழ்க

புக்கொளி மாலை

வலப்புறம் பெற்றவள்

1. சீருறு மங்கை பராபர [1]வனிதை
சிறந்திடும் ஆயிரம் ஆண்டு
பேருறு மெழுந்து அயிந்துடன் மூன்றும்
பெருகநீ [2]உருவது செபித்துக்
காருறு கங்கை காசியில் வாசி
சதாசிவன் [3]வலப்புறம் பெற்றாய்
வாருறு கொங்கைப் [4]புக்கொளிப் பதியில்
[5]வளர்பெருங் கருணைநா [6]யகியே. (க)

திருப்புக்கொளி என்னும் அவினாசித் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகியே! எல்லாவகைச் சிறப்புகளையும் பெற்று விளங்கும் தேவியே! எங்கும் நிறைந்த நிலையில் அனைத்துமாய் நிற்கும் அம்மையே! நீ பெரும் பேற்றினைத் தரத்தக்கனவாகிய 'அரிஓம்' என்னும் மூவெழுத்து மந்திரத்தையும், 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தையும் ஓயாது சொல்லிச் சொல்லித் துதித்தாய். அந்தத் தவத்தின் காரணத்தால் புண்ணிய நதியாகிய கங்கையின் கரையிலே எழுந்தருளியுள்ள சதாசிவ மூர்த்தியாகிய எம்பெருமானின் வலதுபுறத்-திலே இடையறாது வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாய்.

பராபர நிலை - உண்மையும் இன்மையுமாகிய நிலை, எங்கும் நிறைந்த நிலை; சீர் + உற - பெருமை பொருந்திய; பராபரம் - பரம் + அபரம்; எழுத்து - எழுத்து ஐந்தும் மூன்றுமாவன - 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரம் (பஞ்சாட்சர மந்திரம்), அரிஓம் என்னும் மூவெழுத்து மந்திரம்; உருசெபித்தல் - மந்திரத்தைப் பலமுறை உச்சரித்தல்; சதாசிவன் - பஞ்ச கர்த்தாக்களில் ஒருவர், இலிங்கமாய் அருவுருத் திருமேனி கொண்ட சிவ வடிவம்; வலப்புறம் - திருப்புக்கொளியில் உமாதேவி இறைவனுடன் எழுந்தருளியுள்ள நிலை.

1. வனைதை 2. உருவது 3. வலப்பிறம்
4. புக்குழி 5. வழர்பெறங் 6. வாயகியே

***

கடவுளர் வணக்கம்

2. அரிபிர மாதி தேடுதற் கினிய
அரியதென் காசியின் தலத்தில்
கரிமுகன் தன்னோ டறுமுகன் காரி
கதிரவர் நந்திதண் டேசன்
திரள்புயத் [1]தவரா [2]யறுபத்து மூவர்
[3]சின்மலர் முதலைவந் தித்தேன்
வருதிரு நகராம் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (உ)

கருணை நாயகியே! திருமாலும் பரமனும் முறையே திருவடியையும் திரு-முடியையும் காண விரும்பிய காலத்து அவர்களுக்குக் காண இயலாதனவாகி தெக்கணக் காசி எனப்பெறும் அவிநாசித் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள அத்திருவடி, திருமுடிகளைக் கண்டு வணங்கும் பேறு பெற்றேன். அத்திருத்தலத்தில் யானை முகத்தோனாகிய விநாயகப் பெருமானோடு ஆறு முகங்களையுடையன-வாகிய முருகப்பெருமான் வீற்றிருக்கவும் இந்திரன், சூரியன், நந்திதேவர், தண்டேசுவரன் முதலான அறுபத்து மூன்று தேவர்களும், ஞானமயமாகிய முதல்வனைத் துதிக்கின்ற காட்சியைக் கண்ணாரக் கண்டு துதித்தேன்.

அரிபிரமாதி - அரி, பிரமன் முதலானோர்; அரி - திருமால்; தென்காசி - அவிநாசி, திருப்புக்கொளி என்னும் சிறப்புப் பெயர் பெற்ற திருத்தலம்; கரிமுகன் - யானைமுகக் கடவுள்; ஆறுமுகன் - முருகப்பெருமான்; காரி - இந்திரன்; கதிரவன் - சூரியன்; தண்டேசன் - தண்டேசுவரன்; அறுபத்துமூவர் - அசுவினியர், ஆதித்தர், உருத்திரர், வசுக்கள் முதலான தேவர்கள் அறுபத்துமூவர் என்பர்; சின்மலர் முதல் - ஞானமே வடிவமான முதல்வர்; பரமேசுவரன்; வந்தித்தல் - துதித்தல்.

1. துவரா 2. யறுபத்தி 3. சென்மலற்.

***

தலப்பெயர்

3. தழல்நடம் புரிய அரியயன் தேவர்
தாள்புகுந் தறதல்புக் கொளியா
மழல்விடை யுடையோன் அற்புத விநாசம்
மாற்றலால் திருவவி னாசி

அழகுசா [1]றவியும் சுபவெண் கரிமுன்
[2]அர்ச்சிக்க வாரண வாசி
[3]வளமிகு வளபால் தெட்சண காசி
வளர்பெருங் கருணைநா யகியே.

சிவபெருமான் சங்காரத் தாண்டவமாகிய தழல் தாண்டவம் ஆடிய காலத்து உலகமெல்லாம் தீப்பரவ அதனால் அஞ்சிய திருமால், பிரமன் முதலான தேவர்கள் அனைவரும் தேவர் உலகத்தை விட்டு நீங்கி வந்து புகுந்து ஒளிந்திருந்து உயிர்-பெற்ற தலம் என்ற காரணத்தால் இது திருப்புக்கொளி என்னும் பெயர் பெற்றது. இடபத்தை வாகனமாகக் கொண்டு அழல் ஏந்தி விளங்கும் சிவபெருமானின் அழிவற்ற அற்புதச் செயல்கள் பலவும் நடைபெற்ற இடமாதலின், அவிநாசி என்னும் பெயர் பெற்றது. அழகிய துதிக்கையினையுடைய வெள்ளை யானையானது அர்ச்சிக்க வாரணவாசி என்னும் காசியிலிருந்து தென்னாட்டின் கண் உள்ள இந்த அவிநாசியில் இலிங்க வடிவமாய் எழுந்தருளிய இறைவனின் திருத்தலம் ஆதலின் இது "தெட்சண காசி" என்று பெயர் பெற்றது.

தழல்நடம் – தீத்தாண்டவம், சங்கார தாண்டவம்; அரி – திருமால்; அயன் – பிரமன்; அழல் – தீ, சிவபெருமான் ஏந்திய நெருப்பு; விடை – இடப வாகனம்; விநாசம் – பாழடைதல்; அவிநாசம் – அழிவற்றது; கரி – யானை; தெட்சணம் – தெற்குத்திசை.

1. றவியுங் 2. அச்சிக்க 3. வழமிகு

***

பார்வதி தவம்

4. அழல்நடம் புரிய பிரணவந் தன்னி
லலைந்திடுங் குறையது தவிர
[1]நளினமாந் தேவர் [2]மறவர்சூழ்ந் தற
நீளபா திரைத்தருக் கீழ்
உளமிகு தங்கிப் புரிந்திடக் காசி
உத்தமன் வந்துதென் பாகம்
வளமிகு தலத்தில் வரமுனக் கென்றார்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி நாயகியே! அக்கினித் தாண்டவஞ் செய்து தம் திருவுருவத்தை மறைத்தருளின சிவபெருமானை அத்தாண்டவ காலத்துப் பிரிந்திருந்த குறையை நீக்கும் பொருட்டுப் பார்வதி தேவி அவரை நோக்கிப் பூசிக்க எண்ணி அவிநாசியி

பூசித்திருக்கும் காலத்து காசித்திருத்தலத்து எழுந்தருளிய சிவபெருமான் திரு-வுள்ளம் மகிழ்ந்து காட்சியளித்து எப்பொழுதும் பார்வதிக்கே உரித்தாகிய தனது இடப்பாகத்தை விடுத்து வலப்பாகத்தை அவருக்குக் கொடுத்தருளினார். அப்போது விநாயகர், முருகக்கடவுள், நந்திதேவர், சிவகணங்கள், கனிடேசர் முதலானோர் புடைசூழ்ந்திருக்க இருவருமாகக் காட்சியளிக்கும் திருப்புக்கொளிப்-பதியில் வீற்றிருக்கும் பேற்றினைப் பெற்றாய்.

அழல்நடம் - தீத்தாண்டவம்; பிரணவன் - பிரமத்தின் வேறாகாத சிற்சோதி; காசி உத்தமன் - சிவபெருமான்; நளினம் - இங்கிதம்; தென்பாகத்தலம் - தென்காசி எனப்படும் அவிநாசி.

1. நறினமாந் 2. சூள்ந்தற

***

பிரமன் தவம்

5. கருடவா [1]கனரவ ருடநயன மீசன்
கதிர்முடி கண்டனன் [2]என்று
[3]திருடதைக் கூறச் சிவன்சபித் தப்பால்
செல்கென முனிந்துகோ பிக்க
தரைபட [4]வீழ்ந்து தோத்திரஞ் செய்யத்
தவிருமித் தலமெனத் தலத்தில்
[5]வருடர [6]யயன்செய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ரு)

சிவபெருமானின் அடிமுடிகளைக் காணச்சென்று திருவடியினைக் காண இயலாமல் திரும்பியவரும் கருட வாகனத்தை உடையவரும் திருமாலிடத்தில், தான் நெற்றிக் கண்ணை உடையவராகிய சிவபெருமானின் ஒளிபொருந்திய திருமுடியினைக் கண்டு திரும்பியதாகப் பொய்ச் சொல்லித் திருமாலை நம்புமாறும் செய்தான், பிரம-தேவன். பிரமதேவனின் செயலை அறிந்த சிவபெருமான் அங்குத் தோன்றி "நான்முகனே! பொய்யுரை புகன்ற உனக்குக் கோவிலும் வழிபாடும் இந்நிலத்தினில் இல்லாமற் போகட்டும்; இனி என் முன் நில்லாது ஒழிக!" என்று மிகவும் கோபித்துச் சாபம் கொடுத்தார். அச்சாபத்தை ஏற்ற பிரமதேவன், தனது எட்டு உறுப்புகளும் தரையிலே பொருந்துமாறு விழுந்து பணிந்து ஐயனே! என் பிழை பொறுத்தருள்க என வேண்டினார். அந்தச் சாப விமோசனம் பெறக்-கூடிய திருத்தலம் தெக்கணக் காசியாகிய அவிநாசியே எனக்கூற அதன்படி இத்-திருத்தலத்திலே இருந்து இறைவன் அருளைப் பெறுவதற்காகப் பல ஆண்டுகள்

பிரமதேவன் தவம் செய்தார். அத்தகு உயர்ந்த திருப்புக்கொளியில் எழுந்தருளியிருப்பவள் கருணாம்பிகையாகும்.

கருடவாகனர் - திருமால்; நயன ஈசன் - நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான்; திருடு - பொய்யான சொல்; முனிதல் - வெறுத்தல், கோபித்தல்; தரைபட வீழ்தல் - அட்டாங்க வணக்கம் செய்தல். அட்டாங்கங்களாவன: மோவாய், செவிகள் இரண்டு, தலை, புயங்கள் இரண்டு, கைகள் இரண்டு என்னும் எட்டு உறுப்புகள்; தவிர்த்தல் - நீங்குதல்.

1. நரும 2. வென்று 3. திருடரைக்
4. வீன்ந்து 5. வருடரை 6. நயன்செயி

***

ஐராவதம் சாபம் நீங்கல்

6. கரியலக் [1]களிறு யிருநிலத் [2]திழிந்து...
கானகக் களிறுடன் கலந்து
[3]திரிகிற நாளில் அசுரர்தன் [4]வதையால்
தேவர்கோ சபிக்கநா [5]ரதன்சொல்
பரிந்துதன் [6]பெயரால் [7]தீர்த்தத்தில் படிந்துதான்
பன்னிரு வருடம்பூ சிக்க
வருகிரிக் கதிர்சேர் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

கருமை நிறமல்லாது, வெண்மை நிறத்தோடு கூடிய 'ஐராவதம்' என்னும் இந்திரனுடைய யானையானது துருவாசர் சாபம் பெற்று இந்நிலவுலகத்திற்கு வந்து காட்டு யானைகளுடன் கூடித்திரிந்து வந்தது. தன் யானையின் நிலையை அறிந்த தேவேந்திரன் அசுரர்களின் கொடுமையிலிருந்து நீங்குமாறு அருள்புரிந்தான். அதன்படி நாரதன் கூற்றை ஏற்ற அவ் யானையானது ஐராவதத் தீர்த்தம் ஒன்றினைத் தோற்றுவித்து அத்தீர்த்தத்தில் மூழ்கி பன்னிரண்டு ஆண்டுகள் திருப்புக்-கொளி திருத்தலத்திலே இறைவனைப் பூசித்து வந்தது. அதன் பயனாகத் தன் சாபம் நீங்கித் தேவருலகம் அடைந்தது. இத்தகைய சிறப்புக்குரியது இத்-திருத்தலம்.

கரியலக்களிறு - கருமையில்லாத அவ் யானை, அது இந்திரனின் வெள்ளை யானையாகிய ஐராவதத்தைக் குறித்தது. இழிந்து - இறங்கி வந்து; கானகக் களிறு - காட்டு யானை; திரிகின்ற நாளில் என்பது திரிகிற நாளில் எனக் கொச்சையாக அமைந்தது. தன் பெயரால் தீர்த்தம் - ஐராவத தீர்த்தம். படிதல் - மூழ்குதல்; கிரி - மலை.

1. கன்று 2. திரித்து 3. திரியிற் 4. வதையால்தீ
5. வாரதன் 6. பெயரால்த் 7. தீர்த்தத்திலி.

***

இராவணன் தவம்

7. அந்தநாட் டிலங்கை [1]இராவணன் பாட்டின்
அருமகப் பிறவுநீ ரதனில்
சிந்தையை [2]நாட்டி அயன்றனைக் கருத
தெரிந்தயன் வந்துதென் காசி
[3]எந்தைபால் செல்கென் றருளது புரிய
எய்திமூ வருடம்வா சிக்க
வந்ததா டகைக்கு அருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (எ)

இலங்கை நாட்டை அரசாண்டவனும், இன்னிசை இசைப்பதில் வல்லவனும் விசிரவசு, கேசகி ஆகியோரின் அரிய மகனுமாகிய இராவணன், நீரில் நின்று, பிரமதேவனை நினைத்து உள்ளத்தைச் செலுத்தித் தவஞ் செய்தனன். இராவணன் முன் தோன்றிய பிரமன் இராவணனுடைய எண்ணம் எல்லாம் ஈடேறத் தென்காசித் திருத்தலத்திலே எழுந்தருளியிருக்கின்ற தன்னுடைய தந்தையாகிய சிவபெருமானிடம் செல்லுமாறு பணித்தார். அவ்வாறே இராவணன் தென்காசி நகரடைந்து மூன்று ஆண்டுகள் சாமகானம் பாடி இறைவனை மகிழ்வித்தான். அங்கு வந்த சுகேதுவின் மகளாகிய தாடகை, தன் கணவராகிய சுந்தனைக் கொன்ற அகத்தியரைச் சினந்து வந்து இத்திருத்தலத்திலே அருள் பெற்றாள். அத்தகு திருத்தலமே கருணாம்பிகை எழுந்தருளியுள்ள அவிநாசித் திருத்தலமாகும்.

பாட்டின் அருமகப்பிறவு – இன்னிசையில் அரிய மகப் பிறவி எடுத்தவன்; எந்தை – எம் + தந்தை – பிரமனின் தந்தையாகிய சிவபெருமான்; வாசிக்க – இசைபாட; தாடகை – சுகேதுவின் மகள், அகத்தியர் சாபத்தினால் அரக்கி வடிவம் பெற்றவள்.

1. ராவணன் 2. வாட்டி 3. யெந்தைபால்சி

***

நாககன்னி தவம்

8. தாழ்விலா நாக லோகத்தின் கன்னி
தயவுடன் திங்கள்மூ [1]வேமு

நாள்செலு மளவில் 2திராவிட தேச
நலஅரித் துவசன்வந் தவளை
வேள்மண 3முகிழ்ந்து கோயில்கோ புரமும்
வியன்பணி முடித்தவர் தமக்கு
4வாழ்கயி லாயி மருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (அ)

திருப்புக்கொளிப் பதியில் வீற்றிருக்கும் கருணை நாயகியே! வளம் பொருந்திய நாகலோகத்தில் ஆதிசேடனின் மகளாகப் பிறந்த நாககன்னி பெற்றோர் ஏற்பாடு செய்த திருமணத்தை வெறுத்து; அவிநாசித் திருத்தலம் அடைந்து சிவபெருமானைக் குறித்து இருபத்தொரு திங்கள் கடுந்தவம் இயற்றினார். அக்காலத்துத் திராவிட தேசத்து அரசனான அரித்துவசன் அவளைக் கண்டு மணம் முடித்துக் கொண்டான். பின் இருவரும் சிவலிங்கப் பெருமான் வீற்றிருக்கும் ஆலயத்தில் பல கைங்கரியமும் செய்தனர். நாகா-பரணம், இரத்தினாங்கி முதலிய ஆபரணங்கள் செய்து நாகக் கன்னி தீர்த்தமும் உண்டுபண்ணினார்கள். சித்திரைத் திருவிழாவும் நடத்தி வந்தார்கள். இவ்வாறு நீதி தவறாமல் அரசுபுரிந்து வந்து சிவபெருமானின் திருவடி நிழலை அடைந்-தார்கள்.

நாகலோகம் - கீழ் ஏழுலகிலொன்று; நாகலோகக் கன்னி - நாக கன்னிகை, ஆதிசேடனின் மகள்; அரித்துவசன் - திராவிட நாட்டு மன்னன்.

1. மூவெகு 2. திராவட 3. முகிள்ந்து 4. வாள்கயிலாய.

***

<u>வியாத வேடன் தவம்</u>

9. திருவடர் விந்தைக் கிரியதன் தென்பால்
செனித்திடு மொளிவன நகரில்
வருவடர் வியாத வேடனித் தலத்தில்
உய்தவஞ் செய்திடச் சிவன்வந்து
பெருவேடர் குலத்தில் பூபனுக் கருள்செய்
1பிள்ளையின் றளிக்கவன் 2வாழ்ந்து
உருவேடன் 3தனக்கு அருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

எம்பெருமான் வேடுவனாகிய அடியவருக்கு அருள்கொடுத்து உய்வித்த திருப்-புக்கொளி திருத்தலத்திலே எழுந்தருளியிருக்கின்ற கருணாம்பிகையே! இத்திருத்-தலம் எல்லாச் செல்வங்களும் நிறைந்த விந்திய மலையின் தென்புறத்திலே

அமைந்திருப்பது. சிறந்த அழகும் ஒளியும் மிக்கு விளங்குவது. இத்தலத்திலே சிவத்தொண்டராகிய தரும வியாத வேடன் என்பான் மகப்பேறு வேண்டி சிவபெருமானைக் குறித்து பெரும் தவம் செய்து வந்தான். அவனது அன்பிற்கு இரங்கிய சிவபெருமான் வேடர்குல தலைவனாகிய அவனுக்கு மகப்பேறு ஈன்று அருள்புரிந்தார். அவ்வேடன் மகிழ்ந்து வாழ்ந்த திருத்தலம் இந்நகரமாகும்.

திருவுடர் – செல்வம் நிறைந்த; விந்தைக்கிரி – விந்திய மலை; வனநகர் – அழகிய நகரம்; பூபம் – தலைவன், அரசன்; வியாதன் – தரும வியாதன்; கௌசிகன் என்னும் வேதியனுக்கு அறம் உரைத்த வேடன் என்பர். பிறவியால் வேதியன், ஒரு இருடியால் வேடனாகச் சாபம் பெற்றவன்.

1. பிள்ளைமீன் 2. வாள்ந்து 3. றனக்கு

***

அந்தணனுக்கு அருளல்

10. கெவுடதே சத்தில் மறையவன் திருடிக்
 [1]கெருடனா மறுபிறப் பிதனில்
அவடனாஞ் சங்கக் கன்னனுஞ் சானும்
 [2]அவரைக்கொன் றாலையப் பொருளை
கவருற [3]எண்ணி [4]இத்தலத் தீசன்
 காற்சிலம் பய்ந்துனாள் கருத்தில்
வவநின வதற்கு அருள்செய்புக் கொளியில்
 வளர்பெருங் கருணைநா யகியே. (ப)

வங்காள நாட்டைச் சேர்ந்ததாகிய கவுட தேசம் என்னும் நாட்டில் திருட்டுத் தொழிலை மேற்கொண்டிருந்த அந்தணன் ஒருவன் இப்பிறவியில் கருடனாகப் பிறந்திருந்தான். அவன் முற்பிறவியில் வஞ்சகர் கூட்டத்தில் ஒருவனாக இருந்து இறைவன்முன் முழந்தாளிட்டு வணங்கும் அடியவர்களைக் கொன்று, கோவில் பொருட்களையெல்லாம் திருடியவன். இப்பிறவியிலும் சிவபெருமான் திருவடிகளிலே அணிந்திருந்த சிலம்பைக் கவர வேண்டும் என்ற நோக்கத்தோடு ஐந்து நாட்களாக அப்பெருமானின் சிலம்பணிந்த அத்திருவடிகளையே தன் உள்ளத்தில் இருத்தி நினைத்திருந்ததற்காக இறைவன் அவனுக்கு அருள்புரிந்தார். அத்தகு சிறப்பு வாய்ந்தது அம்மையார் எழுந்தருளியுள்ள இத்திருத்தலம்.

அவடன் – நிந்தனைக்குரியவர்; கன்னன் – அங்ககாசன் (சூரி+குந்தி)

1. கெருடனாம் 2. யவரைக் 3. யெண்ணி 4. யித்தலத்

***

எஞ்ஞகுத்தனுக்கு அருளல்

11. முருகமர் நகரில் மெஞ்ஞன்கோ முட்டி
மோசனாந் [1]திருவவி னாசி
[2]திருவிழா தன்னில் சரக்குவிற் [3]றழகு
தேவடி பிறகுபோய்க் கோவில்
அருவைதன் [4]னழகு [5]பார்த்தவள் வீட்டி
லமுதுண்டு விக்குமெய் சோர்ந்து
வருகதி பெற்றான் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (யக)

அழகும் பெருமையும் நிறைந்த திருத்தலமாகிய தென்காசி மாநகரில் ஒரு-காலத்தில் பேரறிவும் ஆற்றலும் மிக்கவனாய எஞ்ஞகுத்தன் ஒருவன் கோமுட்டியர் இனத்திலே தோன்றி வாழ்ந்து வந்தான். அவிநாசியில் நடைபெற்ற ஒரு பெரிய திருவிழாவின்போது பல பொருட்களை விற்கும் பணியில் ஈடுபட்டு வியா-பாரம் செய்தான். அப்போது அத்திருவிழாவிற்கு வந்திருந்த அழகும் இளமையும் வாய்ந்த தேவடியாள் ஒருத்தியைக் கண்டு அவள்பின் சென்று அவளழகிலே மயங்-கியவனாய் அவளுடன் அவள் இல்லத்திற்குச் சென்றான். அவளிடத்தில் உணவருந்திய-போது உணவு விக்கி உடல் சோர்ந்து வாடினான். இறைவனை வேண்ட அவ-னருளால் உயிர்பெற்று இறைவனின் அடியவனாகிப் பேறுபெற்றான். அத்தகு பேற்றினை அளித்த திருத்தலமே கருணை நாயகி எழுந்தருளியுள்ள இத்திருத்தலமாகும்.

முருகமாநகர் - அழகு பொருந்திய நகரம்; மெஞ்ஞன் - மெய்ஞ்ஞான-முடையவன்; கோமுட்டி - எஞ்ஞகுத்தன் என்னும் செட்டி; தேவடி - தேவரடி-யாராகிய பெண்; அருவை - அரிவை, பெண்; வருகதி - உயர்ந்த பேறு.

1. திருபவு 2. திருவிளா 3. றளகு
4. னளகு 5. பார்தவள்

***

தருமசேனன் தவம்

12. சதுமுகப் புரத்தில் தருமன்சேர் சென்றன
[1]சபைதனில் திருவவி னாசி
புதுமைகேட் டுயர்ந்து [2]மனைவிய ருடனே
புண்ணியத் [3]தலத்தெழுந் தருள
விதிமுறை அனேக [4]தானதர் மங்கள்
விரும்பினன் மைந்தர்பெற் றுயர்ந்து
[5] ... புக்கொளிப் பதியில்

கருணாம்பிகையே! கௌதம நதியின் தீரத்திலே சதுமுகப்புரத்தை நீதி தவறாமல் ஆட்சி செய்து வந்தவன், தருமசேனன். அவன் பிள்ளைப் பேறின்றி வருந்தினான். சைவப்பிராமணர் ஒருவர் மூலம் புக்கொளிப் பதியின் பெருமையை அறிந்து அதனைத் தரிசிக்கத் தன் மனைவியர் இருவருடன் அவிநாசித் திருத்தலத்தை அடைந்தனன். பின் புண்ணிய நீராடி சிவார்ச்சனை புரிந்து கருணாம்பிகையிடம் தன் குறையிரந்து நின்றான். அம்பிகையின் அருளால் அக்கினி வருணனையும், இரணிய சேனனையும் மக்களாக அடைந்தான். பின் யாகஞ் செய்து தேக காந்தத்தில் சிவப்பதியை அடைந்து பேரின்பம் பெற அருள்புரிந்தவள் நீயே ஆவாய்.

சதுமுகப்புரம் – கௌதம நதிக்கரையிலுள்ள நகரம்; புண்ணியத்தலம் – திருஅவிநாசித் திருத்தலம்.

1. சபைதனில்த் 2. மனவிய 3. தலத்தெகுந்

4. தர்மங்கள் 5. வதிகதி

***

சுந்தரருக்கு அருளல்

13. கலியுகந் தாதி திருவவி னாசிக்
கங்காதன் சந்ததி வேண்டி
நெலிவுற மனைவி இருவர்தொண் டதுக்கு
நேர்ந்தனன் கருணைபின் னவர்க்கு
கெலிவுற [1]வளர்த்த [2]முதலையுண் டருது
கேவலமூ வாண்டதி லாரூர்
வலியசுந் திரர்சேயன் [3]றழைத்தபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

சிறப்பு வாய்ந்த புக்கொளியில் வாழ்கின்ற பார்வதியே! திருவவிநாசியில் வாழ்ந்த கங்கா என்னும் அந்தணன் தனக்குப் பிள்ளை வேண்டிச் சிவபெருமானை நோக்கி முறையிட்டான். இருமனைவிகளைக் கொண்ட சிவபெருமான் அவனது வேண்டுதலுக்கு இரங்கி அவனுக்குக் குழந்தை அருளினார். அக்குழந்தைக்கு ஐந்து வயதானபோது நீரில் இறங்கி விளையாடிய அக்குழந்தையை முதலை எடுத்து விழுங்கிவிட்டது. பெற்றோர் வருந்தினர். மூன்று ஆண்டுகள் கழிந்தன. அவிநாசித் திருத்தலத்திற்கு வந்த ஆரூரில் பிறந்த சுந்தரனார் குழந்தையை முதலை உண்ட செய்தி அறிந்து அக்குளக்கரைக்குச் சென்று சிவபெருமானை வேண்டி, "புரைக்காடு சோலை" என்னும் பதிகம் பாடச் சிவபெருமானது அருளால் சுந்தரனார் அச்சிறுவனை சேய் என்று அழைக்க அச்சிறுவன் உயிருடன் முதலை வாயிலிருந்து வெளிவந்தான். அத்தகைய பெருமை வாய்ந்தது நீ எழுந்தருளிய அவிநாசித் திருத்தலம்.

கலியுகம் - நம் நாட்டில் கையாளப்பட்டு வந்த ஆண்டுக் கணக்கு. இது கி.மு. 3152இல் தொடங்குகிறது. கங்கா - அவிநாசியில் வாழ்ந்த ஓர் அந்தணன்; நேர்தல் - அருளுதல்; சுந்தரர் - சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

1. வளத்த 2. முதளை 3. றளைத்த.

***

எலும்பு பூவாதல்

14. அந்தண னொருவன் தந்தைதன் [1]எலும்பை
அடைத்ததொரு கலசத்தி லதனைத்
தந்தலை வைத்து [2]இந்தநற் றலத்தில்
தானது பூவெனக் கண்டு
முந்தவோர் காசி [3]எலும்புகண் டரன்பின்
[4]மொழியறி விசேசமித் தலத்தில்
வந்திடப் [5]புட்ப மானபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

கருணை நாயகியே! ஒரு அந்தணன் இறந்துபோன தன் தந்தையின் எலும்பை ஒரு கலசத்தில் அடைத்து அதனை தம் தலைமீது வைத்து சுமந்து திரிந்து வந்தான். முன்பு ஒரு காலத்தில் காசியைச் சேர்ந்த ஒரு முதியவரது எலும்பைக் கண்டு அவருக்கு மொழியறிவித்த சிவபெருமானின் திருவருளால் அவினாசித் திருத்தலத்தை அடைந்தான். தான் சுமந்திருந்த தனது தந்தையின் எலும்பு அடைத்தக் கலசத்தில் அவிநாசி வந்தவுடனே அவ்எலும்பானது பூவாக மாறி இருக்கக் கண்டான். இத்தகு சிறப்பு வாய்ந்தது திருப்புக்கொளித் திருத்தலமாகும்.

கலசம் - பாத்திரம்; தந்தலை - தம் + தலை; புட்பம் - மலர்.

~~1. அந்தணன்~~ 1. னெலும்பை 2. யிந்தநற்
3. யெலும்புகண் 4. மொளியறி 5. புற்பமான

***

அகில காரணி

15. அகிலமா கியசீர் தலமெலாம் நீயே
யாகியு மிதிற்பெருங் கருணை
[1]புகலுதற் கரிய பெருந்தய வாகிப்
பொருந்தினைப் [2]புகழுமித் தலத்தில்
[3]வெகுளியன் செய்த [4]பிழையெலாம் [5]பொறுத்து

வினவினை நினவிலு மதியும்
வகிலகா ரணியே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (யரு)

இந்த நில உலகம் முழுமையும் நிலைபெற்றிருப்பதற்கு மூலகாரணமாகி விளங்குகின்ற திருப்புக்கொளிக் கருணாம்பிகை அன்னையே! இந்நில உலக-மானவள் நீ! இவ்வுலகின்கண் நிறைந்துள்ள இயங்கு பொருள், இயங்காப் பொருட்கள் அனைத்துமானவள் நீ! மண்ணும் விண்ணுமாகி, நீரும் நெருப்பு-மாகி, காற்றாகி நிற்பவள் நீ! காடும் மலையுமானவள் நீ! எல்லாமாய் நிறைந்து நிற்பவள் நீயே ஆனாலும் உன்னுடைய சிறப்புகளெல்லாம் நிறைந்த பெருங்கருணையாகிய புகழினை எடுத்துக்கூறுவதற்கு ஏற்ற திருத்தலமாக விளங்கி வருவது திருப்புக்கொளி என்னும் இத்திருத்தலமே. இத்தலத்திலே கோயில் கொண்டுள்ள தேவியே! அறிவின்மையும், வெகுளித்தனமும் நிறைந்த அடியேன் செய்த பிழைகளையெல்லாம் கண்டும் கேட்டும் அறிந்திருக்கின்ற நீ அவற்றை-யெல்லாம் பொறுத்து என்னுடைய நினைவிலிருந்து நீங்காதிருக்க அருள்புரிவாயாக!

அகிலம் – நிலவுலகம், இதில் – இத்திருத்தலத்தில் (புக்கொளியில்); நினவு – நினைவு, நோக்கம், எண்ணம்; மதி – அறிவு; வெகுளியன் – சினத்தை உடையவன்; இது காமம், வெகுளி, மயக்கம் என்னும் முக்குற்றங்களுள் ஒன்றாம்; அகில காரணி – உலக மாதாவாகிய பார்வதி; உலகம் நிலைபெறுவதற்குக் காரணமானவள்; சீர் – செல்வம், புகழ், சிறப்பு.

1. புகலுதற்க் 2. புகளுமித் 3. வெகிளியன் 4. பொருத்து

***

அனைத்துமானவள்

16. உடலதாய் [1]உயிராய் [2]உயிர்க்குயிர்த் துணையாய்
உயரண்ட புவனங்க ளாகி
கடலதாய் மலையாய் சராசர புவனங்
கள்உயிர்த் தோற்றங்க ளாகி
[3]மடலதா யோலை [4]எழுத்துமாய் எழுத்தின்
[5]வாசனைப் பொருளுளப் பயனாய்
வடலதாய் உனது கேள்வர்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (யசா)

திருப்புக்கொளித் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! நீ உனது கணவர் எழுந்தருளியுள்ள இத்திருத்தலத்தின் உடலாகவும், உயிராகவும், உயிருக்கு உயிர்த்துணையாகவும் நீயே வீற்றிருக்கின்றாய். மேலும் மேலுலகம்,

பாதாளம், இந்நிலவுலகம் என்ற மூவகை உலகங்களாகவும், பரவி இருந்து இந்நிலவுலகில் கடலாகவும், மலையாகவும், அசையும் பொருள், அசையாப் பொருட்களாகவும் தோன்றி இருக்கின்ற அனைத்துப் பொருட்களின் உயிர்த் தோற்றமாக நீயே விளங்குகின்றாய். அறிவைப் புகட்டும் செய்திகள் அடங்கிய ஓலையாகவும், அந்த ஓலையின் அகத்தே அமைந்திருக்கும் எழுத்தாகவும், நீயே நிறைந்திருக்கின்றாய். அறிவு மணம் பரப்பும் அந்த எழுத்துகளின் பொருளாகவும், அப்பொருளின் பயனாகவும் விளங்கி அவற்றின்மூலம் இந்நில-வுலகிலே உன் புகழ் பரவவும் செய்து நிற்கின்றாய். இறைவனின் இடது பாகத்தை சொந்தமாகக் கொண்டுள்ள நீ, உயிர்த் தோற்றங்களின் முதன்மையாக விளங்கு-கின்றாய்.

அண்டபுவனம் - விண்ணுலகும், மண்ணுலகும் - உம்மைத்தொகை. சராசரம் - சரம் + அசரம் - அசையும் பொருள், அசையாப் பொருள்; மடல் - ஏடு; பொருளுளப்பயன் - உட்பொருளும் அதன் பயனும்.

1. யுயிராய் 2. உயிற்க்குயிற்த் 3. மடலதாய்
4. எளுத்துமாய் 5. வாசினைப்

***

உலகு ஈன்றவள்

~~21.~~ 17 விடமிடுங் காள கண்டனா ருடனே
விமலியே சிதம்பரந் தன்னில்
நடமிடும் பாத பங்கயச் சரணம்
நா நினைந் துருகுநாள் புரிவாய்
படமிடும் சரப நாககங் கணியே
பாருல [1]கேழையு மீன்றாய்
வடமிடுங் கொங்கைப் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (௰௭)

அழகிய மணிமாலையை மார்பிலே அணிந்து புக்கொளியில் கோயில் கொண்-டிருக்கும் இறைவியே! இந்நிலவுலகம் ஏழினையும் படைத்தவள் நீயாவாய். படமெடுத்து ஆடுகின்ற நாகத்தைக் கங்கணமாகத் தாங்கியுள்ள தேவியே! திருப்பாற்கடலிலே தோன்றிய நஞ்சினை உண்டு தன் கண்டத்திலே நிறுத்திய சிவபெருமானுடைய பாகத்தைப் பெற்று விளங்கும் சிவசக்தியே! சிவபெருமானுடன் சிதம்பரத்தில் நடனமாடுகின்ற உனது திருவடித் தாமரைகளை பாடித் துதிக்கும் நாளினைப் பெறும் பேற்றினை எனக்கு அளித்து அருள்புரிய வேண்டுகிறேன்.

விடம் - நஞ்சு; காளகண்டன் - சிவபெருமான்; காளம் - கருமை; கண்டம் - கழுத்து; விமலி - தூயவளாகிய பார்வதி; பாதபங்கயம் - திருவடிகளாகியத் தாமரை; படம் - பாம்பின் படம்; நாககங்கணி - பாம்பினை கங்கணமாக அணிந்தவள்; ஏழுலகு - பூலோகம், புவர்லோகம், சுவர்லோகம், சனலோகம், மகலோகம், தவலோகம், சத்தியலோகம் என்பனவாகும்.

1. கேளையு.

***

திரிசூலி

18. தாட்டடந் தன்னை நினைந்தினி முருகித்
தமியனு [1]மனுதின மெனது
நாட்டட முன்னைக் கண்டுநின் றுருகி
[2]நானுமக் [3]கடிமையே யாக
ஆட்டட மதுவாயி யருள்புரி தேவி
[4]ஆதியம் பிகைதிரி சூலி
வாட்டடங் கண்ணி புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (யஅ)

மூவிலை வடிவமாகிய சூலாயுதத்தை ஏந்திய அம்பிகையே! உலகத் தோற்றம் முதலே எழுந்தருளியிருக்கும் தேவியே! நீண்ட அருள் பொழியும் கண்களையுடைய-வளே! திருப்புக்கொளித் தேவியே! அடியேனாகிய நான் உனது பரந்த திருவடி-களை என் உள்ளத்திலே இடைவிடாது நினைத்து உருகியும், நாள்தோறும் உன் அழகிய வடிவினைக் கண்டு நின்று உருகியும் உனது அடிமையாகி உன் அருளோடு இரண்டறச் கலக்கும் பேற்றினை எனக்கு அளித்தருள்வாயாக!

தாட்டடம் - தாள் + தடம், திருவடிகளாகிய வழி; நாட்டடம் - நாள்-தோறும்; ஆட்டடம் - ஆள் + தடம் என்னையாளுகின்ற அருள்திறன்; ஆதியம்பிகை - உலகத் தோற்றம் முதல் இருப்பவளாகிய தேவி; திரிசூலி - மூன்று பிரிவுகளை உடைய சூலாயுதத்தை ஏந்தியவள்; வாட்டடங் கண்ணி - வாள் + தடம் + கண்ணி - வாள் போன்ற கூரிய பெரிய கண்களையுடையவள்.

1. மனிதின 2. நானுனக் 3. கடுமையே 4. யாதியம்பிகை.

***

துன்பமில்லை

19\. படிதனி லினிய கல்விகற் றுனது
பாதபங் [1]கயந்தன்னைப் பரிவாய்
வெடிதனி லினிய [2]வேதசாத் திரத்தின்
மெய்நின்று தன்னையே யுனது
அடிதனி லினிய கருத்தையே உன்னு
[3]வர்க்கொரு துன்ப மில்லை
வடிவினி லினிய புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் எழுந்தருளியுள்ள அழகிய திருமேனியினை உடைய கருணை நாயகியே! இப்பூவுலகில் சிறந்ததாகக் கருதப்படுகின்ற கல்வியைக் கற்று உனது திருவடித் தாமரைகளை அன்போடு நினைவார்க்கு இவ்வுலகில் ஒரு துன்பமும் ஏற்படாது என்பதை அறிவேன். அதேபோல இனிய ஓசையையுடைய வேத சாத்திரங்களின் ஒலிகளைக் கேட்டு மெய் மறந்து நின்று அதன்படி வழி நடப்பாருக்கும் இவ்வுலகில் துன்பம் இல்லையாகும். தன்னையே உனது திருவடிகளில் சேர்ப்பித்து, உனது இனிய புகழையே உள்ளத்தில் எக்காலமும் நினைத்து வாழ்வார்க்கும் என்றும் துன்பம் இல்லையாகும்.

படி - நிலவுலகம்; பரிவு - அன்பு; வெடி - ஓசை; உன்னுதல் - நினைத்தல்.

1\. கயந்தன்னைப் 2. வேதசாஸ்த்திரத்தின் 3. உன்னுவர்க்

***

நிற்கள ரூபி

20\. இரந்தினிக் கொருவர் முகமது [1]பார்த்து
யேங்கிடா [2]வகையதா யெனையும்
புரிந்திட வேணும் நின்னருள் [3]தன்னால்
[4]பிறவொரு தெய்வனா னறியேன்
நிரந்தர மான நிற்கள ரூபி
[5]நேசமா இகல்பர மானம்
வரந்தரும் [6]பரையே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (உ௰)

ஆதி அந்தமாய் நிலைத்து இருக்கின்ற ஒப்பற்ற தூய்மையான வடிவினை உடைய தேவியே! நான் வேறு ஒருவருடைய எதிரிலே சென்று அவருடைய முகத்தைப் பார்த்து யாசித்து நின்று, என் உள்ளம் நிறைவு பெறாமல் ஏங்கி

நின்று வருந்தாதபடி உன்னுடைய அருளாலே எனக்குக் கருணைபுரிய வேண்டும். இவ்வுலக மக்களோடு பகையும், இனிமையும் என்ற விருப்பு வெறுப்புகளி-னின்று விடுபட எனக்கு வரமருளும் பராபரியே. உன் அருளைத் தவிர வேறொரு தெய்வத்தின் அருளை இவ்வுலகில் நான் அறியேன்.

ஏங்கிடா வகை – ஏங்குதல், நினைத்து வருந்துதல்; நிரந்தரம் – என்றும் நிலைத்து நிற்கின்ற. நிற்களம் – குற்றமற்ற; ரூபி – வடிவுடையவள்; நேசம் – விருப்பம்; இகல் – பகை; பரமானம் – விருப்பம்.

1. பாத்து 2. வகையதாய் 3. தன்னாலப்
4. பிறயொரு 5. யரையே.

***

முடனுக்கிரங்கல்

21. ஆசையாய் நேரத் திரவொடு பகலும்
[1]அடியிணைக் கன்பராய் [2]உனையே
பூசைதான் [3]புரியும் நேசவர் தமக்குப்
பொருந்துறா மனத்தீச் சீயேன்
மோசனாம் பிசாசன் அறிவில்லாச் சிறியர்
முடனுக் [4]கிரங்குவாயித் தயவாய்
வாசியாங் காசி விசேஷபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே (உயக)

தென்காசித் திருத்தலம் என்னும் புகழ்பெற்ற இத்தலத்திலே எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! இரவும் பகலுமாகிய எந்நேரமும் உள்ளத்து அன்போடு உன் திருவடிகளை உள்ளத்திலே இருத்தி வாழ்த்தும் அன்புடையவராகி முறைப்படி பூசனைகள் புரிந்து வரும் அடியவர்களிடத்திலே நான் சிறிதும் அன்பு பாராட்டும் மனம் இல்லாதவனாக இருக்கின்றேன். அறிவில்லாமையும், வஞ்சனையும் கொண்ட நான் பிசாசத் தன்மையோடும் முரட்டுத் தன்மையோடும் மிகுந்த அற்பத்தனத்தை உடையவனாக இருக்கின்றேன். என்மீதும் உள்ளம் இரங்கி அருள்புரிவாயாக!

நேசவர் – அன்பர்கள், சீயேன் – அற்பனாகிய நான், மோசன் – நயவஞ்சகன்.

1. யடியினைக் 2. வுனையே 3. புறியும் 4. கிறங்குவாயித்

***

I. I. T. S.
No 28542

பராபரி

22. காலையம் போது வாலையைத் தொழுது
கருதிடுந் திரிபுரை உச்சி
மாலையம் போது புலனயந்த [1]தொழுவோர்
மனந்தனி [2]லமர்ந்தருள் தேவி
பாலையந் தனிலே வாசமாய் மேவும்
[3]பராபரி [4]அழகினில் மிகுந்த
வாலைசுந் தரியே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (உயஉ)

திருப்புக்கொளியில் வீற்றிருக்கும் கருணை நாயகியே! அழகும் இளமையும் மிகுந்து காட்சி தரும் எம்பெருமாட்டியே! பரந்த வெளியாகிய இத்திருத்தலத்தினை இருப்பிடமாகக் கொண்டு வீற்றிருக்கும் பராபரியே! நாள்தோறும் காலைப் பொழுதிலே உளமாறத் துதித்து வணங்கிடும் சக்தி வடிவம் பெற்ற திரிபுரா தேவியே! நாள்தோறும் உச்சிப் பொழுதிலும், மாலைப் பொழுதிலும் ஐம்புலன்களையும் அடக்கி விரும்பித் தொழுவோருடைய உள்ளத்திலே என்றும் நீங்காது வீற்றிருக்கும் தேவியே! அருள் புரிவாயாக!

வாலை - சத்தி வாய்ந்த பெண்; திரிபுரை - பார்வதி, சக்தி; பராபரி - மேலானவளாகிய பார்வதி

1. புலனையைத் 2. தொழுவோர் 3. லமந்தருள்
4. பறாபரி 5. அளகினில்.

***

பராபர வனிதை

23. காலையு மாலை [1]யுச்சியும் போது
கருதுவர் நெஞ்சகந் தனிலே
[2]ஆலய மாக [3]அமர்ந்தருள் தேவி
யறிவிலாச் [4]சிறியனோ அறியேன்
வேலையு மிதுவா யிருப்பவர் பாங்கில்
[5]விளங்கிடும் பராபர [6]வனிதை
வாலையம் புனையே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளிப் பதியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! ஒவ்வொரு நாளும் காலை, மாலை, உச்சிப்பொழுது என்னும் முக்காலமும் இடைவிடாது, உள்ளத்திலே நினைக்கின்ற அன்பர்களுடைய நெஞ்சத்தையே ஆலயமாகக் கொண்டு வீற்றிருக்கும் அன்பு உள்ளம் பெற்றவள் நீ. எக்காலமும் உனது பணியையே மேற்கொண்டிருப்பவர்களுடைய அருகிலே நீங்காது வீற்றிருக்கும் சக்தி வாய்ந்தவள் நீ. இத்தகு உன்னுடைய அன்பு உள்ளத்தை எல்லாம் அறிவில்லாதவனாகிய அடியேன் இதுகாறும் சிறிதும் அறிந்திலேன்.

பாங்கு – பக்கம்.

1. வுச்சியும்	2. ஆலையமாக	3. அமர்ந்தருள்
4. சிறியனோ	5. விழங்கிடும்	6. வனுதை

***

வயிரவி

21. கயிலையங் [1]கிரியும் தில்லைவாழ் காசி
கதிதரும் அருணைமா னகரும்
[2]இயல்தரு மதுவாய்க் கச்சிமா விஞ்சை
[3]இமகிரிக் கடவுள்வே ளூரும்
பயில்தரு ராமே சுரமெனும் பேரூர்
பண்டவி னாசிலோ கத்தில்
வயிரவி நீயே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளிப்பதி கருணை நாயகியே! இத்திருத்தலத்திலே வயிரவி என்னும் சக்தியாய் மிகப் பழங்காலந்தொட்டே எழுந்தருளி அருள்புரிவதோடன்றி திருக்கயிலாயம் என்னும் பெருமலையாகிய திருத்தலத்திலும் திருத்தில்லை எனப்பெறும் சிதம்பரத்திலும், கங்கைக் கரையிலே உள்ள காசிமா நகரிலும் எழுந்தருளியிருப்பவள் நீ. மேலும் பேரின்பத்தை அளிக்க வல்லதாகிய திருவண்ணாமலை, இயற்கை அழகும் பலவகைப் பெருமைகளும் நிறைந்த காஞ்சிமா நகர் என்னும் திருக்கச்சிப்பதி, திருவிரிஞ்சைக்கனம் என்னும் திருத்தலம் திருப்புள்ளிருக்கு வேளூர் என்னும் தலம், யாவராலும் பூசித்துச் சிறப்புப் பெற்றதாகிய இராமேசுவரம், திருப்பேரூர் ஆகிய திருத்தலத் தலங்களிலும் எழுந்தருளி உலக உயிர்களைக் காத்து வரும் உனது பெருமை அளவிடற்கு அரியதொன்றாகும்.

கயிலையங்கிரி – கயிலாய மலை, இமய மலையின் ஒரு பகுதி, வெள்ளிமலை எனவும் பெயர் பெறும்; தில்லை – சிதம்பரம்; அருணைமாநகர் – திருவண்ணாமலை கச்சி – காஞ்சிமாநகரம்; வேளூர் – திருப்புள்ளிருக்கு; பண்டு–பழங்காலத்து;

வயிரவி – சக்தி, தாருகனைக் கொன்றவள்.

1. கிறியும் 2. யியல்தரு 3. யிமகிரிக்

***

வேறு பெயர்கள்

25. காசிவிசா [1]லாட்சி மதுரைமீ னாட்சி
கச்சிகா [2]மாட்சிநீ யாகி
பேசிய பேரூர் மரகத வல்லி
பிறங்கிய தயல்வே ளூரில்
[3]ஓசைசே [4]ரருணைஉண் ணாமுலைச் செல்வி
உயர்தல மெங்குநீ தாயே
வாசிய சிதம்பர சிவகாமி புக்கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே (உயரு)

திருப்புக்கொளித் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! நீ காசிமா நகரிலே விசுவநாதரோடு விசாலாட்சியாய் வீற்றிருக்கின்றாய். தென்பாண்டி நாட்டு மதுரையம்பதியிலே சோமசுந்தரப் பெருமானோடு மீனாட்சியம்மையாய்த் தோன்றியிருக்கின்றாய். காஞ்சிமா நகரிலே ஏகாம்பர நாதரோடு காமாட்சியம்மையாய் எழுந்தருளியிருப்பவள் நீயே! மேலைச் சிதம்பரம் என்னும் திருப்பேரூரிலே மரகதவல்லியாய்க் காட்சியளிப்பவளும் நீயே. வைத்தீசுவரன் கோயில் என்னும் திருப்புள்ளிருக்கு வேளூரிலே வைத்தியநாத தேவரோடு தையல் நாயகியாய்க் காட்சி தருகிறாய். புகழ்மிக்க திருவண்ணா-மலையிலே அண்ணாமலையாருடனே உண்ணாமுலையம்மனாய் விளங்குகின்றாய். திருத்-தில்லைப் பதியாம் சிதம்பரத்தில் நடராசப் பெருமானோடு சிவகாமியம்மையாய் எழுந்தருளி அருள்புரிபவளும் நீயேயாவாய்.

1. லாச்சி 2. காமாச்சி 3. யோசை 4. சேரருனை

***

மூன்றுரு

26. சூலிநீ நீலி திரிபுரை கன்னி
சுந்தரி துர்க்கைமா காளி
நீலிநீ கபாலி நிற்களா வந்தி
[1]நிரந்தரி [2]நிர்மய தேவி
மாலிநீ ஞான [3]லட்சுமி வாணி
வரந்தரு மூன்றுரு வாகி

வாலைநீ யுமையே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (உயசா)

கருணாம்பிகையே! மூவிலை வடிவமாகிய சூலாயுதத்தை ஏந்திய காளிகா-தேவியானவள் நீ; பழையனூர் வேளாளர் குலத்தை உயர்த்திக் காக்க நீலி-யாய்த் தோன்றியவள் நீ; கமலாட்சன், வித்தியுன்மாலி, தாரகாட்சன் ஆகிய மூவரின் புரத்தை எரித்த இறைவனுடன் பிரியாதிருந்த திரிபுராந்தகியும் நீ; துர்கை வடிவமாகிக் கன்னியானவளும் நீ; அழகும் வீரமும் அமைய முறையே துர்கையாகவும், காளியாகவும் வடிவெடுத்தவளும் நீயே. மேலும், கபால-மேற்ற இறைவனோடு கபாலி என்னும், பெயரோடு அழியா இன்பந்தருபவ-ளாகவும் நிலைபேறுடையவளாகவும் மாயைகயற்று விளங்குபவள் நீ. மாலை-யணிந்தவளாகிய உமையாகவும், ஞான இலக்குமியாகவும், கலைவாணியாகவும் மூவகை உருவெடுத்துச் சக்தி மயமாய் நின்று வரமளித்து அருள்புரிபவளும் நீயேயாவாய்.

சூலி – சூலத்தை ஏந்தியவள், துர்க்கை; நீலி – காளி, துர்க்கை; கபாலி – கபாலமேற்ற இறைவனோடு வீற்றிருக்கும் உமையம்மை; மாலி – மாலையணிந்தவள்; மூவிரு – திருமகள், கலைமகள், மலைமகள் என்ற மூன்று வடிவம்.

1. நிறந்தறி 2. நிற்மய 3. லச்சுமி.

***

வடிவங்கள்

27. ஓங்காரி சத்தி கரதல கபாலி
யாவனக் காளிமா கன்னி
ரீங்காரி துற்கை நிமலியென் டோனி
[1]நித்தகலி யாஙிசாம் பவிநீ
ஆங்காரி வாட்கை அகோரி வீரச்சி
அந்தரி சிங்கவா கனத்தி
வாங்காரி காந்தாரி புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (உயஎ)

கருணை நாயகியே! ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் தலைவியாய் விளங்கி சக்தி வடிவமாய் நிற்பவளே! நீ வீர வடிவோடு கைகளிலே கபாலத்தை ஏந்தி யாமரங்கள் நிறைந்த வனத்திலே மாகாளியாகவும், கன்னி துர்க்கையாகவும், பேரொலி செய்பவள் நீயே! மும்மலம் என்ற குற்றங்களையெல்லாம் போக்கும்

நிமலியாக எட்டு தோள்களையும் உடையவளாய் நடன கலியாண குணவடிவினளாய் வெண்ணாவல் நிழலிலே வீற்றிருக்கும் சாம்பவியாய் வாளை ஏந்தி, அகோர, ஆங்கார, வீர குணங்களையுடையவளாய் சிங்க வாகனத்திலே எழுந்தருளி கொடிய பார்வையை உடைய காந்திரியாக விளங்குபவளும் நீயே ஆவாய்.

ஓங்காரி - 'ஓம்' என்னும் பிரணவ மந்திரத்தின் தலைவி; யாவனம் - 'யா' என்னும் மரங்கள் நிறைந்த காடு; ரீங்காரி - பேரொலி செய்பவள்; நிமலி - மும்மலத்தை அழிப்பவள்; சாம்பவி - வெண்ணாவலின் கீழ் வீற்றிருப்பவள்.

1. நீர்த்தகலி.

***

வடிவங்கள்

28. காரணி [1]கௌரி சக்திகா [2]மாட்சி
கனதனப் பயோதர வல்லி
நாரணி கௌரி துர்கைமா காளி
நாககங் கணிதிரி [3]சூலி
[4]ஆரணி கன்னி வீரிகங் காளி
அயன்தலை அரிந்திடுங் கோரி
வாரணி முலைசேர் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (உயஅ)

திருப்புக்கொளிப் பதியில் கச்சணிந்த மார்பினளாய் வீற்றிருக்கும் கருணை நாயகியே! உலகப் பொருட்களையெல்லாம் தோற்றுவித்த காரணியாக, கௌரி, சக்தி, காமாட்சி என்ற பெயர்களையுடையவள் நீயே. பருத்த தனங்களை உடைய நீ பயோதர வல்லி என்று புகழப்படுகிறாய். நாரணச் சகோதரியாகி செயற்பாடுகளால் துர்க்கை மாகாளி எனவும், பாம்பினைக் கங்கணமாக அணிந்து நாககங்கணி எனவும் பெயர் பெற்றவள் நீ. இறைவனுடைய ஆயுதமாகிய சூலத்தை ஏந்தி 'திரிசூலி' என்ற பெயரினைப் பெற்றாய். காற்றினை இயக்குபவளாகிய நீ ஆறணி எனவும், இளமையால் கன்னி எனவும், வீரத்தால் வீரிகங்காளி எனவும், அயன் தலை அரிந்திடும் கோரிவடிவினள் எனவும் திருப்பெயர்களை உடையவள் நீயாவாய்.

காரணி - உலகம் தோன்றக் காரணமாய் இருப்பவள்; கனதனம் - பருத்த தனங்கள்; பயோதரம் - கடல்.

1. கெவுரி 2. காமாச்சி 3. திரிசூலி 4. ஆறணி

முத்தொழில்

29. [1]அரிவுற மாதி யீசரு மூவர்
[2]அர்ச்சனை புரிந்துனை நெடுநாள்
பரிவுடன் உலகைப் [3]படைத்தனன் [4]பிரமன்
பாங்குடன் மாலவனுக் காக
[5]விரிவுற உலகை [6]உத்தியி னளிக்க
மேவுமுத் [7]தொழிலுமே யுனது
[8]விரிவழிக் கிற்ற புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி நாயகியே! ஆதியும் அந்தமும் அற்றவளாகிய எம்பெருமானையும், திருமாலையும் நெடுநாள் பூசித்த பிரமதேவன் கருணை நாயகியாகிய உன்னையும் நெடுநாள் அர்ச்சனை செய்து பூசித்து இந்நிலவுலகத்தினை உன்னுடைய அன்பினாலே படைத்தளித்தான். திருமாலானவர் பிரமதேவனுக்காகப் பரிந்து வந்து பரந்த இந்நிலவுலகத்தினை தனது அனுமானத்தினாலே காத்து அளித்து வந்தார். இந்த நிலையில் இவ்வுலகில் நிலைபெறும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலுமே உனது திருக்கொடையின் அருளால் அமைந்தது என்பதே பொருந்தும்.

நாரணி – நாராயணனின் சகோதரி; ஆரணி – காற்றினை இயக்கும் சக்தி; கோரி – கோர வடிவினள்; மாலவன் – திருமால்.

1. அரிவிற 2. அற்ச்சுனை 3. படைத்தினன் 4. பிறமன்
5. விரிவுரு 6. உத்தியி 7. தொளிலுமே 8. விரிவளிக்

***

கலியாணி

30. கரதல கபாலி உனதருள் தன்னை
கனவிலும் நினைவிலும் துதிக்க
வரமது புரிவாய் சிவாயசங் கரியே
வருசிவ னிடத்தினி லுரையும்
பராபர வனிதை அம்பிகை [1]கௌரி
பரமகலி யாணிபுக் கொளியில்வரு
கராவர [2]வழைத்த புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

புக்கொளிப் பதியில் வளர்கின்ற பெரும் கருணை நாயகியே! சிவசங்கரியே; சிவனிடத்தில் ஒரு பாகத்தைக் கொண்டவளே; பரம்பொருளான பார்வதியே;

அம்பிகையே; கவுரி, பரம கலியாணி, உனது அருளால் புக்கொளியில் முதலையுண்ட குழந்தையை அதன் வாயினின்றும் வரவழைத்த பெருமைக்குரியவளே! கையிலே கபாலத்தை ஏந்திய தேவியே! உன்னுடைய திருவருளைக் கனவிலும், நினைவிலும் எப்போதும் நினைத்துத் துதிக்க எனக்கு வரம் தரவேண்டும்.

கரா – முதலை

1. கெவுரி 2. வளைத்த

***

வரம்

31. [1]எத்தனை [2]விதத்தில் எடுக்கினும் [3]தழைக்க
எண்ணினும் உனதரு ளல்லால்
அத்தனை விறத்தி நின்வதிப் பலங்கள்
யாவது மொன்றினி யில்லை
சித்தம்வைத் தெனையும் [4]வாழ்விக்கும் பரையே
செய்தவம் [5]ஒன்றுநா றாக
[6]வரத்தினை புரியும் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

புக்கொளிப் பதியில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகியே! பலவகைப் பிறவிகள் எடுத்தாலும் ஒவ்வொரு பிறவியிலும் உயர்ந்து விளங்க வேண்டும் என்று எண்ணினாலும் உனது அருள் இல்லாதவிடத்து அவை என்றும் நடைபெறாது என்பது உறுதி. என்மீது கருணை உள்ளம் கொண்டு என்னை வாழ்விக்கும் பார்வதியே! நான் உன்னை நினைத்துச் செய்கின்ற தவம் ஒன்றேயானாலும் அதன் பலன் நூறாகும்படியாக வரமளித்து அருள் புரிவாயாக!

சித்தம் – உள்ளம், விருப்பம்.

1. எத்தினை 2. விதத்தி 3. தளைக்க
4. வாள்விக்கும் 5. யொன்று 6. வறத்தினை.

***

கதி

32. உடலது எடுத்து உனைமறந் திடும்பேர்
ஒருகரு மங்களு மில்லை
சடமது யெடுத்து [1]மிருகமாய்ப் போவார்
தான்செய்த குறையுகோ ...

மடமயி லுனது பதமடுத் [2]தவர்க்கு
வருகதி வேதமே சொல்லும்
வடமணி யுறத்தி புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் வீற்றிருக்கும் கருணை நிறைந்த பார்வதியே! திருமார்பிலே முத்துவடமணிந்து அழகுற விளங்குபவளே! இவ்வுலகில் மக்களாயிப் பிறந்து உன்னைத் துதிக்கும் பேறு பெறாதவர்களாய், உன்னை மறந்திருந்திருக்கின்றவர்கள் செய்கின்ற உயர்ந்த செயல்கள் ஏதும் இல்லை. அவர்கள் உயர்ந்ததாகிய இம்மனிதப் பிறவியைப் பெற்றிருந்தும் மனித நிலையிலிருந்து இழிந்து மிருகத்தன்மை அடைந்தவரே ஆவர். மேலும் அவர்கள் இப்பிறவியில் அதிக துன்பத்தை அடைந்து வருந்துவார்கள். மடப்பம் பொருந்திய மயில் போன்றவளே! உனது திருவடிகளே புகலிடம் என்று அடைந்தவர்கள் பெரும்பேற்றினைப் பெற்றார்கள் என்பதைத் திருமறைகளே எடுத்துக் கூறுகின்றன அல்லவா?

சடம் - உடல்; பதம் - திருவடி; அடுத்தவர் - அடைந்தவர்; வடம் - முத்துமாலை.

1. மிருகமாய்ப் 2. தவறக்கு

***

வல்லமை

33. அல்லவை தேய்வ [1]அறமது பெருக
[2]அர்ச்சனை அனுதினம் செய்ய
நல்லவை வருக பொல்லவை யகல
[3]நாவினா லுனைத்துதி செய்யப்
புல்லரை யகல நல்லரை [4]நணுக
புண்ணிய மிகுவெலா மவர்கள்
வல்லமை யல்ல புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் கோயில் கொண்டிருக்கும் பார்வதியே! ஒவ்வொரு நாளும் உன்னை மலர்த்தூவி அர்ச்சனை செய்வதால் அறச்செயல்கள் பெருகும்; அறமல்லாதனவாகிய தீச்செயல்கள் குறையும். நாவினால் புகழ்ந்து உன்னைத் துதிப்பதினால் நல்லவை வந்து அடையும், பொல்லாத அனைத்தும் நீங்கும். தீயகுணம் படைத்த அற்பர்கள் நம்மைவிட்டு விலகுவதும், நல்லவர்கள் நம்மிடம்

வந்து சேர்வதுமாகிய சிறந்த பயன்கள் உண்டாகும். இப்பலன்கள் அனைத்தும் அவர்கள் செய்த புண்ணியச் செயல்களால் ஏற்படுமே அல்லாது அவர்களது வலிமையினால் இவற்றை அடைய முடியாது என்பது உறுதி.

அல்லவை - அறமல்லாதனவாகிய தீச்செயல்கள்; தேய்வ - குறைய; புல்லர் - தீய குணம் படைத்த அற்பர்கள்; நணுகுதல் - அடைதல்.

1. அரமது 2. அற்சினை 3. னாவினா 4. னநுக

***

புண்ணியம்

34. அந்தநல் மனவி [1]சற்குண மதுவும்
[2]ஆண்மைகள் தன்னெறி [3]வாழ்வும்
சந்ததி விவேக நற்குண மதுவாய்த்
தயவொடு [4]தர்மதா னங்கள்
[5]பந்துநற் சனமும் சகோதர [6]வலிமை
படைத்திடும் [7]புண்ணியம் யாவும்
வந்திடு முனது [8]கிருபைபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் எழுந்தருளியுள்ள கருணை நிறைந்த பார்வதியே! உன்னுடைய அருள்பெற்றவர்கள் இவ்வுலகில் நல்ல குணங்கள் பலவும் நிறைந்த மனைவியைப் பெற்று மகிழ்வார்கள். வலிமை நிறைந்த நன்னெறிகளில் தவறாத வாழ்வினைப் பெற்று உயர்வார்கள். நல்ல அறிவும் குணங்களும் வாய்க்கப்பெற்ற மக்கட் பேற்றினைப் பெற்றுப் பயன் அடைவார்கள். இரக்க உள்ளம் கொண்டவர்களாகி உயர்ந்த கொடைச் செயல்களும் அறச்செயல்களையும் செய்வார்கள். உற்றார் உறவினர்களின் சேர்க்கை மிகுதியாக, உடன்பிறந்தாரின் வலிமை நிறைந்த துணை என்றும் கிடைக்கும். இத்தகு பெரும் பயன்களெல்லாம் அவரவர் செய்யும் புண்ணிய பலத்தினாலும் உனது திருவருளினாலுமே நிகழ்வனவாகும்.

சற்குணம் - உயர்ந்த பண்பு; சந்ததி - மக்கட்பேறு; விவேகம் - அறிவு; பந்து நற்சனம் - உற்றார் உறவினர்கள்; கிருபை - திருவருள், கருணை.

1. சற்க்குண 2. யாண்மைகள் 3. வாள்வும் 4. தற்மதா
5. பந்துநற்ச் 6. வலுமை 7. புண்ணிய 8. கிறுபை

***

கோபுர வாசல்

35. மாயத்தின் சென்மம் யோனிகள் தோறும்
மருவியே வுடலது யெடுத்து
[1] காயத்தில் நோய்கள் பிணியது கண்டு
கசிவுடன் மயங்கிடா வகைநீ
[2] பேயருக் கிரங்கி அருளது புரிவாய்
பெருந்திரு கோபுர வாசல்
[3] வாசலிற் சிறந்த புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

பெருமைக்குரிய திருக்கோபுரமும், உயர்ந்த அதன் வாயிலும் உடைய உனது ஆலயம் விளங்குகின்ற திருப்புக்கொளி நாயகியே! இவ்வுலகில் பலவகையான மாயங்களுக்குட்படும் மனிதப் பிறவியினைத் தோற்றுவிக்கும் கருக்குழியிலே அடைந்த அக்கருவின் வழி இவ்வுடலினைப் பெற்றுப் பிறவியாய் இந்நிலவுலகிலே தோன்றும் செயல் அறுமாறு அருள்புரிவாயாக! பிறவி எடுத்தப் பிறகும், நிலையற்ற இவ்வுடலில் பலவகைப் பிணிகள் தோன்றாதவாறு தடுத்து அருள்புரிவாயாக! அதே போன்று மேற்கொள்ளும் பணிகளில் உள்ளக் கசிவும், மயக்கமும் கொள்ளும் அற்பக் குணத்தையும் நீக்கி அருள்புரிவாயாக! பயனற்ற இப்பிறவி எடுத்துள்ள பேயினும் கொடியவராகிய எமக்கு இத்தீங்குகள் எல்லாம் நிகழாதவாறு உள்ளம் இரங்கி அருள்புரிவாயாக!

யோனிகள் – பெண் உறுப்பு; மருவுதல் – சேர்தல்; கசிவுடன் – இரக்கத்துடன், உள்ளக்கசிவு; பேயர் – பேய்க்குணம் படைத்தவர்.

1. காயத்தி 2. பேயறுக் 3. வாசலிற்சி.

***

பாதபங்கயம்

36. பெற்றிடுந் தந்தை தாயவர் [1] பெண்டிர்
பிள்ளைகள் [2] சகோதரர் மயங்கி
உற்றிடுங் கால தூதர்வந் தவரும்
உடலுயிர் வாங்கியே போது
நற்றிடு முனது பாதபங் கயத்தை
நமக்கருள் மானில மாயிகை
வற்றிட அருளும் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

புக்கொளி நாயகியே! இப்பிறவியில் எம்மைப் பெற்றெடுத்த தாயும் தந்தையும் பாசத்திற்கு உரியவர் ஆகின்றனர். கட்டிய மனைவியும் பெற்ற மக்களும் உடன்பிறந்த உடன்பிறப்புக்களும் நீங்காத பாசத்திற்கும், கடமைக்கும் உரியவர் ஆகின்றனர். ஆனால் இவற்றையெல்லாம் கடந்து காலனுடைய தூதர்கள் வந்து அணுகுகின்ற பொழுது இப்பாச பந்தங்களினால் நான் பெறும் பேறு ஒன்றுமே இல்லை ஆகிறது. இந்நிலவுலக மாய்கையிலிருந்து விடுபட்டு கால தூதர் உயிரைப் பற்றுகின்ற பொழுது உன்னுடைய திருவடிகளை அடைதற்குரிய உள்ளத்தினை எனக்கு இப்பொழுதே கொடுத்து அருள்புரிவாயாக!

உறுதல் - அடைதல்; நத்துதல் - விரும்புதல்; மானில மாய்கை - இந்நிலவுலக மயக்கம்.

1. பெண்டி 2. சகோதர.

***

பாண்டம்

37. உப்பது பொதிந்த உடலது தனிலே
ஒன்பது வாசலும் ஊத்தை
மெய்ப்பொடு [1]காற்றைப் பொதிந்திடும் பாண்டம்
மெய்யென நண்ணவு நெறியென
செப்பமாய் யுனது பாதபங் கயத்தைத்
தினமுநான் கருதவும் [2]வாழவும்
வைப்பது தருவாய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி கருணாம்பிகையே! நான் எடுத்திருக்கும் இப்பிறவியோ உப்புப் பொதிந்த வெற்று உடலாகும். அதனிடத்திலே பயனற்ற ஒன்பது வாயில்கள் பொருந்தியுள்ளன. அவ்வுடலாகிய பாண்டமோ வெற்றுக் காற்றினை பொதிந்து வைக்கின்ற பாத்திரமாக அமைந்துள்ளது. இப்பொய்யான வாழ்வை விட்டொழித்து மெய் வாழ்க்கையாகிய பேரின்பத்தை அடைய உயர்ந்த நெறிகளை திருத்தமுற நான் அடையுமாறும் அதற்கு உறுதுணையாக உனது திருவடித் தாமரைகளை நாள்தோறும் உள்ளத்திலே நிறுத்துமாறும் அருள்புரிந்து உயர்ந்த வாழ்வினை அளிப்பாயாக!

ஊத்தை - பயனற்ற கறையுடையது; பாண்டம் - பாத்திரம், உடலாகிய பாண்டம்; நண்ணுதல் - அடைதல்.

1. காத்தை 2. வாளவும்

உறவு

38. நரைதிரை மிகவும் பெருவய தெய்தி
[1]நமதுடல் பிணியது கொண்டு
உரைநிரை குளறி [2]விழியது சொருகி
உயிரது [3]உடல்விழும் போது
தரைநிரை மாய்கை [4]மனைவியர் சிறுவர்
தானது துணையிலை நீயே
வரைதுரை மகளே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளிப் பதியின் தலைவியே! இப்பிறவியிலே உடலில் நரை முடிகள் தோன்றுவதும், உடல் சுருங்கிச் சோர்வதும் வயது முதிர்வினாலே தளர்ச்சியடைவதும் இயற்கையாக நிகழுகின்றன. இவற்றைத் தவிர உடலில் பலவகைப் பிணிகள் தோன்றி வருத்துவதும் சொற்கள் குளறித் தடுமாறுவதும் விழிகள் குழியடைந்து பார்வையற்ற நிலை தோன்றுவதும் ஆகிய பலவகை மூப்புத் துன்பங்களோடு இவ்வுடலிலிருந்து உயிர் நீங்கும் தருவாயில் இந்த நிலவுலகத்திலே நிறைந்திருந்த பலவகையான மாயச் செயல்களும், மனைவி, மக்களும் உற்ற துணையாக நின்று துன்பத்தைப் போக்குவது கிடையாது. ஆனால் அச்சமயத்தில் உடனிருந்து அருள்புரிபவர் நீயே ஆவாய் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.

உரைநிரைகுளறி – சொற்கள் குளறித் தடுமாறுதல்; தரைநிரை மாய்கை – இவ்வுடலிலிருந்து உயிர் நீங்கும் தருவாய்.

1. நமதுடல்ப் 2. விளியது 3. உடல்விழும் 4. மனவியர்

***

துணை

39. புவியது மாய்கை யாசையி னாலே
பெண்டுபிள் ளைகளென யெண்ணி
தவியது யில்லாப் பாடது பட்டுத்
தானது லட்சணை பண்ணி
[1]இவையது நமது துணையென வெண்ணும்
[2]இயல்பிலா மூடசன் டாளன்
[3]வவியனை [4]யாட்கொள் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே

மனிதப் பிறவியின் பொறிபுலன்களுக்கு இன்பத்தை அளிக்கும் இந்நிலவுலக ஆசைகளிலே மயங்கியவனாய் பெண்டு, பிள்ளைகளை நிலையென்று எண்ணியவனாய் அவர்களுக்காகச் சிறிதும் ஓய்வில்லாது உழைத்துப் பாடுபட்டு அவற்றையே எனக்குத் துணையென நம்பி வாழ்க்கையைக் கடத்தி வரும் இயற்கையறிவில்லாத-வனாகிய அடியேனின் அறியாமையையும், மூடத்தன்மையையும், பாவச் செயல்-களையும் அகற்றி என்னை ஆட்கொண்டு அருள்புரிவாயாக!

லட்சணை – ஏற்றல்; மூடசண்டாளன் – இயற்கையறிவில்லாதவன்; வலியன் – பாவி, வேத முத்திரை தரியாத பாவி.

1. யிவையது 2. யியல்பிலா 3. வலியனை
4. யாட்கொள்.

***

ஐயறிவு

40. அந்தியும் பகலும் உந்தனைத் [1]தொழுது
[2]அருளது நீங்கிடா வகையால்
எந்தநற் சிந்தை ஐயறி வதனை
[3]யீசுவரி [4]யொருவழிப் படுத்தி
[5]முந்தவுன் னருளால் [6]இயல்பர மாண்டு
முறைமையா விளங்கிட [7]உனையே
[8]வந்தனை புரிந்தேன் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணை நா யகியே.

திருப்புக்கொளி கருணாம்பிகையே! இரவு பகல் எந்த நேரமும் உன்னை உள்ளத்திலே நிறுத்தி உன் புகழ் பாடி உன்னுடைய அருளைப்பெற விரும்புகிறேன். அந்த உள்ளமானது என்னை விட்டு நீங்காதவாறு என்னுடைய சொல்லாலும், செயலாலும் ஐவகை அறிவினாலும் ஒன்றுபட்டு நிற்க உனது அருளைத் தருதல் வேண்டும். என்னுடைய அறிவினை ஒருவழிப்படுத்தி இவ்வுலக இன்பத்தையும் மறு-வுலக இன்பத்தையும் ஒருங்கே ஆண்டு முறை தவறாது விளங்க வேண்டும் என்ற ஆசையால் உன்னை வந்தித்து தொழுது நிற்கிறேன்.

ஐயறிவு – ஓரறிவு முதலாய் ஆறறிவு ஈறாய் உள்ள உயிர்களின் தன்மை; முறைமை – முறை தவறாமை; வந்தனை – வந்தித்துத் தொழுதல்.

1. தொழுது 2. யருளது 3. யீசுபறி 4. யொருவளிப்
5. முந்தஉன் 6. யியல்பர 7. யுனையே 8. வந்தெனை

***

உருகுதல்

41. உன்பத நினைய உயர்கதை [1]கேழ்க்க
உனதருள் மனதினில் நம்ப
அன்பொடு பகலும் உனைத்துதி செய்ய
அய்யறி [2]வொருவழிப் படுத்தி
இன்புட னுனையே நெக்குநெக் குருகி
[3]யிறைஞ்சிடு மன்பர்பால் வந்து
வன்பது [4]அகலும் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி கருணை நாயகியே! உன்னுடையத் திருவடித் தாமரை-களை நான் என்றும் உள்ளத்திலே நிலைநிறுத்த வேண்டும். உன்னுடைய பெருமை மிக்க திருவிளையாடல்களையெல்லாம் என் செவியாறக் கேட்டு மகிழ வேண்டும். உன்னுடைய திருவருட் செயல்களையெல்லாம் அன்போடு ஏற்க வேண்டும். இரவு பகல் எக்காலமும் உன்னையே துதிக்க என்னுடைய அய்யறிவுகளும் ஒருவழிப்பட்டு நிலை நிற்க வேண்டும். என்னுடைய உள்ளத்திலே இன்பம் பொங்க உள்ளம் உருகி உருகி நிற்க வேண்டும். இவ்வாறு உன்னையே நினைத்து உள்ளம் உருகி எக்காலமும் உன்னைத் துதிக்கும் அடியவர்களிடத்திலே வந்து தோன்றி அவர்களின் துன்பத்தைப் போக்கும் வடிவினளாய் திருப்புக்கொளிப் பதியில் வீற்றிருக்கின்றாய்.

நெக்கு நெக்குருகி - உள்ளம் நைந்து உருகுதல்; இறைஞ்சுதல் - வேண்டுதல்; வன்பது அகலும் - துன்பமானது நீங்கும்.

1. கேள்க்க 2. யொருவளிப் 3. யிறஞ்சிடு 4. அகலும்.

***

உன்னையே

42. தோத்திர முன்னைத் [1]தொழுவது முன்னை
தொண்டுபட் டிருப்பது முன்னை
நேத்திர மதனில் காண்பது முன்னை
நெஞ்சக நேயமு முன்னை
காத்திர மதனில் வணங்குவ துன்னைக்
கனவிலும் நினவிலு முனையே
[2]வாழ்த்துவ துன்னைப் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளித் தேவியே! அவிநாசித் திருத்தலத்திலே வந்து தோன்றிய அடியேன் உள்ளத்தால் புகழ் பாடுவது உன் புகழையே ஆகும். என் கைகளால் தொழுவது உன் திருவுருவையேயாகும். என் செயல்களால் தொண்டு செய்திருப்பது உன் திருவடிகளுக்கே ஆகும். என் இரு கண்களால் கண்டு மகிழ்வது உன் திருவுருவையேயாகும். உள்ளத்தில் நிலைநிறுத்தி அன்பு செலுத்துவது உன் திருவருளையேயாகும், என்னுடைய உடல் உறுப்புக்களால் பணிந்து வணங்குவது உன் திருக்கோவிலேயாகும். இவ்வாறு கனவிலும், நனவிலுமாக நான் வாழ்த்தி வணங்குவது என் தேவியாகிய உன்னையேயாகும்.

தோத்திரம் - உள்ளத்தால் பாடித் துதித்தல்; நேத்திரம் - கண்கள்; நேயம் - அன்பு; காத்திரம் - உடல், உறுப்பு.

1. தொழுவது 2. வாள்த்துவ

***

வில்வம்
----

43. அண்டரு முண்ட காசன னறியும்
அருமுனி வோருறை நகரில்
விண்டல்என் டயிரா பதமது தீர்த்தம்
விளங்கிய காசிமா னதியும்
[1]தண்டிதழ் நீண்ட [2]அந்திதழ் வில்வந்
தரன்பண்டை வெடித்திடா நகரில்
வண்டர்தொண் டாவர் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளிப்பதி கருணை நாயகியே! நீ எழுந்தருளி இருக்கின்ற இத்திருத்தலம் வலபகைத் தேவர்களும், தாமரை மலரை இருக்கையாகக் கொண்டு வீற்றிருக்கின்ற பிரம்மதேவனும், அருந்தவத்தை ஏற்றி பெருமை பெற்றிருக்கின்ற முனிவர்களும் போற்றி வணங்கும் நகரமாகும். இத்திருத்தலத்திலே அமைந்துள்ள தீர்த்தம் 'ஐயிராவதம்' என்னும் தீர்த்தமாகும். அங்கு ஓடுகின்ற ஆறு கங்கைக்கு நிகரானது ஆகும். இத்திருத்தலத்தின் தலவிருட்சமாக; தோன்றுவது ஐந்து இதழ்களோடு கூடிய வில்வ மரமேயாகும். பண்டைக்காலம் தொட்டே புகழ்பெற்று விளங்குவதோடு சிவபெருமானது சங்காரத் தாண்டவக் காலத்தும் அழியாது நின்று அங்கு வந்து ஒழித்த தேவர்களையெல்லாம் காத்தருளிய திருத்தலமுமாகும்.

அண்டர் - தேவர்; முண்டகாசனன் - தாமரை மலரை இருக்கை-யாகக் கொண்ட பிரமன்; விண்டல் - அலர்தல், வெடித்தல்.

1. தண்டிதள்　　　2. அந்திதள்

***

தோல் பொம்மை

44. ஒன்பது கோடி [1]கலைதனி லொன்று
உயர்சிவன் [2]தனக்கருள் தாயே
துன்பது கோடி உடல்மன வினையேன்
தோல்பொம்மைக் கூத்திறு தனிலே
எண்பது கோடி [3]நினைவிது நினையும்
[4]ஈசுவரி மாயிகையில் வினையேன்
வன்பது கோடி யகற்றுபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி அம்பிகையே! அண்ட சராசரங்களில் உள்ள ஒன்பது கோடி கலைகளுள் திருத்தாண்டவம் என்னும் உயர்ந்த கலையினை சிவபெருமான் மேற்கொள்ளுமாறு தூண்டி அருளினாய். அடியேன் கோடிக் கணக்கான உள்ளத் துன்பங்களை இந்த உடலிலும், உள்ளத்திலும் தாங்கி அலைகின்றேன். தோலால் செய்யப்பட்ட பொம்மையின் கூத்தினைப்போல இந்த உடலைத் தாங்கி எண்பது கோடி எண்ணங்களை நினைத்து இந்த உலக மாயிகையில் மூழ்கிக் கிடக்கின்றேன். ஈஸ்வரியே! இவையெல்லாம் உன்னுடைய திருவிளையாட்டின் சக்தியேயாகும் என்பதை அறிவேன். என்மீது உள்ள கோடிக்கணக்கான பகைமையை அகற்றி எனக்கு அருள்புரிவாயாக!

தேல்பொம்பை - தோலால் செய்யப்பட்ட பொம்மை; வன்பது கோடி - கோடித்துன்பம்.

1. களைதனி　2. றனக்கருள்　3. நினைவிறு　4. யீசுபரி

***

மறைகள்

45. உன்னிட நிலமை கன்னியென் றுரைக்கும்
உயர்சிவன் பிரமநா சாரி
[1]என்னிட மறைகள் [2]சாத்திர மெல்லாம்
யியம்பது கன்னியென் றுன்னை

உன்னுட னுதித்த துலகெலா உலகத்
துயிரெலா முந்தனைத் தாயே
வன்னையென் றுரைக்கும் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் வீற்றிருக்கும் எனது அன்னையே! உன்னுடைய உயர்ந்த தன்மையைச் சிறந்த தெய்வீகத் தன்மை வாய்ந்த ஒன்று என இறைவன் உரைப்பான். அச்சிவ பெருமானால் தோற்றுவிக்கப்பட்ட நான்கு வகை மறைகளையும் சிறந்த ஒழுக்கமுடைய ஆசானாக விளங்கிய பிரமன் கற்று ஏற்றுக்கொண்டான். அந்த மறைகளும் பிறவாகிய சாத்திரங்களும் உன்னை அழகிய கன்னித்தன்மை வாய்ந்தவள் என்றே கூறுகின்றன. உன்னோடு தோன்றிய இந்த உலகங்களும், அந்த உலகத்து உயிர்களும் உன்னையே தாயாகக் கருதிப் போற்றுகின்றன.

மறைகள் - வேதங்கள்; இயம்புதல் - சொல்லுதல்.

1. யென்னிட 2. சாஃஷத்திர

***

சக்தி

46. முந்தவே சத்தி சிவத்தைநீ படைத்து
முற்றுமே யவரிடந் தனிலே
[1]வந்திடும் சத்தி சிவமதாய்ப் [2]பிரிந்து
மன்னுயி ரனைத்தையுங் [3]காத்தாய்
உந்தனை யல்லா லொருதெய்வ முண்டோ
உயிர்சிவன் சத்திநீ தாயே
வந்தனை புரிந்தேன் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

மன்னுயிர் - இவ்வுலகத்து நிலைபெற்ற உயிர்கள்; முற்றும் - அனைத்தும் எல்லாம்.

1. வந்திடும்ச் 2. பிறிந்து 3. காற்த்தாய்

***

உருவம்

47. மயேசுர னென்றும் சதாசிவ [1]னென்றும்
மாலன்ன பிரமனாய் வந்தால்
[2]மயேசுவரி யென்றும் உமையவ ளென்றும்
வருவைநீ வாணிலட் சுமியாய்
[3]தயேசுவரி சிவன்பின் வேறுரு [4]வெடுத்தால்
சங்கரி யெவ்வுரு வெடுப்பாய்
[5]வயேசுவரி நீயே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளியில் எழுந்தருளியுள்ள எம்பெருமாட்டியே! இவ்வுலகைக் காத்து அருள்புரியும் இறைவர்கள் மயேசுரன், சதாசிவன், திருமால், அன்ன வாகனத்தை உடைய பிரமன் என்ற பல பெயர்களிலே தோன்றி அருள்புரிகிறார்கள். ஆனால் நீயோ - மயேசுவரி என்றும், உமையவள் என்றும், வாணி என்றும், இலட்சுமி என்றும் வெவ்வேறு பெயரிலே தோன்றி அருள்புரிகின்றாயீ. ஆனால், சிவபெருமான் மேலும் ஒரு வேற்று உருவம் எடுத்தால் சிவசங்கரியே நீ என்ன உரு எடுப்பாய்? நீ என்றும் நிலையானவள், இளமையானவள் என்றே நம்புகிறேன்.

மயேசுரன் - சிவபெருமான்; சதாசிவன் - பஞ்சகர்த்தாக்களில் ஒருவர்; இவர் விந்து ரூபம், வியோம வடிவம், படிக நிறமும், பிறை முடியும், ஐந்து திருமுகமும், பத்துக் கரமும் மூன்று நேத்திரமும், உமையொருபாகமும் சௌமியமு முடையவர்; மயேசுவரி - பார்வதி; வயேசுவரி - இளமையான பார்வதி.

1. நென்றும் 2. மயேசுபரி 3. தயேசுபரி
4. வெடுத்தால்ச் 5. வயேசுபரி

***

வாணி

48. தேக்கிய கல்வி வாணியுங் கேள்வர்
திருமுன்பு செய்மெனக் கல்வி
நோக்க மிலாது அறிவமென் றழைக்க
நொடியினி லுமதிடம் வருக
[1]ஏக்கமாய் வாணி யிசைகள் கைவிட
[2]மயேசுவரி கண்டுநீ இரங்கி
வாக்குடைச் செல்வி யருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

கருணை நாயகியே! உலகில் அறியாமையாகிய இருளைப் போக்கும் கல்வியை அளிக்க வல்லவளாகிய கலைவாணியானவள் தன்னுடைய கணவனாகிய பிரமதேவனிடம் படைத்தல் தொழிலினும் கல்வியே உயர்ந்தது என்று வாதிட்டு போட்டியிட்டனர். அவர்களிடையே ஏற்பட்ட போட்டியை முடித்து வைக்க உன்னிடம் வந்தனர். அவ்வாறு வந்தபோது தான் தோற்றுவிடுவேனோ என்ற ஏக்கத்தினால் கலைவாணியானவள் இயல், இசை, நாடகம் எனும் மூவகைத் தமிழில் இசைத் தமிழை மறந்து வருந்தினாள். அவள் நிலையைக் கண்ட அன்னையே நீ அவள்மீது இரக்கம் கொண்டு அவள் வருத்தத்தைப் போக்கிச் சிறந்த வாக்கு பெறும்படியாக அருள்புரிந்தவள் நீயேயாவாய்.

தேக்கிய கல்வி - அறியாமையாகிய இருளைப் போக்கும் கல்வி; வாக்குடைச் செல்வி - சிறந்த வாக்குப் பெற்றவள்.

1. யெக்கமாய் 2 மயீசுபரி.

***

காசித்தவசு

49. [1]காசியில் தவசி விராகனஞ் ஞூறு
[2]கைத்தண்டில் வைத்தது தவறி
யோசைசெர் கங்கை வீள்ந்தமற் திடவும்
உறுதயா ரவநவி னாசி
பேசிய காசிக் [3]கிணத்தினில் தொண்டு
பிறப்பிடக் கண்டுள [4]மகிழ்ந்து
வாசியாங் காசி விசேஉஷபுக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

கருணை நாயகியே! வாரணவாசி எனப்படும் காசிமா நகரத்திலே ஒரு தவ முனிவரானவர் ஐந்நூறு வராகம் பணத்தை தனது தண்டிகையிலே வைத்து மறந்துவிட்டார். அத்தண்டிகையானது தவறுதலாக கங்கையிலே விழுந்து மறைந்தது. முனிவரானவர் அவிநாசித் திருத்தலத்திற்கு வந்து தென்காசி நாயகராகிய இவ் இறைவன் திருக்கோயிலிலே தோன்றியுள்ள காசித் தீர்த்தம் என்று சொல்லப்படும் கிணற்றிலே மூழ்கியபோது அக்கிணற்றிலே தன்னுடைய பொருளானது தோன்றக் கண்டு தென்காசியாகிய இத்திருத்தலத்தின் பெருமையை உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

விராகன் அஞ்ஞூறு - ஐந்நூறு வராகன் பொன்; காசிக்கிணறு - காசித்தீர்த்தம் என்று சொல்லப்படும் கிணறு.

1. காசியில்த் 2. கையத்தண்டியில் 3. வீள்ந்தமந்திடவும்.

***

தாமரை வாவி

50. சங்கது [1]திகழும் தாமரை வாவி
தாண்முரி [2]யிழுவட மற்றும்
சங்கும லிங்க [3]தார்தனை யதனைத்
தானடித் தாள்களும் தள்ள
லிங்கம ததனைத் [4]தெப்பநற் குளத்தில்
நெறியவன் எறிந்துபோ கிவைதை
வங்கது [5]மீட்கொண் டருள்செப்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ருய)

திருப்புக்கொளி நாயகியே! அத்தவ முனிவரானவர் வயது முதிர்ந்து நடை தள்ளாடி தளர்ந்திருந்த காலத்து தன்னிடமிருந்த எழுத்து முறி ஓலைகளையும், சங்கு, லிங்கம் போன்ற பூசைப் பொருட்களையும் இத்திருத்தலத்திலே உள்ள சங்குகள் நிறைந்த தாமரைக் குளத்திலே எறிந்துவிட்டார். அப்பொருட்களானவை உயர்ந்த அந்தத் தீர்த்தக் குளத்திலிருந்து வெளிப்பட்டுத் தோன்றியது. இப் பெருமைக்குரியது இத்திருத்தலம்.

வாவி - குளம்; தாண்முரி - எழுத்துமுறி ஓலை; நெறியவன் - நன்னெறியுடைய முனிவர்; மீட்கொண்டு - வெளிப்பட்டுத் தோன்றுதல்.

1. திகளும் 2. யிளுவட 3. தாற்தனை
4. தெற்பநற் 3. மீண்கொண்

***

சித்தர்கள்

51. கொங்கணர் போகர் [1]அமுகணி சித்தர்
[2]குதம்பைபா ராட்டியே முதலாய்
நங்குணர் சட்டர் முனியிடைக் காடர்
நிற்றிட [3]மூவரே யகப்பை
உங்குணந் தன்னில் [4]அவளுடன் நின்று
உயர்நட்ட [5]சித்திகள் பெற்றார்
[6]வங்கணற் கருள்செய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ருயக)

திருப்புக்கொளி கருணை நாயகியே! காலாங்கிநாதரின் மாணாக்கரும், சித்தர்களில் உயர்ந்தவருமாகிய போகர், போகரின் மாணாக்கராகிய கொங்-கணர், அமுகணி சித்தர், குதம்பேய்ச் சித்தர், பராசர முனிவர் முதலான

சித்தர் முனிவர்களும், மருத்துவத்தில் சிறந்தவராகிய சட்டைமுனி, இடைக்காடர் அகப்பைச் சித்தர் என்ற மூவரும் உட்பட அனைவரும் உன்னுடைய திருவருட்குணத்தைப் பெற்று உயர்ந்தவர்களாவார்கள். பெருமகிழ்ச்சியுறுமாறு சித்தர் முதலான முனிவர்களுக்கு அருள்புரியும் திருத்தலமே நீ எழுந்தருளியுள்ள இத்திருத்தலமாகும்.

கொங்கணர் - கொங்கணர் என்ற சித்தர், போகரின் மாணாக்கர்; வங்கணன் - முனிவர்; சித்திகள் - சித்து வேலைப்பாடு தெரிந்தவர்.

1. அருகணி 2. குதம்பை 3. மூவரெய்
4. அவமுட 5. சித்தகளி 6. வங்கணற்கீ

***

யோகியர்

52. நன்பொடு உனையே ஆரா தனைசெய்து
[1]ஞானயோ [2]கீசுர ராகி
தொன்பொடு உனது [3]அஷ்டசித் தியினால்
சிறந்திடும் பெரியவ ராகி
யொன்பது கோடி சித்தருன் பதத்தை
உன்னியே பரகதி [4]சேர்ந்தார்
வன்பொடு [5]வினையேற் கருள்செப்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே (ருயஉ)

திருப்புக்கொளி கருணை நாயகியே! உன்மீது கொண்ட உள்ளன்பினாலே உன்னையே நினைத்து நாள்தோறும் ஆராதனை முதலிய பணிவிடைகள் செய்து உயர்ந்த ஞானத்தைப் பெற்று யோகீஸ்வரர் ஆனோர் பலராவர். அவர்களே 'சித்தர்கள்' என்ற பெயரைப் பெற்றனர். உயர்ந்த சித்தர்களாகிய அவர்கள் உனது அட்டசித்தி என்னும் மாயையினால் பெருமை பெற்று விளங்கினார்கள். அத்தகு பெருமை பெற்ற ஒன்பது கோடி சித்தர்கள் உன் திருவடியையே நினைத்துத் துதித்து பேறு பெற்றார்கள். அத்தகு பேற்றினை அடியேனுக்கும் கொடுத்து அருள் புரிவாயாக.

நன்பொடு - உன்னையே உள்ளன்பினாலே நினைத்தல்; ஞானயோகீசுரர் - ஞானத்தை உடைய துறவியர்; சித்தர் - சித்து வேலை தெரிந்தவர். பரகதி - திருவடி பேறு பெறுதல்.

1. ஞானயொ 2. கிசுர 3. அஷ்ட்டசித்தி
4. செர்ந்தார் 5. வினையெற்கீ

***

மும்மூர்த்திகள்

53. [1]திரிபுரை தகனி மாலய னரனும்
சிறந்திடும் ஆசனக் காலாய்
அரியயன் சிவனும் மூவருள் பதத்தை
[2]அர்ச்சனை புரிவர்க ளம்மா
விரிவுறு அகில [3]கோடியுள் பதத்தில்
[4]மேவிடும் சிலம்பதாஞ் சிலம்பில்
வருவது பருளாம் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி நாயகியே! திரிபுரங்களை எரித்த அம்பிகையே! திருமாலும், பிரமனும், சிவபெருமானாகிய மூவரும் உலக மூர்த்திகள் என்ற பெயரால் உலகைத் தோற்றுவித்து அளித்துக் காப்பவர் ஆவர். அந்த மூவரும் உலக நாயகியாகிய உன்னையே அர்ச்சனைப் புரியும் தகுதிக்கு உரியவள் ஆவாய். அவ்வாறு இருக்க, பரந்த இந்த உலகத்திலே உள்ள அனேக கோடி உயிர்கள் எல்லாம் உனது திருவருளையே நினைத்து உன்னுடைய திருவடிகளிலே தஞ்சம் புகுந்து கிடக்கிறார்கள் என்பது வியக்கத்தக்க ஒன்றன்று. அவர்கள் அடைக்கலம் புகுந்த திருவடியில் ஒலித்துக் கிடக்கும் சிலம்புகளானவை ஒலி செய்ய தோற்றமளிப்பவள் நீயாவாய்.

திரிபுரை - திரிபுரங்களை எரித்த அம்பிகை; மேவிடும் - திருவடி-களிலே தஞ்சம் புகுந்து கிடத்தல்; பருளாம் - பருப்பொருள்.

1. திரிபுறை 2. அற்ச்சுனை 3. கொடி 4. மெவிடும்.

***

பராபரவல்லி

54. ஆணுமாய்ப் பெண்ணா [1]யகிலகா ரணியாய்
அண்டரண் டங்களு மாகி
தாணுவாய்ப் பரையாய் [2]தற்பரா னந்தி
சகலபல் லுயிர்களு மாகித்
தூ ணுமாய்ச் சிவத்தைக் [3]காத்திடும் பொருளாய்த்
தோன்றினை பராபர வல்லி
வாணியாத் திருவாய் [4]புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி கருணை நாயகியே! இவ்வுலகிலே ஆண் என்றும், பெண் என்றும் தோற்றமளிப்பவள் நீ. அனைத்துலக உயிர்களின் தோற்றத்திற்கு அடிப்படைக் காரணமானவளும் நீயே. மேலுலகு, கீழுலகு என்னும் அனைத்துலகங்களுமாகி நிற்பவளும் நீயே. நிலையான இலிங்க வடிவமாய்த் தோன்றும் பெருமானாய், அப்பெருமானின் ஒரு பாகத்தைப் பெற்ற பராபரியாய் சிவசக்தியாய் ஆனந்தமயமானவளாய்த் தோன்றுபவளும் நீயே. உலகத்து உயர்திணை, அஃறிணை என்று சொல்லப்படும் அனைத்து உயிர்களுமாகி நிற்பவளும் நீயே. அவ்வுலகத்தைத் தாங்கும் தூணாய் நின்று அதைக் காக்கும் சிவத்தையே காத்திடு பொருளாய் நிற்பவளும் நீயே. பரம், அபரமாகிய ஆதி அந்தப் பொருளாய் நிற்பவளும் நீயே. கலைவாணியாலே போற்றப்படும் உனது பெருமைகளை வாழ்த்துகிறேன்.

அகிலகாரணி - அனைத்து உயிர்களுக்கும் தோற்றமளிப்பவள்; உலக உயிர்களுக்கெல்லாம் தலைவி; அண்டரண்டம் - அண்டம் + அண்டம் - மேலுலகும், கீழுலகும்; தாணுவாய் - இலிங்க வடிவமாய்; பரை - சிவபெருமானின் ஒரு பாகத்தைப் பெற்ற உமை. ஆனந்தி - ஆனந்த மயமானவள்; பராபரவல்லி - பரம், அபரம் ஆகிய ஆதி அந்தப் பொருளாய் நிற்பவள்.

1. அகிலகாறணி　　2. தற்பரா
3. காற்றிடும்　　4. புக்குளிப்

***

<u>வாமனன் தங்கை</u>

55. ஆமையாய் மீனாய்ப் பன்றியாய்க் [1]கருகி
　　அரிநர சிங்கரு பமுமாய்
தேமலி பரசு ராமனாய் வாசு
　　தேவனாய்த் தசரத ராமர்
பூமகள் மார்பன்பல் தேவனென் றுரைக்கும்
　　புகன்றிடி லப்பதத் தாரம்
வாமனன் தங்கைப் புக்கொளிப் பதியில்
　　வளர்பெருங் கருணைநா யகியே. (ருயரு)

திருப்புக்கொளி கருணை நாயகியே! ஆமையாகவும், மீனாகவும், பன்றியாகவும், கரியாகவும் தனித்தனியே அவதாரமெடுத்தவரும், நரசிங்க வடிவமாகி நின்றவரும் ஆகிய திருமாலின் தங்கையாக விளங்குபவளே புக்கொளிப் பதியில் எழுந்தருளி இருப்பவளே! சிறந்த வல்லமை பெற்ற பரசு என்னும் ஆயுதமேந்திய பரசுராமனாகவும், வாசுதேவராகவும், தசரத சக்கரவர்த்தியின்

மகனாகிய ஸ்ரீராமபிரானாகவும், திருமகள் வீற்றிருக்கின்ற மார்பை உடையவ-ராகவும், பல தேவராகவும், பல பக்தர்களாலும் போற்றப்படுகின்ற திருமாலின் தங்கையே. வாமனனாக வடிவமெடுத்த எம்பெருமானின் தங்கையே. உன்னையே துதிக்கிறேன்.

அரிநர சிங்கரூபம் - அவதாரமெடுத்த சிங்கரூபம், தசரதராமர் - தசரத சக்கரவர்த்தியின் மகனாகிய ஸ்ரீராமர்; பூமகள் மார்பன் - திருமகள் வீற்றிருக்கும் மார்பை உடையவன்; வாமனன் - திருமால்.

1. கரிகி 2. திசரத.

***

அர்த்தநாரி

56. கலியரன் விக்கறத் தனாரியிட் சாடகங்
காளதன் காமசந் திரராய்
கெலியுமைக் கிறாத அகோரவீ ரருமாயக்
கேசரி புரகந் [1]தாய(ம்)
சலந்தர கால கர்மதன் ரிஊ்ப
சறுவேஊ் [2]தெட்சன விஊேகர
வலசுக [3]சூத்திரர் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ருயஅா)

புக்கொளி நாயகியே! உனது இத்திருத்தலம் 'கலி' என்னும் சனி பகவானை வென்றவரும் உன்னை ஒரு பாகத்திலே ஏற்று அர்த்தநாரியாய் விளங்குபவரும் கையிலேத் திருவோடு ஏந்தி இரக்கும் நிலையிலே பிட்சாடனராய் விளங்குபவருமாகிய எம்பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலமாகும். மேலும் உயிர்களைக் காக்க உணவளித்து பிட்சையிலிருந்து நீக்கும் ஒளியுடையவராய் கிறாத வடிவினராய் அகோர வடிவினராய், வீர உருவினராய், கேசரிபுரத்தை அழித்த-வராய், சலந்தர், காலகர்மர், ரிஊ்பவாகனர், சர்வேசர், தட்சன விஊேசகர், வலசூத்திரதாரர் என்னும் சிறப்புப்பெயர்களை உடையவராய் விளங்கும் எம்பெருமான் எழுந்தருளி இருக்கின்ற திருத்தலமே உனது திருத்தலமாகும்.

கலியரன் - 'கலி' என்னும் சனிபகவானை வென்றவன்; பிட்சாடகன் - கையிலே திருவோடு ஏந்தி இரக்கும் நிலையிலே பிட்சாடனராய் விளங்குபவர்; கேசரிபுரக் கந்தாயர் - கேசரிபுரத்தை அழித்தவர்.

1. தாய(ம்) 2. தெட்சன 3. சூஊ்த்திரர்.

***

மிருகண்ட முனிவருடைய தவத்தைக் கண்டும் மாற்கண்டேயருடைய தவத்திற்கு இரங்கி, அவனுக்கு வயது பதினாறு என்று பணித்து அம்மாற்கண்டேயனைக் கவர வந்த காலனைத் தன் காலினால் உதைத்து அருளினார் இறைவன். அங்கு தோன்றிய தேவர்கள் மொழியையே முதன்மையாகக் கொண்டு முதன்மை பெறச் செய்தார். அத்தகு மாற்கண்டேயருக்கு இறைவன் திருவருள் புரிந்த நகரம் திருப்புக்கொளித் திருத்தலமாகும்.

மிருகண்டன் - மிருகண்டன் என்னும் பெயருடைய முனிவன்; ஓதி - பணித்து, சொல்லி; மெய்யது - முதன்மை பெறுவது.

1. மிறுகண்டன் 2. வொதி 3. மாற்க்கண்டன்
4. தவந்தனிற்க் 5. விமன்றனை 6. தேவர்க்கள்
7. மொளியை 8. மாற்க்கண்டற்

***

சென்மம்

59. [1]தெண்டிரை [2]சூழும் [3]புவிதனில் சென்மம்
செனித்திடு [4]போரது தனக்கு
தண்டமிழ் கொண்டுந் தனையற உணர்ந்து
சார்பதாய் உனைநினைந் துருகி
தொண்டுசெய் தகலா நன்பொடு உனையெ
தொழுதவர்க் கதியது பெறுவார்
வண்டிரை [5]வனஞ்சூழ் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

வண்டுகள் நிறைந்து ரீங்கார ஒலி செய்கின்ற மலர்களை உடைய சோலைகள் சூழ்ந்த திருப்புக்கொளித் திருத்தலத்தில் எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகியே! தெளிந்த அலைகளையுடைய பரந்த கடலால் சூழப்பட்டது இந்நிலவுலகம். இவ்வுலகின்கண் மனிதப்பிறவியாகப் பிறக்கும்போது அப்பிறவிக்கு இனிய தமிழ் மொழியினாலே பாடித் துதிக்கும் சான்றோர்கள் நிறைந்து இறைத்தன்மையை உணர்ந்து உள்ளம் உருகி அந்த இறைவனுக்கு என்றும் நீங்காத உள்ளத்தோடு அர்ச்சனை முதலிய பூசைகள் செய்து அதன் பயனாய் உயர்ந்த கதி என்னும் பெரும்பேற்றினைப் பெறுவர்.

தெண்டிரை - தெளிந்த அலைகளையுடைய கடல், செனித்திடும் - மனிதப்பிறவியாகப் பிறத்தல், பிறந்திடும்; தண்டமிழ் - இனிய தமிழ் மொழி; வண்டிரை - வண்டுகள் நிறைந்த இடம், சோலை.

1. தெண்டிரை 2. சூளும் 3. புவிதனிச் 4. பொரது
5. வனஞ்சூள்

வல்லவர்

57. கல்லினி லெறிந்தும் பிள்ளையை [1]யறுத்தும்
[2]கண்ணிடந் [3]தர்ச்சனை [4]புரிந்தும்
வில்லினி லடித்து மதன்தலை வெட்டி
விட்டெறி வாட்டயன் றானும்
அல்லினை [5]னிற்பரனை தூதுசெய் சுந்தர
னவன்வசத் தன்வயர் கிளித்தான்
வல்லரா முனது புகீகொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ருயஎ)

கருணாம்பிகையே! நாள்தோறும் கல் எறிந்து பூசித்து வந்தார் சாக்கிய நாயனார். இறைவன் விரும்பியவாறு உணவளிக்கத் தன் மகவினை அறுத்து பிள்ளைக்கறி அளித்து வழிபட்டார் சிறுத்தொண்ட நாயனார். தனது கண்ணினைப் பெயர்த்து இறைவன் கண்ணிலே வைத்து வழிபட்டு நின்றார் கண்ணப்ப நாயனார். வில்லால் அடித்துத் தன் தவத்தினை முடித்து வெற்றி கண்டார் அர்ச்சுனன். தன் தலையைக் கிள்ளியெறியுமாறு பெரும்பிழை செய்து மீண்டும் விமோசனம் பெற்றார் பிரமன். பரவையாரிடத்துத் தூதுசெல்ல இறைவனை ஏவினார் சுந்தரமூர்த்தி நாயனார். தன் வயிறு கிழித்து வெளித்தோன்றும் நிலையைப் பெற்றவன் வாதாபி. இத்தகு வல்லவர்களாகிய அடியவர்கள் நிறைந்திருக்கின்ற பதியே திருப்புக்கொளித் திருத்தலமாகும்.

நிற்பரன் - சிவபெருமானாகிய இறைவன்; வல்லர் - வல்லவராகிய அடியவர்கள்.

1. யருத்தும் 2. கன்னிடந் 3. தற்சனை
4. புரிந்து(ம்) 5. னிற்ப்பரனை.

***

மார்க்கண்டன்

58. வந்துதான் [1]மிருகண்டன் தவந்தனைக் கண்டு
வைத்துபதி னாறென [2]வோதி
[3]தந்தமார்க் கண்டன் [4]தவந்தனிற் கிரங்கித்
தாளினா [5]லெமன்றனை யுதைக்க
முத்துதேவ [6]திக்கள [7]மொழியையுன் மொழியை
முன்வைத்து மெய்யதுமென் பெற்றார்
வந்தமார் [8]கண்டற் கருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (ருயஅ)

சக்திசிவம்

60. தசைரத்த நாடி யுடம்பினில் வலிமை
சக்தியின் கூறிது தானே
இசையுற்ற சீவன் யெலும்புயிந் திரியம்
யீசுரன் கூறிது வாகி
நசையுற்ற சக்தி சிவமதாய் நின்று
நாயகி யுடலுயிர் படைத்தாய்
வசையுற்ற [1]நகராம் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (சுய)

பலவகை வளங்களும் சூழ்ந்த திருப்புக்கொளிப் பதியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! தேவியாகிய உனது ஒரு கூறு சக்தி எனப்படும். அது இவ்வுடலில் தசை, ரத்தம், நாடி, உடல் வலிமை என்னும் கூறுகளில் அடங்கும். இவையே சக்தியின் கூறாகும். எம்பெருமானின் கூறாக விளங்குவது 'சீவன்' ஆகும். இது புகழை உடைய ஒன்று. எலும்பு, இந்திரியம், உயிர் ஆகியவை இந்த இறைவன் கூறுகளாகும். சக்தி, சிவம் என்னும் இருவகை விருப்ப நிலையிலே நின்று தேவியாகிய நீ, இவ்வுடலையும் உயிரையும் படைத்தாய்.

நசையுற்ற - விருப்பம் பொருந்திய; வசை - பகை.

1. நகறாம்.

***

பரவெளி

61. [1]அஷ்டநற் கிரிகள் சுவாசுகற் பகர்வாய்
அதுநடுத் தூண்மகா மேரு
முட்டவும் பரவெளி பெய்த்திரு சுடர்கள்
முறைவிளக் கிட்டநிற் புவனம்
[2]இஷ்டமும் யிருனூ ற் றிருபத்து [3]நாலும்
யியலடுக் கொன்கில ரண்டம்
[4]வட்டநற் [5]சிற்றல விளையாடு புக்கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (சாயக)

உயர்ந்த திருத்தலமாகிய திருப்புக்கொளியில் திருவிளையாடல் புரியும் கருணாம்பிகையே! இமயம் முதலாகிய எண்மலைகளும், அத்திருத்தலத்தின் எட்டுத் திக்குச் சுவர்களாகின்றன. அதன் நடுத்தூண் மகாமேரு மலையாகும். பரந்த இடமாகிய ஆகாயவெளியின் சுடர்களாக விளங்குபவை சூரிய சந்திரர் என்னும் இரு சுடர்களாகும். இத்தகு இரண்டு விளக்குகள் இடப்பட்ட பரந்த வெளியே உனது

இருப்பிடமாகிய இந்நிலவுலகமாகும். இதன் இருநூற்று இருபத்து நாலு இயலடுக்குகளும் உனது விருப்பப் பரவெளியாகும். ஒளிபொருந்திய இத்தகு இயலடுக்குகளின் கூட்டமே இருவகை அண்டங்களுமாகும்.

அஷ்ட நற்கிரிகள் - இமயம் முதலாகிய எண் மலைகள். அவை: புவனம் - இந்நிலவுலகம்,

1. அஷ்டநற்கிரி 2. யிஷ்ட்டமும் 3. னாலும்
4. வட்டநற்ச் 5. சிற்றலை.

***

இலட்சணம்

62. அஞ்சுலட் சணஞ்சேர்ந் தாவது மென்ன
[1]அருளறி [2]யார்தமிழ்ப் புவியில்
கொஞ்சலட் சணஞ்சேர்ந் [3]தொளிது மங்கி
குவலையந் தனில்விளங் காது
மிஞ்சுலட் சணஞ்சேர் உனதரு ளல்லால்
வேறொரு [4]பயனிலைத் தேவி
வஞ்சலட் சணந்தீர் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (௬௰௨)

'கபடமனம்' என்று சொல்லக்கூடிய கொடுமைத் தன்மைகள் அறவே நீக்கப்பட்ட திருப்புக்கொளியில் வீற்றிருக்கும் கருணை நாயகியே! ஐவகை லெட்சணங்களும் பொருந்திருந்தும் அதனால் ஆவது ஒன்றுமில்லை. அருளுள்ளத்தைப் பெறாதவர்கள் இந்த தமிழ் மண்ணில் குறைந்த அழகு சேர்ந்து விளங்குவது மங்கி இந்நிலவுலகத்தில் உயர்ந்து விளங்காது, மிக உயர்ந்த உயில் இலக்கணங்கள் எல்லாம் சேர்ந்த உனது அருள் ஒன்றே நிலைத்த பயனைத் தருவதாகும். மற்றவையனைத்தும் பயனற்றவையேயாகும்.

அஞ்சுலட்சனம் - ஐவகை இலக்கணங்கள். அவை: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன; குவலயம் - இந்நிலவுலகம்.

1. அருளரியார் 2. தமிள்ப் 3. தெளிவது 4. பயநிலைத்

***

காவலர்

63. தரைக்கா வலரா யிருந்திடும் [1]போது
 தயாபரி யுனதருள் தன்னை
உரைக்கா வலரா யிருந்திடும் போது
 உடலெடுத் தொருபய [2]னில்லை
புரைக்கா [3]டடைசூழ் திருவவி னாசி
 புண்ணியன் [4]வலப்புறம் பெற்றாய்
வரைக்கா வலன்சேர் புக்கொளிப் பதியில்
 வளர்பெருங் கருணைநா யகியே.

மலையாகிய அரண் நிறைந்த திருப்புக்கொளிப் பதியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! இந்நிலவுலகத்தின் காவலர்களாக அரசுரிமை பெற்றிருக்கும்போது தயாபரியாகிய உனது அருளினை எண்ணர். உன்னுடைய அருளை எடுத்துரைக்கும் வல்லமை பெறாத உயிர்கள் உடலெடுத்தும் அவ்வுடலின் பயன்பெற்றவை ஆகா. அப்பயனைப் பெற்ற நீயோ அழகிய காடு சூழ்ந்த அவிநாசியில் எழுந்தருளியுள்ள இறைவனின் வலதுபுறத்தைப் பெற்று விளங்குகிறாய்.

தரைக்காவலர் - இந்நிலவுலக காவலர்; தயாபரி - பார்வதி; புரைக்காடடை - அழகிய காடு சூழ்ந்த இடம் (அவிநாசி); வரை - மலை.

1. பொது 2. நில்லை 3. டடைசூள் 4. வலப்பிறம்

***

காத்தல் கடன்

64. தண்ணிலாக் கண்ணி தரித்திடும் [1]பரையே
 தமியனும் அனுதின முலகில்
மண்ணினால் பெண்ணில் மயங்கிடா திருக்க
 வகையதா யருள்செய்வா யெனையும்
கண்ணினால் [2]நோக்கித் [3]திருவுளம் புரிந்து
 [4]காப்பதுங் கடனுனக் கம்மா
வண்ணமாங் கன்னி புக்கொளிப் பதியில்
 வளர்பெருங் கருணைநா யகியே.

எல்லா வகையான அழகுகளும் நிறைந்து, என்றும் அழியாப் பேருடைய திருப்புக்கொளிப் பதியில் வீற்றிருக்கின்ற கருணை நாயகியே! குளிர்ச்சியும் அழகும் பொருந்திய 'கண்ணி' என்னும் மாலையை அணிந்திருக்கும் உமையம்மையே. துணையற்றவனாகிய அடியேன் இந்நிலவுலகில் பெண்மை மோகத்தில் மயங்கி இடம் உறாதவாறு அருள் செய் உனது திருவருள் நோக்கத்தினாலே காத்தருள்புரிவது தாயாகிய உனது கடமையாகும்.

தண்ணிலாக்கண்ணி - குளிர்ச்சியும் அழகும் பொருந்திய மாலை; வண்ண மாங்கண்ணி - அழகு நிறைந்த பார்வதி.

1. பரையெ 2. நொக்கி 3. திருவிளம் 4. காற்ப்பதுங்

***

<u>அய்யறிவு</u>

65. கலைமதித் தசெஞ் சடா தரியே
கள்வனான் அய்யறி வதனால்
அலைமதிக் கருத்த னற்புத சண்டாளன்
அறிவினி லடங்கிடா கொடிய
புலைபடைத் தவியன் [1]தன்நினைவு
பொய்ந்நெறி [2]மாதரை விரும்பி
வலைமதிக் கருள்செய் புக்கொளியி பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (சாயரு)

அழகிய இளநிலவுக்கு அருள்புரிந்து ஏற்ற திருப்புக்கொளிப் பதியில் வீற்றிருக்கும் கருணை நாயகியே! அந்நிலவால் போற்றப்பட்ட செம்மையான கூந்தலையுடைய பார்வதி தேவியே; உயர்ந்த அறிவாகிய பகுத்தறிவுக் கள்வ-னாகிய நான் நிலையான அறிவினை உடையேன் அல்லன். பாவச் செயல்களிலே மிகுந்து விளங்கினேன். நல்லறிவுக்கு இடம்கொடாது கொடிய கொலைத் தொழிலை மேற்கொண்டு பாவியாய்த் தன் உள்ளமறிய பொய்ந் நெறி ஒழுகும் மாதரை விரும்பி அலைவனாவேன். என்னுடைய இத்தீச் செயல்களை நீக்க அருள்புரிவாயாக.

கலைமதி - அழகிய இளநிலவு; அலைமதி - அலையும் புத்தி; சண்டாளன் - ஐந்தறிவினையுடைய பாவி.

1. றன்னினவு 2. மாதறை

***

<u>வந்தனை</u>

66. சிந்தனை யுன்னை யந்தியும் பகலும்
தெரிசினை செய்வது முன்னை
வந்தனை யுன்னைப் புந்தியில் [1]மறவார்
[2]வாழ்த்துவார் தோத்திர முன்னை
உந்தனை யல்லால் [2]வேறொரு தெய்வ
உணர்கிலாப் படிதா யெனையும்

வந்தனை யாட்கொள் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி என்னும் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள கருணாம்பிகையே! எக்காலமும் எனது உள்ளத்திலே உன்னையே நினைக்கிறேன்; உன்னையே தியானிக்கிறேன்; இரவும் பகலும் எனி மனக்கண்களால் உன்னையே காண்கிறேன்; கண்டு வழிபடுகிறேன்; எப்போதும் உன்னையே வணங்கித் துதிக்கிறேன். தங்கள் அறிவாகிய சிந்தனையில் என்றுமே உன்னை மறவாத அடியவர்கள் உன்னையே வாழ்த்தித் துதிக்கிறார்கள். இவ்வாறு அடியவர்களால் புகழ்ந்து துதிக்கப்பெறும் அன்னையே! உன்னையல்லாது வேறொரு தெய்வத்தை என் உள்ளத்தாலும் நினையாதவாறு எனக்கு அருள்புரிந்து, என்னை யாட்கொள்ள வேண்டுகிறேன்.

சிந்தனை – நினைவுத் தியானம்; அந்தி – இரவு; தெரிசனை – (தரிசனை) – தரிசித்தல்; கண்டு வழிபடுதல், துதி, ஆராதனை, சிந்தனை, தரிசனை, வந்தனை என்னும் தொழில்பெயர்கள் ஈண்டு செயல்களைச் சுட்டி நின்றன; புந்தி – அறிவு, சிந்தனை; மறவார் – வினையாலணையும் பெயராய் மறவாத அடியவரைச் சுட்டியது; உணர்கிலாப்படி – உணராதவாறு; தருதல் – அருள்புரிதல்.

1. மரவார் 2. வாளத்துவார் 3. வெறொரு

***

பொய்யகம்

67. பொய்யகந் தனிலே [1]சேர்வலி மாதர்
புணர்ச்சியி [2]லமுந்திடுந் தொல்லை
செய்யகந் தனிலே மயங்கினுஞ் செல்வம்
சேரினும் உறுதுயர் வந்து
அய்யகந் தனிலே யெண்ணினுன் பதத்தை
அடியனான் மரந்திடா வகையால்
வையகந் தனிலே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

இந்நிலவுலகத்திலே தேர்ந்தெடுக்கப்பெற்ற திருப்புக்கொளியில் எழுந்தருளியுள்ள அம்மையே! இவ்வுலகத்திலே நிலையில்லாத பொய்யான இன்ப சுகத்தையே உள்ளத்தில் தேக்கியவர்களாய், ஆடவர் உள்ளத்திலே மயக்கத்தை உண்டாக்கும் வல்லமை பெற்றவர்களாய் விளங்கும் மகளிருடைய கலவி இன்பத்திலே மூழ்கிக் கிடக்கும் துன்பச் செயலானது என்னுடைய தூய்மையான உள்ளத்திலே

வாறிவிட்டபோதிலும் அம்மையே! உன்னுடைய திருவடிகளை அடியேன் மறந்திடா - வாறு நிலைபெறச் செய்வாயாக. அதேபோல என்னிடத்தில் மிகுதியான செல்வம் சேர்ந்து செருக்குறச் செய்தாலும், பெருந்துன்பமானது என் உள்ளத்தில் குடிகொண்டாலும் நான் உன்னுடைய திருவடிகளை மறந்திடாவகை அருள் செய்வாயாக.

பொய்யகம் - பொய் + அகம் - பொய்மை நிறைந்த உள்ளம்; வலிமாதர் - வல்லமையுடைய மகளிர்; செய்யகம் - செய் + அகம் - செய்ய அகம் - செம்மை பெற்ற உள்ளம்; செம்மை - தூய்மை; அய்யகம் - அய் + அகம் - ஐ + அகம் - உயர்ந்த உள்ளம்.

1. சொல்லி 2. வளுந்திடுந்.

***

மாதர்

68. [1]மஞ்சளைப் பூசி முகமது [2]மினுக்கி
வருசினங் காணவே தெருவில்
[3]அஞ்சொலைப் பேசி காசது [4]பறிக்கும்
இளமுலை மாதரை விரும்பிச்
சஞ்சலப் படுவார் [5]சிற்றின்ப மாய்கை
தமியனு [6]மதுவொரு பொருளாய்
வஞ்சொலைப் பெண்செனப் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (சாய அ)

கருணாம்பிகையே! தெருவிலே வருவோர் போவோராகிய ஆடவர்கள் கண்டு மயங்குமாறு முகத்திலே மஞ்சளைப் பூசி வெளியழகு தோன்ற அலங்காரித்துக் கொள்ளுவதும், அந்த ஆடவர்களிடத்திலே வலிய சென்று இனிக்க இனிக்கப் பேசுவதுமாகிய செயல்களினால் காசினைப் பறித்து வாழும் இயல்புடையோர் விலைமாதர். அவர்களுடைய இளமையும், அழகும் வாய்ந்த நகில்களைக் கண்டு, அவர்கள்மீது மோகம் கொண்டு, சிற்றின்பமாகிய மயக்கத்திலே மூழ்கித் துன்பப் படுவோர் பலர். தேவியே! உன் அருளையே வேண்டி வாழும் அடியேன் அம்-மாதர் மயக்கத்திலே உழன்று இழிசொல்லைப் பெற்று வருந்தாதவாறு காத்து அருள்புரிவாயாக!

மஞ்சள் - அழகுதரும் பொருள்; மினுக்குதல் - பகட்டாக ஒளி தோன்றச் செய்தல்; சினம் - சனம், மக்கள்; கொச்சைச் சொல்லாயிற்று; அஞ்சொல் - அம் + சொல் - இனிய சொல்; சஞ்சலம் - துன்பம்; மாய்கை - மாயை - மோக மயக்கம்; தமியன் - தனித்தவன் - அன் விகுதி

பெற்ற தன்மை ஒருமைச் சொல்; வஞ்சொல் – இழிசொல்; பெண்சென என்ற சொல் தொடர் பற்று நிற்கிறது.

1. மஞ்சலைப் 2. மினிக்கி 3. யஞ்சொலைப்
4. பரிக்கும் 5. சித்திஙப 6. மதுமொரு

***

ஆசை

69. குடமணி வடமும் ஆபர ணாதி
[1]கொண்மலர்ச் சேலைக ளுடுத்தி
நடமிடு மாதர் பலவித மாயிகை
நலங்குதே லிதுவெகு தொல்லை
தடநடு காமர் [2]மருளமெய்ம் மினுக்குஞ்
சண்டிகள் ஆசைபொல் லாது
அடவுடன் விடனீ அருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே (சாய சா)

திருப்புக்கொளி அம்மையே! மார்பில் அணியும் முத்துமாலையும், பிறவி– யாகிய அணிகலன்களையும் அணிந்து அழகுக்கு மேலும் அழகு செய்து, அப்போது பறித்த மலர் போன்று தூய மெல்லிய ஆடையினை உடுத்தி ஆடவர் முன்னிலையில் உலவித் திரியும் மகளிரின் பார்வை, பேச்சு முதலான மாயச் செயல்களுக்கு அடிமையாகி வருந்துவது என்றும் துன்பம் தரத் தக்கதாகும். மேலும் நிலையான உள்ளம் பெறாது, அலையும் உள்ளமுடைய காமுகர்கள் கண்டு மயங்குமாறு உடம்பைப் பகட்டாக அழகுபடுத்திக் காட்டும் தன்மான உணர்வு அற்ற மகளிர்மேல் நாடும் உள்ளத்து ஆசை மிகவும் கொடியது ஆகும். அவ்வாசைகளை எல்லாம் அடியோடு விட்டொழித்து உன் திருவடியைத் துதிக்க எனக்கு அருள்புரிவாயாக.

குடம் – கும்பம் – உவமை ஆகுபெயராய்க் கும்பத்தை யொத்த தனங்களைச் சுட்டியது; அணி – அணிதல்; வடம் – மாலை; ஆபரணம் + ஆதி – ஆபரனாதி – அணிகலன்கள் முதலானவை. கொய்தல் – பறித்தல்;– நலங்குதல் – தூய்மை இழந்து வாடுதல்; தடம்நடு காமர் – உள்ளம் தடுமாறும் காமுகர்; மருளுதல் – மயங்குதல்; சண்டிகள் – தன்மானமற்றவர், பிடிவாதமுள்ளவர்; அடவுடன் – அடியோடு, அறவே; விடனீ – விடல் + நீ; விடல் – விட்டுவிடுதல்.

1. கொய்மலர்ச் 2. மருளமெய்

***

சிற்றின்பம்

70. சிற்றின்ப மெல்லாம் அறிவிலார் செய்கை
திருவருள் நம்புவ ருன்னை
நிற்றின்ப மெல்லாம் [1]பரகதி தருமே
நாயகி பொதுபொக்கி யங்கள்
மற்றின்ப மெல்லாம் லோகத்தின் மாயைகை
வாமியுன் னருளது புரிந்தால்
வற்றின்பம் வேண்டேன் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (எய)

திருப்புக்கொளி என்னும் திருத்தலத்திலே இறைவனின் வலது பாகத்தில் எழுந்தருளியுள்ள அழகு வாய்ந்த கருணாம்பிகையே! இவ்வுலகில் அறிவில்லாதவர்களே உடலின்பமாகிய சிற்றின்பத்தைப் பெரிதென விரும்புவார்கள். அம்மையே, உன் திருவருளையே நம்பி வழிபடுபவர்கள் உனது திருவருளால் என்றும் நிலைத்து நிற்கக் கூடிய பேரின்பத்தைப் பெற்று பரமகதி அடைவார்கள். இவ்வுலகப் பொருட் செல்வங்களும் மற்ற அனைத்து இன்பங்களும் விரைவில் அழியக்கூடிய மாயத் தன்மை கொண்டவையாகும். உமையவளே, நான் நிலையில்லாததும், அழியக்கூடியதுமாகிய இவ்வுலக இன்பம் என்னும் மாயையில் மூழ்காமல் இருக்க நீ அருள் புரியவேண்டுகிறே

சிற்றின்பம் – இவ்வுலக இன்பம்; பரகதி – முக்தி, பொக்கியம் – பொக்கிஷம், செல்வங்கள்; லோகம் – இவ்வுலகம்; வாமி – இடது பாகத்தை ஏற்ற உமை; வற்றின்பம் – அழியும் இன்பம்.

1. பரகெதி.

***

சுந்தரர்

71. சாமிசுந் திரனார் பாடலுக் கிரங்கித்
தானவர் முதலைவாய்ப் பிள்ளை
பூமியந் திரூர் யிருப்பவ ரறியப்
பிள்ளையை [1]அழைத்தகா ரணியே
காமிசுந் தரியே உன்செய லெல்லாங்
காலாந் திரிபுரை யுமையே
வாமியந் திரியே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (எயக)

திருப்புக்கொளியில் வீற்றிருக்கும் வாம சுந்தரியே! முதலையால் விழுங்கப்பட்ட குழந்தையின் வரலாற்றினையறிந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் அக்குழந்தையின் பெற்றோருக்காக உள்ளம் இரங்கி முறையிட்டுப் பாடியபோது அவருடைய பாட்டுக்கு இரங்கி முதலை உண்ட பிள்ளையைச் சுந்தரர் மகிழுமாறு அழைத்துத் தந்த பெருமை உனக்கே உரியதாகும். இந்த அரிய செயலெல்லாம் உன்னையன்றி வேறொருவரால் செய்ய இயலாது.

முதலைவாய்ப்பிள்ளை – முதலையால் விழுங்கப்பட்ட குழந்தை; காரணி – உமை, பார்வதி; வாமியந்திரி – வலப்பாகத்தைப் பெற்ற பார்வதி.

1. அளைத்த.

***

தெட்சண காசி

72. தெண்டிசை கொண்ட தெட்சண காசி
சீருறு கருணையுன் னருளை
அண்டருந் தொண்டர் மாலயன் முனிவர்
அறிந்திடக் [1]கரியகா ரணியே
பண்டரு மறைகள் விண்டிடற் [2]கரிய
[3]பராபரி அறிவினி லடங்கார்
[4]வண்டனைத் தொண்டுசெய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (எயஉ)

முன்காலத்தில் அரிய நூல்களாகிய திருமறைகளால் எடுத்துக் கூறுதற்கும் இயலாதவளாகிய உமையம்மையே, உயர்ந்த அறிவினையுடைய சான்றோர்களாலே துதிக்கப்படுகின்ற தூயவராகிய சிவபெருமானை வழிபட்டுத் தொண்டுபுரியும் அன்பர்கள் நிறைந்துள்ள திருப்புக்கொளிப் பதியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகியே வாரணவாசி என்னும் காசிமா நகரினை ஒத்ததும் தென்னாட்டிலே தோன்றியுள்ளதுமாகிய 'தட்சண காசி' என்று சிறப்பிக்கப்படுகின்ற இந்த அவிநாசித் திருத்தலத்திலே பெருமைபெற்று விளங்கும் தேவியே. உனது அருளை தவத்தில் சிறந்த முனிவர்களும், திருமாலும், பிரமதேவனும், பிறராகிய தேவர்களும், திருத்தொண்டர்களும் அளந்து அறிய மாட்டார்கள்.

தெண்டிசை – தெற்குத்திசை, தென்நாடு; தெட்சண காசி – 'தட்சண காசி' என்று சிறப்பிக்கப்படுகின்ற அவிநாசித் திருத்தலம்; பண்டரு மறைகள் – முன்காலத்தில் தோன்றிய அரிய நூல்களாகிய திருமறைகள்; விண்டிடற்கரிய – விளக்குவதற்கரிய, இயலாதனவாகிய.

1. கறிய காரணி 2. கறிய 3. பராபறி 4. வண்டதைத்

***

பிரமன்

73. ஆரணன் நூறு ஆண்டது தவஞ்செய்
தன்னிய லங்காரங் கள்காண்
காரணன் [1]கோவில் [2]தேரது சேயன்
[3]கையினிற் கங்கணந் திரித்து
வாரணன் வானோர் வாசனை [4]சூழ
நற்றிரு [5]விழாவது நடத்தும்
வாரணன் வாசி புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளிப்பதி நாயகியே! தாழை மலரின் துணையுடன் பொய் கூறிய காக சிவபெருமானின் சாபத்தினைப் பெற்று அச்சாப விமோசனமடைய நூறு ஆ தவம் இருந்து விமோசனம் பெற்ற பெருமைக்குரியது இத்திருத்தலம். இத்தவத்திற் காரணமாகிய சிவபெருமானின் ஆலயம் பிரமனின் தவத்தால் சிறந்த அலங்காரங்க பெற்று விளங்குகிறது. அவ் இறைவனின் கோவில் தேரானது பெரும் விழாவிற்குரிய அமைகிறது. அவ்விழாக் காலத்து வானோர் முதலானவர்கள் சூழ கையில் கங்கண தரித்துப் பெரு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. இத்தகு சிறப்பினை உடையது தென்காசி என்னும் இத்திருத்தலம்.

ஆரணன்-பிரமன்; காரணன்-சிவபெருமான்; கங்கணம்-மஞ்சள் காப்பு, செய முடிக்க உறுதி எடுத்துக் கட்டப்படுவது; வாரணன்-வாரணவாசி இறைவர்.

1. கோவில்த் 2. தொது 3. கையினிற்க் 4. சூள 5. விளாவது

***

கனவு

74. உனதருள் தன்னைத் திருவருள் புரிவாய்
உமையெனு [1]மனோன்மணித் தாயே
எனதுசிந் தையிலே வியாகுல [2]மென்னும்
இருளது நீங்கிடும் [3]படியாய்க்
கனவிலுந் துதிகள் செய்யவும் [4]நினைவு
கதியருள் திரிபுரை யுமையே
வனச்செந் தாள்துதி யருள்செய்புக் கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

புக்கொளிப்பதி நாயகியே! திரிபுரை உமையே! உமை என்ற பெயரோடு விளங்கும் மனோன்மணித் தாயே! என்னுடைய உள்ளமானது பெரும் துன்பத்திலே மூழ்க இருள் சூழ்ந்து கிடக்கின்றது. அவ் இருளானது நீங்கும்படியாக எனக்குத் திருவருள் புரிவாயாக. எனது உள்ளத்திலே தோன்றி இருக்கின்ற துன்பங்களையெல்லாம் நீக்க மேலும் துன்பமாகிய அவ்விருள் என்னைத் தொடராதவாறு அருள் புரிவாயாக. என்னுடைய கனவிலும், உன்னைத் துதி செய்து உள்ளத்தால் நினைத்திருக்கும் பேற்றினை எனக்கு அருள் புரிவாயாக.

மனோன்மணி - பார்வதி, உமை; வியாகுலம் - வருத்தம்; கதியருள் - திருவருள், செம்மையாகிய திருவடி.

1. மனொமணித் 2. மென்றும்
3. படியாயக் 4. நினவு

***

நிட்டைகள்

75. கோசிகன் வாம தேவநற் சனகன்
குருமுனி [1]வதிஃ்டடன்மார் [2]கண்டன்
தேசிகன் [3]சுதர்வி யாக்கிற மாதர்
தெரிதமிா நயமிசா [4]ரணியர்
காசியில திகத லமென வந்து
கருதுவர் நிஃ்டைக ளதனால்
வாசிகன் வலபால் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (எயரு)

தொண்டர்களது தூதனாக விளங்கும் சிவபெருமானது வலது பாகத்திலே வீற்றிருக்கும் கருணை நாயகியே! கோசிக முனிவன், வாமதேவர், சனகமுனி, குருமுனி, வசிஃ்டர், மார்க்கண்டேயர், தேசிகன், வியாக்கிரபாத முனிவர், நயமிசாரணிய வனத்திலே வாழ்ந்த பிற முனிவர்கள் போன்ற அனைவரும் தென்-காசித் திருத்தலமாகிய இத்தலத்திலே காசித்தலமேயென்று மனமுவந்து வந்து தவம் செய்து பேறு பல பெற்றார்கள்.

நயமிசாரணியர் - நயமிசாரணிய வனத்திலே வாழ்ந்த முனிவர்கள்.

1. வதிஃ்ட்டன் 2. மாற்கண்டன்
3. சுதற்வி 4. சாறணியர்.

***

கங்கன்

76. கங்கனும் பிங்கன் காளியுங் கூளி
கசிவது போரவி னாசி
லிங்கன் புக்கொளியு மிறந்திடக் கண்டு
நெறியிதோ காசியில் வாசா
பங்கம் வந்தது வின்போது தனக்குப்
[1]பராகதி கருணையென் றருள்க

வங்கவன் [2]செய்கையெழு புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (எயசா)

திருப்புக்கொளி நாயகியே! வடமதுரைக்கு மன்னனும், கம்சனின் தந்தையுமாகிய கங்கனும், இருடிகளில் சிறந்தவராகிய பிங்களன் என்போரும் உட்பட, காளி, கூளி ஆகியோர் நிறைந்து ஆரவாரம் செய்யும் அவிநாசித் திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள எம்பெருமானாகிய லிங்க வடிவமானது தேவர்கள் புகுந்தொளித்த காலத்து மறையப் பெற்றது. காசி வாசகராகிய விசுவேசரின் பெருமைக்கு அதனால் பங்கம் நேர்ந்தது. அக்காலத்து பராபரனாகிய இறைவனின் கருணை வேண்டி இத்திருத்தலத்திலிருந்து அப்பெருமானது சிறப்புக்கு வழி கோலிய எம்பெருமாட்டியே அருள் புரிவாயாக.

பராகதி - உயர்ந்த நிலை.

1. பராபதி 2. செய்கையெழுப்

***

முப்பத்து முக்கோடி தேவர்

77. முப்பத்து மூன்று [1]கோடி [2]தேவாதி
முனிவீ [3]சுரர் [4]அரிபிர மாதி
தப்பத்து வாழ்ந்த [5]வேதசாஸ் திரங்கள்
தாவறி யாதுநின் பெருமை
யொப்பத்த [6]சோதி உணர்கிலாப் பொருளே
உனைத்துதி செய்யநீ செய்த
வப்பத்து நீங்கேன் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (எயஎ)

திருப்புக்கொளி தேவ நாயகியே! முப்பத்து முக்கோடி தேவர்களும், முனிவீசுரர்களும், திருமால், பிரமன் முதலான தலைவர்களும் ஆகிய அனைவரின் சிறப்பினை எடுத்துக் கூறுகின்ற நான்மறைகளெல்லாம் உனது பெருமையை எடுத்துக்-கூறும் வல்லமை அற்றனவாகும். அவ்வாறு ஒப்பற்று விளங்கும் ஒளி வடிவமான அம்மையே! உள்ளத்தால் உணர்ந்து பார்க்கவும் முடியாத பெருமை வாய்ந்தவளே! உன்னைத் துதிக்க வேண்டும் என்ற பெரு விருப்பத்தினால் நீ எழுந்தருளியுள்ள இத்-திருத்தலத்தை விட்டு நீங்கமாட்டேன்.

தப்பத்த, யொப்பத்த, தப்பற்ற, ஒப்பற்ற போன்ற சொற்கள் எதுகைச் சிறப்பிற்காக தப்பத்து, யொப்பத்து என்பதாக வந்தன; சோதி - ஒளி; நீங்கேன் - நீங்கமாட்டேன்.

1. கொடி 2. தெவாதி 3. சுரரர்
4. அறிபிற 5. வேதசாஃஷத்திரம் 6. சொதி.

***

விமலி

78. கன்றிய மனத்தன் செய்பிளைப் [1]பொறுத்து
    கருணை எவ்வேளையும் புரிந்து
நன்றியை மறக்கேன் உனைத்துதி செய்ய
    நன்பொரு ளறியநீ செய்து
[2]வென்றியை யுரைக்கத் திருவருள் புரிந்தாய்
    விமலியே உனதருள் தன்னால்
வன்திறல் விடுப்பென் புக்கொளிப் பதயில்
    வளர்பெருங் கருணைநா யகியே. (எயஅ)

திருப்புக்கொளித் தேவியே! கடுகடுப்பு நிறைந்த மனத்தையுடையவ-னாகிய அடியேன் செய்த பிழைகளையெல்லாம் பொறுத்து எக்காலமும் அருள்-புரிவாயாக! என்றும் உன்னையே துதி செய்யவும், உயர்ந்ததாகிய பெரும்பேறு அடையும் நற்பொருளை ஆழ்ந்தறியவும் எம்பெருமாட்டியாகிய நீ பெற்ற வெற்றியையெல்லாம் புகழ்ந்து உரைக்கவும் உனது மேலான அருளை எனக்குத் தந்து உதவினாய். உனது நன்றியை என்றும் மறவேன். விமலையாகிய அன்னையே உன்னுடைய திருவருளால் எனது கொடிய தீத்திறங்களையெல்லாம் அடியோடு விட்டொழிப்பேன். இது உறுதி.

கன்றிய மனத்தன் - கடுகடுப்பு நிறைந்த மனத்தை யுடையவன்; வென்றியை - வெற்றியை; வன்திறல் - கொடிய தீத்திறங்கள்.

1. பொருத்துக் 2. வென்றிய.

***

தாமத குணம்

79. ஓநம சிவாய சங்கரி யென்று
    உயர்நின வதனையே யுன்னி
தாமத [1]குணம்போய்ச் சாத்துவ விதத்தில்
    தன்புலன் னதையு மடக்கி
யேம சாமங்களி தியான தோத்திரஞ்செய்
    திறஞ்சிடு மன்பருக் கிரங்கி
வானமா தேவி புக்கொளிப் பதியில்
    வளர்பெருங் கருணைநா யகியே.

திருப்புக்கொளி நாயகியே! உன்னுடைய அடியவர்களாகிய அன்பர்களுக்காக மனம் இரங்கி அருள்புரியும் வானவர் தேவியே! ஓம்நமசிவாய சங்கரி என்ற தொடரை உயர்ந்த உள்ளத்தோடு மனத்திலே நிறுத்தி உன்னை நினைத்து எனக்கு இயல்பாகவுள்ளதும், ஒழுக்க வழுவாகியதும், காமம் முதலாகிய தீச்செயல்களுக்கு இடமளிப்பதுமாகிய தாமத குணத்தை அடியோடு விட்டொழிப்பேன். ஐம்பொறியடக்கல், ஞானம், தவம், பொறை, அருள், மேன்மை, மோனம், வாய்மை ஆகிய எண்குணங்களாகிய சாத்வீகக் குணத்தில் என்னுடைய ஐம்புலன்களையும் அடக்கி வாழ்வேன். இரவென்றும் பகலென்றும் பிற நேரங்கள் என்றும் பாராது எல்லா நேரமும் உன்னையே தியானித்து வணங்கி நிற்கும் உனது அடியவர்களுக்காக உள்ளம் இரங்கி அருள்புரியும் தேவர்கள் தலைவியே! அருள் புரிவாயாக.

யேமசாமங்கள் - இரவு, பகல், பிற நேரங்கள் ஆகிய எல்லா நேரமும்; வானமாதேவி - தேவர்களின் தலைவி.

1. பொய்ச்.

***

ஐம்புலன்கள்

80. [1]தோத்திரத் தொக்குச் சிங்கிவை ஆக்கி
சொல்லிய பொறிகளின் [2]வழியே
காத்திரத் திருக்கும் பிறிதிவு அப்புக்
கன்புன நைந்திடஞ் [3]சேரும்
சூத்திர மறிந்து புலன்களைத் துறந்துஞ்
[4]சோதியே மெய்யுணர் வறிவார்
[5]வாழ்த்துவ தெங்கே புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (அய)

புக்கொளித் திருப்பதியில் வாழும் அம்மையே! உன்னை உள்ளத்தால் நினைத்துத் துதிக்கவும், நாவால் புகழ்ந்து பாடவும், இவ்வுடலிலே அமைந்துள்ள ஐம்பொறிகளின் வழியே நிலனும், நீரும், விண்ணும், காற்றும், தீயுமாகிய ஐம்பெரும் பூதங்கள் அடங்குமாறு செய்யும் வழிவகைகளை அறிந்து ஐம்புலத்தன்மைகளை அடக்கி ஒளிமயமான மெய்யுணர்வினை உடைய சான்றோர் வாழ்த்துவதற்கு இடமாகிய திருப்புக்கொளிப் பதியே உன்னுடைய திருத்தலமாகும்.

சிங்கிவை - நாவால் புகழ்ந்து பாடல்; காத்திரம் - உடல்; கன்புனநைந்திடம் - புனல் ஐந்திடம் என்றிருத்தல் வேண்டும் - நிலனும், நீரும், விண்ணும், காற்றும், தீயும் ஆகிய ஐம்பெரும்பூதங்கள்.

1. தொத்திரத் 2. வளியெ 3. செரும்
4. சொதியெ 5. வாள்த்தவ

***

வறுமை

81. வெறுமை யினாலே [1]பொறியிது மயங்கி
விளவியே [2]அறிவிலா ரிடத்தில்
[3]சிறுமைகள் படாமல் அருளது புரிவாய்
தேட்சண காசியி லுமையே
நறுமை யாகிய சீரிகல் பரமாண்டு
நாயகி உனதரு ளிறங்கி
வறுமைகள் போக அருள்செய் புக்கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே (அயக)

திருப்புக்கொளி அம்மையே! அறியாமையாகிய ஏழ்மையினாலே ஐம்பொறிகளும் மயங்கி அம்மயக்கத்தினாலே அறிவில்லாரிடத்தில் உனது பெருமைகளையெல்லாம் விளவி அதனால் இழிவுப்படாதவாறு எனக்கு அருள்புரிவாயாக! தட்சண காசி என்னும் இத்திருத்தலத்திலே எழுந்தருளியுள்ள உமையே! நன்மை தரத்தக்கதாகிய செயல்கள் மிகுந்துப் பகைமை அழிந்து பெருமை பெற்று விளங்கும் நாயகியே! எனது அறியாமையாகிய வறுமைகள் நீங்க உள்ளம் இரங்கி அருள்புரிவாயாக!

பொறி - ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், காது, மூக்கு போன்றன; சிறுமை - இழிவுத் தன்மை; நறுமை - நன்மை; சீரிகல் - பெருமை பெற்று விளங்கும்.

1. பொரியிது 2. அரிவிலா 3. சிருமைகள்

***

தானதர்மங்கள்

82. கய்ப்பது புவியில் தான தர்மங்கள்
கருதிடா யீகைகள் புரியார்
மெய்ப்பது [1]கருமம் தன்னை லட்சிக்க
வேறொரு பயநிலைப் [2]பிழைத்து
[3]பொய்ப்பிழைப் பதுஉன் மெய்யென யெண்ணிப்
புத்திபே தகமாய்த் திரியும்
வய்ப்பது தவிர்ப்பாய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (அயஉ)

திருப்புக்கொளி கருணை நாயகியே! துன்பங்கள் நிறைந்த இந்நில-வுலகத்தில் தன் தீவினைகள் அகலுதற்குரிய தானதர்மங்களாகிய கொடைச் செயல்களைப் பலன் கருதாது செய்வோர் யாருமில்லை. தாங்கள் மேற்-கொண்ட செயல்களிலே சுய நலமே மிக்கு விளங்கப் பொதுநலமோ பேறு-பெறும் பயனோ இன்றி பொய்யான செயல்களிலே ஈடுபட்டு அதையே மெய்யான செயலென்று எண்ணி பலவகையிலும் தவறு புரிந்து வருகின்றேன். அறிவு திரிந்து இவ்வாறான தவறான செயல்களை நாள்தோறும் செய்து திரியும் எனது குற்றத்தை மன்னித்து மேலும் அவ்வாறான குற்றத்தைச் செய்யாத-வாறு எனக்கு அருள்புரிவாயாக!

கயிப்பது - தீவினைகள்; ஈகை - பலன் கருதாது செய்யும் கொடைச் செயல்கள்; பிழை - தவறு; புத்திபேதகம் - அறிவு திரிந்து செய்கின்ற தவறான செயல்கள்; வயிப்பது - குற்றம்.

1. கற்மம் 2. பிளைத்து 3. பொய்ப்பிளை.

***

முக்குணச் செய்கை

83. சீதரத் தத்தின் உடலது தனிலே
செய்வினை [1]சேர்ந்தது கிரணம்
ஏதகு தத்தில் நாலு லட்சங்கள்
யிதிலொரு [2]நோய்கொள் சடலம்
பேதகு தத்தில் முக்குணச் செய்கை
பிறன்டது நோய்கள் கொள்ளாமல்
வாத பித்தத்தைச் சமன்செய் புக்கொளியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

மக்கள் உள்ளத்திலும் இரத்தத்தோடு கூடிய இவ்வுடலில் ஏற்படுகின்ற துன்பம் நிறைந்த நோய்களை நீக்கவல்ல திருப்புக்கொளித் திருத்தலத்திலே எழுந்தருளி இருக்கின்ற கருணை நாயகியே! சீதமும், இரத்தமும் நிறைந்த இந்த உடலிலே செயற்கை வினைகள் பலவும் சேர்ந்து விளங்குகின்றன. மேலும் துன்பம் தருவனவாகிய இலட்சக்கணக்கான துவாரங்களை உடையதாக விளங்குகிறது. அவற்றின் மூலம் பலவகை நோய்களைப் பெறும் வெற்றுச்சடலமாக விளங்குகிறது. என்னும் மூன்று குணங்களும் அவற்றால் ஆகும் பலவகைச் செயல்களும் உடையதாக அமைந்துள்ளது. அக்குணங்களுக்கு அடிமைப்பட்டு நோய்களைப் பெறாதவாறு அருள் புரிவாயாக!

சீதரத்தம் - இரத்தத்தோடு கூடிய உடல்; முக்குணம் - இராசதம், சாத்வீகம், தாமதம் என்னும் மூன்று குணங்கள்; பிறண்டது - கொண்டது, அடைந்தது, வருந்துவது.

1. செந்தது 2. நொய்கொள்.

***

நினையாதார்

84. அந்தணர் பெரியோர் நல்ல வருணது
அருளடி யார்தமக் குதவார்
வந்தனை நினையார் உயர்கதை [1]கேளார்
உனதருள் மனமதி லுணரார்
யிந்த நல்லறிவு [2]சிந்தனை யில்லார்
[3]யிருந்தொரு பயனிலை மானிடராயி
வந்தெனப் புவியில் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே.

புக்கொளிப்பதி கருணை நாயகியே! இந்நில உலகத்திலே சான்றோர்களாக விளங்குகின்ற நல்லறமுடைய அந்தணர், பெரியோர், நற்குண நற்செய்கைகளையுடைய சான்றோர் இறையடியார்களாகிய தொண்டர்கள் போன்ற யாருக்கும் உதவாத லோபிகளே நிறைந்துள்ளனர். அவர்கள் உன்னை வணங்கும் எண்ணத்தைச் சிறிதும் கொள்ளாதவர்கள். உயர்ந்த பலனைத் தருகின்ற இறைவனது பெருமை நிறைந்த கதைகளைச் சிறிதும் கேட்டு அறியாதவர்கள். உன்னுடைய திருவருள் செயல்களை உள்ளத்தால் எண்ணிப் பார்க்கும் தகுதியற்றவர்கள். இப்படிப்பட்ட நல்ல அறிவுச் சிந்தனை என்பது சிறிதுமில்லாத மக்கள் இந்நிலவுலகத்திலே இருந்தும் பயனேதும் இல்லை. அத்தன்மை அடையாதவாறு நற்தொண்டு புரியும் மானிடனாக அடியேனை ஆக்கி அருள்புரிவாயாக!

அருளடியார் - இறையடியாராகிய தொண்டர்கள்; வந்தனை - வணக்கம்; வந்தெனப்புவி - இவ்வுலகம்.

1. கௌார் 2. சிந்தினை 3. யிருந்தெரு

***

இலக்கணம்

85. தொகைவகை யாகிய யிலக்கணம் யிலங்கிய
சொற்பொரு ளாய்பலங் காரம்

பலதொகை யான சீர்தளை யசைகள்
பருபத [1]நெடிலொடு குறிகள்
இகல்வகை [2]வார்நேர் [3]நிரைமுவின [4]எண்கண
மாகிய மங்கலச் சொல்கள்
வகைதொகை அருள்செய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (அயரு)

திருப்புக்கொளிப் பதியில் எழுந்தருளியுள்ள கருணை நாயகியே! இனிய மொழியாகிய தமிழ் மொழியிலுள்ள இலக்கணங்களின் தொகை, வகை, விரி என்னும் தன்மைகளை அறிய வேண்டும். இலக்கண இலக்கியங்களில் அமையும் சொற்களையும், அவற்றின் உயர்ந்த பொருட்களையும் அறிதல் வேண்டும். பாக்கள், பாவகைகள், பா இனங்கள் என்பன போன்றவற்றில் அடங்கும். எழுத்து, அசை, சீர், தளை, தொடை முதலிய உறுப்புக்களை ஆழ்ந்தறிதல் வேண்டும். எழுத்து வடிவமும், ஒலி வடிவமும் உடைய சொற்கள் நெறில் குறில் என்னும் குறியீடுகள், நேர்நிரை என்னும் ஒலித்தன்மைகள், மெய்யெண் மூவினங்கள் எண்களின் தொகுதிகள், நூலைத் தொடங்குதற்குரிய மங்கலச் சொற்கள், நூலை தொகுத்தும் வகுத்தும் கூறுகின்ற உயர்ந்த தன்மைகள் ஆகியவற்றை எங்களுக்கு அறிவித்து அருள்புரிவாயாக!

தொகைவகை - தமிழ்மொழி இலக்கணங்கள்; அலங்காரம் - அணி; வகைதொகை - நூலைத் தொகுத்தும், வகுத்தும் கூறுகின்ற தன்மை.

1. நொடிலொடு 2. நெர் 3. நிறை 4. எண்ங்கண.

***

புந்தி

86. புந்திக் குளாசை வாழ்கவும் பிளைப்புப்
பெருகவும் வெண்ணிதி நினைவு
உந்திக்குள் செனித்த அயன்விதித் திடவோ
உளமதில் நினவினின் முடியா
சிந்திக்கும் [1]போத கதையிது பிளைப்புத்
[2]திருவிழாச் [3]செயலது உனையே
வந்திக்க அருள்செய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே. (அயஅ)

திருப்புக்கொளி நாயகியே! இம்மனிதப் பிறவியைத் தோற்றுவித்த பிரமனானவன் மனிதரின் அறிவில் ஆசை நிறைந்து விளங்குமாறும் வாழ்க்கை உயருமாறும் உயர்ந்த நல்வழியிலே தோன்றுகின்ற செல்வமானது பெருகுமாறும்

திருமாலின் உந்திக் கமலத்திலே தோன்றியவனுமாகிய பிரமதேவன் அமைத்து விட்டான். உள்ளத்தைத் தூய்மையாக்கி உயர்ந்த நிலைவோடு சிந்தித்துப்-பார்க்கும்போது இச்செயல்களெல்லாம் வெற்று ஆரவாரச் செயல்களாகவே தோன்றுகின்றன. இச்செயல்களை விடுத்து உன்னையே நினைத்துத் துதிக்க அருள்புரிவாயாக!

புந்தி – அறிவு, புத்தி; வெண்ணிதி – நல்லெண்ணம்; உந்தி – உந்திக் கமலம்; வந்திக்க – துதிக்க.

1. பொது 2. திருவினாக் 3. சியலது.

***

இரவு பகல்

87. [1]இரவொடு பகலும் உனைத்துதி செய்ய
இல்லிநுக் [2]கழகுசந் ததிகள்
திறமது வாகி உத்தய முயற்சிசெய்
[3]தொழில் புத்தி வித்தைகளும்
[4]இரவலற் பெரியோர்க் கருள்செல்வ நல்கி
இடம்பொருள் [4]யேவல் மூன்றதவும்
வறமது புரிவாய் புக்கொளிப் பதியில்
வளர்பெருங் கருணைநா யகியே (அயள)

திருப்புக்கொளி நாயகியே! இரவு பகல் ஆகிய எந்த நேரமும் உன்னையே துதித்து வாழ்க்கையை நடத்த அருள்புரிவாயாக! இல்லத்திற்கு அழகு தருவதும் திறமை நிறைந்ததுமாகிய மக்கள் பேற்றினை உயர்ந்ததாக அமைய அருள்புரிவாயாக! செயல்களிலே முயற்சியும், செய்தொழில்களிலே உயர்வும் அடைய அருள் புரிவாயாக! கல்வியும் அறிவும் இரவலர்க்கு ஈதலும், சான்றோர்களுக்கு அருளலும் ஆகிய நற்பணிகளிலே ஈடுபட அருள்புரிவாயாக! அந்நற்பணிகளுக்குரிய செல்வத்தைக் கொடுத்து இடம், பொருள், ஏவல் என்ற மூன்றையும் அறிந்து நடக்க அருள்புரிவாயாக!

இல்லிநுக்கழகு – இல்லத்திற்கு அழகு; சந்ததி – மக்கட்பேறு; உத்தயம் – செயல்; வறமது – வரமது; வரமது என்பது எதுகைச் சிறப்புக் கருதி வறமது என்று வந்தது.

1. யிரவொடு 2. களகு 3. தொளில்ப்
4. இறவலற் 5. யெவல்.

***

துணைநூற் பட்டியல்

1. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார், ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், 1980.

2. அவிநாசிலிங்கேசுவரர் திருக்குட நன்னீராட்டு விழா மலர், திருப்பணிக்குழு, அவிநாசி, 1980.

3. சித்தர் பாடல்கள், த. கோவேந்தன் (பதி.), பூம்புகார் பிரசுரம், சென்னை-13, 1976.

4. சிற்றிலக்கியத் திறனாய்வு, ந.வீ.செயராமன், இலக்கியப் பதிப்பகம், சென்னை-18, 1980.

5. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம், கி.வா. ஜகந்நாதன், சென்னை,

6. தண்டியலங்காரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1978.

7. தமிழ்மொழியகராதி, நா. கதிரைவேற்பிள்ளை, எஸ்.டி.ஏ., புதுதில்லி-110 016, 1980.

8. திராவிடமொழி இலக்கியங்கள், ச.வே. சுப்பிரமணியன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1983.

9. திருக்குறள், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1983.

10. திருமலை நான்மணிமாலை, இராம. சண்முகம், வைரபுரம், 1981.

11. மேற்கோள் விளக்கக்கதை அகர வரிசைகள், கருப்பக்கிளார் சு.அ. இராமசாமிப்புலவர், சைவநித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1963.

***

சொல்லடைவு

அகிலகாரணி - 54, 15

அகிலம் - 15

அகோரி - 27

அசுரர் - 6

அஞ்சுலட்சணம் - 62

அஞ்சொல் - 68

அஞ்ஞூறு - 49

அடவு - 69

அண்டர் - 43, 72

அண்டரண்டம் - 54

அந்தணன் - 14

அந்தரி - 27

அந்தி - 40

அமுதுண்டு - 11

அம்பிகை - 30

அயன் செயி - 5

அயியறிவு - 41

அரி - 2, 77

அரித்துவசன் - 8

அரியகாரணி - 72

அரியயன் - 33

அருணைமா நகர் - 24

அருமகப்பிறவு - 7

அருமுனி - 43

அருளடியார் - 84

அருளறியார் - 62

அலை - 4

அலைமதி - 65

அழகு சந்ததிகள் - 87

அழகணி சித்தர் - 51

அற்புதம் - 65

அறம் - 33

அறுமுகன் - 2

ஆங்காரி - 27

ஆசனக்கால் - 53

ஆண்மை - 34

ஆதியம்பிகை - 18

ஆயிரம் - 1

ஆரணன் - 73

ஆரணி - 28

ஆராதனை - 52

ஆரூர் - 13

ஆலய அரன் - 53

இகல் பரமானம் - 20

இகல் வகை - 85

இசை - 48

இடக்காடர் - 51

இந்திரியம் - 60

இமகிரிக் கடவுள் - 24

இயல்பரம் - 40

இராமேசுரம் - 24

இராவணன் - 7

இருநிலம் - 6

இலக்கணம் - 85

இலங்கை - 7

இளமுலை மாதர் - 68

இறைஞ்சிடும் - 41

ஈசன் - 5

ஈசுவரி - 44

உடல் - 37

உடலுயிர் - 36

உண்ணாமுலைச்செல்வி - 25

உத்தமன் - 4

உத்திரன் - 29

உப்பு - 37

உமை - 26,47

உய்தவம் - 9

உயர்கதை - 41

உயர்சிவன் - 44

உயரட்ட சித்திகள் - 51

உயரண்ட புவனங்கள் - 16

உயரண்டம் - 16

உயிர்த்தோற்றம் - 16

உரு - 1

உருவேடன் - 9

உரைக்காவலர் - 63

உரைநிரை குளரி - 38

எந்தை - 7

எமன் - 58

எழுத்து - 1

ஐயிராவதம் - 43

ஒருவழி - 40

ஒளிவன நகர் - 9

ஒன்பது வாசல் - 37

ஓங்காரி - 27

ஓம்நமசிவாய - 79

ஓலை - 17

கங்கணம் - 73

கங்கன் - 76

கங்காதன் - 13

கங்கை - 1,49

கண்ணிடந்து - 57

கதிர்முடி - 5

கதிரவர் - 2

கபாலி - 26

கயப்பு - 82

கயிலாயம் - 8

கயிலையங்கிரி - 24

கரதல கபாலி - 30

கரா - 30

கரிமுகன் - 2

கரியலக்களிறு - 6

கருடவர் - 5

கலசம் - 14

கலியரன் - 56

கலியுகம் - 13

கலைமதி - 65

கவிதை - 88

கற்பம் - 82

கன்றிய மனத்தன் - 78

கன்னி - 64

காசி - 1,75

காசிமாநதி - 43

காத்திரம் - 42

காந்தாரி - 27

காமசந்திரர் - 56

காமாட்சி - 28

காமி சுந்தரி - 71

காரணன் - 73

காரணி - 71

காவலன் - 63

காளகண்டன் - 17

காளதன் - 56

காளி - 76

கானகம் - 6

கிரணம் - 83

கிரி - 6

குவலையம் - 62

குடமணி - 69

கூபவெண்கரி - 3

கூளி - 76

கெவுடதேசம் - 10

கெருடன் - 10

கொங்கணர் - 51

கொங்கை - 1,17

கோசிகன் - 75

கோபுர வாசல் - 35

கோமுட்டி - 11

சகோதரர் - 34

சங்கக் கன்னி - 10

சங்கத்துதிகள் - 50

சங்கரி - 30,47

சங்குமலிங்கம் - 50

சண்டிகன் - 69

சட்டர் - 51

சதாசிவன் - 1,49

சதுமுகப்புரம் - 12

சவை - 12

சராசரபுவனம் - 16

சலந்தரம் - 56

சற்குணம் - 34

சருவேஉடதெட்சணம் - 56

சாத்திரம் - 45

சாம்பவி - 27

சாமிசுந்திரர் - 71

சாரணியர் - 75

சிங்கருபம் - 55
சிதம்பரம் - 17
சிந்தனை - 88
சிறுமை - 81
சிவகாமி - 25
சிவன் - 9
சிற்றின்பம் - 70
சின்மலர் - 2
சீதரத்தம் - 83
சீயேன் - 21
சீருறு - 1,72
சுந்தரர் - 13
சுந்தரி - 26
சுந்தரன் - 57
சூத்திரம் - 80
சூலி - 26
செப்பம் - 37
செபித்து - 1
செய்தவம் - 31
செனித்திடும் - 59,9
சேர்வலி மாதர் - 67
தகனி - 53
தசரதராமர் - 55
தண்டமிழ் - 59
தடநடுகாமர் - 69
தம்யல் - 25
தயாபரி - 63
தயேசுவரி - 47
தரணி - 88
தருமன் - 12
தரைக்காவலர் - 63
தற்பரானந்தி - 54
தன்னியலங்காரம் - 73
தாடகை - 7
தாமரை - 50
தாள்தடம் - 18
திராவிடதேசம் - 8
திரிசூலி - 28
திரிபுரை உச்சி - 22
திரிபுரை - 26
தில்லைவாழ்காசி - 24
தீர்த்தம் - 6,43
துர்கை - 26
தெட்சணகாசி - 72
தெப்பம் - 50
தென்காசி - 2
தேசிகன் - 75
தேவர் - 3
தேவர்கோன் - 6
தேவி - 18
தோத்திரம் - 42
தோல்பொம்மை - 44
தொழில் - 87
நங்குணர் - 51

நடமிடுமாதர் - 69
நண்ணவும் - 37
நந்தி - 2
நரைதிரை - 38
நலங்குதல் - 69
நளினமாந்தேவர் - 4
நற்றலம் - 14
நறுமை - 81
நாககங்கனி - 17,28
நாகலோகம் - 8
நாரணி - 28
நாரதன் - 6
நாயகி - 1,2,88
நிட்டைகள் - 75
நிமலி - 27
நிற்களரூபி - 20
நிற்களானந்தி - 26
நிற்புவனம் - 61
நிற்மயதேவி - 26
நிற்றின்பம் - 70
நீர்த்தகலியாணி - 27
நீலி - 26
நீளபாதிரை - 4
நெறியேன் - 37
நேத்திரம் - 42
பங்கம் - 76
பண்டு - 72
பண்டை வெடித்திடா நகர் - 43
பதி - 1,2
பந்துநற்சனம் - 34
பயோதரவல்லி - 28
பரகதி - 70
பரசுராமன் - 55
பரமகலியாணி - 30
பரவெளி - 61
பராகதி - 76
பராபரி - 72
பராபரவல்லி - 54
பராபர வனிதை - 1
பராபரம் - 1
பருபத நெடில் - 85
பரை - 20
பல்தேவன் - 55
பாதபங்கயம் - 17
பிரணவம் - 4
பிரமசாரி - 45
புக்கொளி - 1
புந்தி - 86
புரைக்காடரை - 63
புல்லர் - 33
பூபன் - 9
புலனயம் - 22
பூமகள் - 55
பூமியந்திரர் - 71

மஞ்சள் - 68

மதுரை - 25

மரகதவல்லி - 25

மயேசுரன் - 47,48

மற்றின்பம் - 70

மறவர் - 4

மறைகள் - 45.72

மறையவன் - 10

மனோன்மணித்தாய் - 74

மாயம் - 35

மால் - 47

மார்கண்டன் - 58

மிருகண்டன் - 58

முண்டகாசனி - 43

முதலை - 2

முருகமாநகர் - 11

முனியீசுரர் - 77

மூடசண்டாளன் - 39

மூவர் - 11

மெய்ப்பு - 37

மைந்தர் - 12

மொழியறிவிசேசம் - 14

மோசனி - 21

வகைதொகை - 85

வங்கணர் - 51

வங்கவன் - 76

வசை - 60

வஞ்சொல் - 68

வடமணியூற தி - 32

வடம் - 17

வண்டர் - 43,73

வண்டிரை - 59

வண்ணம் - 64

வதை - 6

வந்தனை - 31,88,40

வப்பத்து - 77

வயப்பு - 82

வயிரவி - 24

வயேசுவரி - 47

வருகதி - 11,32

வரை - 63

வரைதுரைமகள் - 38

வல்லமை - 33

வலப்புறம் - 1

வலைமதி - 65

வவியனி - 39

வற்றின்பம் - 70

வரம் - 87

வறுமை - 81

வன்பது - 41

வன்றிறல் - 78

வனச்செந்தாள் துதி - 74

வனிதை - 1

வாக்குடைச்செல்வி - 48

வாசம் - 22
வாசல் - 35
வாசனை - 73
வாசி - 1
வாசிகன் - 75
வாசுதேவன் - 55
வாட்டங்கண்ணி - 18
வாணி - 48,26
வாதபித்தம் - 83
வாமதேவன்- 75
வாமனன் - 55
வாமி - 70
வாமியந்திரி - 71
வாரணவாசி - 3
வாலை - 23
வாலைசுந்தரி - 22
வானமாதேவி - 79
வாணிலட்சுமி - 47
விசாலாச்சி - 25
விண்டல் - 43
விந்தைக்கிரி - 9
விமலி - 17,78
வியன்பணி - 8
வியாகுலம் - 74
விராகன் - 49
விழி - 38
வேதசாத்திரம் - 19,77
வேண்மணம் - 8.

***